*சிர்ருள் இன்ஸான் இரண்டாம் பகுதி தொடர்கிறது...*

## அத்தியாயம் 7

### வஸீலா

அர்ஷை சுமப்பவர்கள் பற்றிய தெய்வத் திருவசனங்களை கீழே குறிப்பிடுகிறோம்.

الَّذِينَ يَحْمِلُونَ الْعَرْشَ وَمَنْ حَوْلَهُ يُسَبِّحُونَ بِحَمْدِ رَبِّهِمْ وَيُؤْمِنُونَ بِهِ وَيَسْتَغْفِرُونَ لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَعِلْمًا فَاغْفِرْ لِلَّذِينَ تَابُوا وَاتَّبَعُوا سَبِيلَكَ وَقِهِمْ عَذَابَ الْجَحِيمِ

குர்ஆன் 40:7,8,9 : "அர்ஷை சுமந்து கொண்டிருப்பவர்களும், அதைச் சுற்றியுள்ளவர்களும், தங்கள் இறைவனின் புகழைக் கொண்டு அவனைத் தஸ்பீஹ் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவன் மேல் ஈமான் கொண்டவர்களாக மற்ற ஈமான் கொண்டவர்களுக்காக மன்னிப்புக் கோருகின்றனர். "எங்கள் இறைவனே! நீ ரஹ்மத்தாலும், ஞானத்தாலும், எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து இருக்கிறாய். எனவே பாவமீட்சி கோரி உன் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு நீ மன்னிப்பு அளிப்பாயாக. இன்னும் அவர்களை நரக வேதனையிலிருந்து காத்தருள்வாயாக!

رَبَّنَا وَأَدْخِلْهُمْ جَنَّاتِ عَدْنٍ الَّتِي وَعَدتَّهُمْ وَمَن صَلَحَ مِنْ آبَائِهِمْ وَأَزْوَاجِهِمْ وَذُرِّيَّاتِهِمْ ۚ إِنَّكَ أَنتَ الْعَزِيزُ الْحَكِيمُ

"எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு வாக்களித்திருக்கும், நிலையான சுவர்க்கத்தில் அவர்களையும், அவர்கள் மூதாதையர்களிலும், அவர்கள் மனைவியர்களிலும், அவர்கள் சந்ததியர்களிலும் நன்மை செய்தோரைப் பிரவேசிக்கச் செய்வாயாக. நிச்சயமாக நீதான் (யாவரையும்) மிகைத்தவன், ஞானமிக்கவன்."

وَقِهِمُ السَّيِّئَاتِ ۚ وَمَن تَقِ السَّيِّئَاتِ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمْتَهُ ۚ وَذَٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ

"இன்னும் அவர்களைத் தீமைகளிலிருந்து காப்பாயாக! அந்நாளில் நீ யாரை தீமைகளிலிருந்து காத்துக் கொள்கிறாயோ, அவர்களுக்கு நீ, நிச்சயமாக அருள் புரிந்து விட்டாய். அதுவே மகத்தான வெற்றியாகும்."

பெருமானாரின் சஹாபாக்கள், "அல்லாஹ் வானத்திலிருக்கிறானா? பூமியிலிருக்கிறானா?" என்று கேட்டதற்கு, "அல்லாஹ் மு.்.மினானவர்களுடைய கல்பில் இருக்கிறான்" என்று நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் சொன்னார்கள். மூமினானவர்களின் கல்பே அல்லாஹ்வுடைய அர்ஷாக இருக்கிறது.

உயிரோடு இருக்கும் மு்ஃமின், உயிரோடிருக்கும் மற்ற மு்ஃமினுக்கோ அல்லது இறந்து போன மு்ஃமினுக்கோ பாவமன்னிப்புக் கேட்டு இறைவனிடம் பிரார்த்திக்கலாம். ஆனால் இறந்துபோன ஒரு மூமினிடம், உயிரோடு இருப்பவர் தனது பாவத்ரைத இறைவன் மன்னிக்க இறந்தவர் மூலம் வேண்டுதல் செய்யக் கூடாது. இறந்தவர் நபியாயிருந்தாலும் சரியே. வலியாயிருந்தாலும் சரியே என்று முஸ்லிம்களில் ஒரு சாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைந்தபின் அவர்கள் மூலம் வஸீலா தேடலாமா என்பதை முதலில் கவனிப்போம்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு ஜோதியினால் ஆனவர்கள். 1. உள்ரங்க ஜோதி 2. வெளிரங்க ஜோதி.

உள்ரங்க ஜோதியை பொறுத்தவரை பெருமானார் என்றும் ஹயாத்துப் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். வெளிரங்க ஜோதியைப் பொருத்தவரை அவர்கள் மறைந்து விட்டார்கள்.

பெருமானார் அவர்களின் உள்ரங்க ஜோதியின் விபரமாவது:-

"நான் அவியக்த புதையலாக இருந்தேன். என்னை அறிய நாடினேன். சிருஷ்டிகளைப் படைத்தேன்" என்று ஹதீது குத்ஸியில் இறைவன் அறிவித்துள்ளபடி படைப்புகளில் முதன்மையாக நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சம்பூரண அறிவை அல்லாஹ் முதலில் படைத்தான். அந்த சம்பூரண அறிவினின்றுமே சகல படைப்புகளையும் அல்லாஹ் வெளிப்படுத்தினான்.

"அனா மின்னூரிலில்லாஹி வ குல்லி ஷெய்யின் மின்னூரி" – "நான் அல்லாஹ்வின் நூரினின்றுமுள்ளவன். வஸ்து அடங்கலும் என் நூரினின்றுமுள்ளது" என்ற நாயக வாக்கியம் இதனை உறுதிப்படுத்துவதாயிருக்கிறது.

அல்லாஹ்வினால் முதலில் படைக்கப்பட்ட சம்பூரண ஞானத்தை வஹ்தத் முஹம்மதிய்யா என்றும், நூரே முஹம்மதிய்யா என்றும், ஹகீகத் முஹம்மதிய்யா என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த வஹ்தத் முஹம்மதிய்யா அல்லாஹ் உடைய உள்ளமையில் தரிபட்டிருந்த சம்பூரண அறிவானபடியால் இது பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. சத்து, சித்து ஆனந்தமாக என்றும் நிலைபெற்றதாயிருக்கிறது.

இந்நூர் சகல சிருஷ்டிகளுக்கும் கருவாகவும், குருவாகவும் ஹக் என்ற மெய்ப்பொருளையும், கல்க் என்ற தோற்றப் பொருட்களையும் பிரதிபலிக்கும் ரஸூல் என்னும் கண்ணாகவும் இருக்கிறது. நம் ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை மனிதப் படைப்பில் முதல்வராக அல்லாஹ் முதலில் படைத்து அவர்களில் இந்நூரை தரிபடுத்தி மலக்குகள் அனைவரையும் அந்நூருக்கு சாஷ்டாங்கம் செய்யச் சொல்லி அந்நூரை கண்ணியப்படுத்தினான்.

إِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي خَالِقٌ بَشَرًا مِّن طِينٍ. فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ. فَسَجَدَ الْمَلَائِكَةُ كُلُّهُمْ أَجْمَعُونَ . إِلَّا إِبْلِيسَ اسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ

குர்ஆன் 38:71 முதல் 74 வரை: "(நபியே) நினைவு கூறுவீராக! நிச்சயமாக நான் களி மண்ணிலிருந்து மனிதனைப் படைக்க இருக்கிறேன் என்று உம்முடைய ரப்பு கூறிய வேளையில் "நான் அவரைச் செவ்வைப் படுத்த எனது ஆவியிலிருந்து அவருக்குள் ஊதிய போது, அவருக்கு நீங்கள் விழுந்து சுஜூது செய்யுங்கள் (எனக் கூறியதும்) அதுசமயம் மலக்குகள் யாவரும் சுஜூது செய்தார்கள், இபுலீசைத் தவிர. அவன் பெருமையடித்தவனாக (நம் கட்டளையை) நிராகரிக்கும் காபிர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டான்."

அல்லாஹ் ரூஹ் என்ற மலக்கை தன்னுடைய நூரினின்றும் படைத்தான். இதனை ஹகீகத் முஹம்மதிய்யா என்று சொல்லப்படுகிறது. இந்த மலக்கினின்றுமே அல்லாஹ் மலக்குகளையும், ஆலத்தையும் படைத்தான்.

அல்லாஹ் தன் தாத்தைக் கொண்டே இவர்களில் வெளியானான். மற்ற படைப்புகளில் தனது ஸிபாத்தைக் கொண்டு வெளியாகிறான். இவர்களே சகல ஆலத்திற்கும் குதுப் ஆவார்.

இவர்களை அல்லாஹ்வுடைய கல்குகளில் இன்ஸான் காமிலைத் தவிர யாரும் அறியார்கள். ஒரு ஒலி இவர்களை அறிந்தால் எல்லா வஸ்துக்களையும் அறிந்து கொள்வார். அப்படி அறிந்து கொண்டால் "உஜூ"தென்ற திரிகை அவரில் சுற்றி ஆடுகிற குதுபு ஆகிவிடுவார்.

ஆயினும் முதலில் படைக்கப்பட்ட மலக்கிற்கு - ஹகீகத் முஹம்மதிய்யாவிற்கு இவர் பிரதிநிதியாக இருப்பார். ஏனென்றால் வாஸ்தவத்தில் குத்பென்பவர் அந்த மலக்காயிருப்பார்.

மற்றவர்களுக்கு குத்பானிய்யத்து இரவலான ஹுக்மைக் கொண்டாயிருக்கும். இந்த மலக்கை ஆதமுக்கு சுஜூது செய்ய அல்லாஹ் ஏவவில்லை. ஏனென்றால் ஆதமில் ஊதப்பட்ட ரூஹு அவருடைய அம்ஸமாக இருக்கிறது.

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரைத் தோன்றிய நபிமார்களில் அந்நூரை அல்லாஹ் நுபுவத்தாகத் தரிபடுத்தி வைத்தான்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்தோன்றிய ஒலிமார்களில் அந்நூரை அல்லாஹ் விலாயத்தாகத் தரிபடுத்தி வைத்தான்.

எனவே இவ்வுலகில் மக்களை நேர்வழிப்படுத்த வந்த அனைத்து நபிமார்களம், ஒலிமார்களும் வகை வடிவத்தில் வெளவேறு நாமம் தரித்து தோன்றினாலும், தொகை வடிவத்தில் அவர்கள் யாவரும் வஹ்தத் முஹம்மதிய்யாகவே இருக்கிறார்கள்.

நபிமார்களிலும், ஒலிமார்களிலும் வஹ்தத் முஹம்மதிய்யா வெளிப்படுவது "தனாசுக்" என்ற அவதார முறையிலன்று. "புரூஜ்" என்னும் பிரதிபிம்பித்தல் வகையில்தான். 12 மாதங்களின் பெயரைத் தாங்கி வரும் சந்திரன் ஒன்றே. இது பெருமானாரின் உள்ரங்க ஜோதியைப் பற்றிய விளக்கமாகும்.

"குல் இன்னமா அன பஷரும் மித்னுகும்யுஹா இலய்யா" "நான் உங்களைப் போன்ற மனிதனாயினும் என்னளவில் வஹி அறிவிக்கப்படுகிறது" என்ற பெருமானாரின் ஹதீது அவர்களின் வெளிரங்க ஜோதியைக் குறிக்கும். பெருமானாரின் வெளிரங்க வாழ்வின் விபரமாவது:-

மக்கமாநகரில் அப்துல்லாஹ்விற்கும், ஆமினாவிற்கும் மகனாய்ப் பிறந்தவர்கள். இவ்வுலகில் தோன்றும்முன்பே தந்தை அப்துல்லாஹ்வை இழந்தார்கள். ஆறு வயதிற்குள் தாயார் ஆமினாவை இழந்தார்கள்.

வளர்ப்புத் தாய் ஹலீமாவினால் பாலூட்டி வளர்க்கப்பட்டார்கள். பாட்டனார் அப்துல் முத்தலிபின் போஷகராய் வளர்ந்தார்கள். இளம் வயதில் ஆடு மேய்த்து வந்தார்கள். அன்னை கதீஜாவை மணம் முடித்து வர்த்தகம் புரிந்து வந்தார்கள்.

ஹிராக் குகைக்குத் தனியே சென்று இறைவனை வணங்கி வந்தார்கள். தனது 40வது வயதில் அல்லாஹ்விடமிருந்து வஹியைப் பெற்றார்கள். அதனை மக்களுக்கு அறிவிக்கும்போது மக்களிடம் சொல்லடிப் பட்டார்கள். கல்லடிப் பட்டார்கள்.

இறுதியில் அல்லாஹ்வின் அருளால் தம் இலட்சியத்தில் வெற்றி கண்டார்கள். வெற்றியின் சிகரத்தில் வீற்றிருக்கும் போது வேதனைத் தந்த அனைவரையும் மன்னித்தார்கள்.

அல்லாஹ்வுடைய ரசூலாய் மக்காவிலும், மதீனாவிலும் வாழ்ந்து மதீனாவில் உயிர் நீத்தார்கள். வெளிரங்க ஜோதியைப் பொறுத்தவரை பெருமானார் அல்லாஹ்வின் வஹியைப் பெற்று மனிதராக வாழ்ந்து மற்ற மனிதர்களைப் போல மரணமடைந்தார்கள் என்பதைக் கீழ்க்கண்ட தெய்வத் திருவசனங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றது.

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ

குர்ஆன் 39:30: "நிச்சயமாக நீரும் மரிப்பவர். நிச்சயமாக அவர்களும் மரிக்கின்றவர்களே."

وَمَا جَعَلْنَا لِبَشَرٍ مِّن قَبْلِكَ الْخُلْدَ ۖ أَفَإِن مِّتَّ فَهُمُ الْخَالِدُونَ

21:34 : " நபியே! உமக்கு முன்னர் எந்த மனிதனுக்கும் அவன் என்றென்றும் இருக்கக் கூடிய நித்திய வாழ்வை நாம் கொடுக்கவில்லை. ஆகவே, நீர் மரித்தால் அவர்கள் மட்டும் என்றென்றும் வாழப்போகிறார்களா?"

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِن قَبْلِهِ الرُّسُلُ ۚ أَفَإِن مَّاتَ أَوْ قُتِلَ انقَلَبْتُمْ عَلَىٰ أَعْقَابِكُمْ ۚ وَمَن يَنقَلِبْ عَلَىٰ عَقِبَيْهِ فَلَن يَضُرَّ اللَّهَ شَيْئًا ۗ وَسَيَجْزِي اللَّهُ الشَّاكِرِينَ

3:144 : "முஹம்மது (இறைவனின்) தூதரேயன்றி (வேறு) அல்லர். அவர்களுக்கு முன்னரும் (அல்லாஹ்வின்) தூதர்கள் பலர் (காலம்) சென்று விட்டார்கள். அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால், நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா? அப்படி எவரேனும் தம் குதிகால் மேல் (புறங்காட்டி) திரும்பி விடுவாரேயானால்இ அவர் அல்லாஹ்வுக்கு எவ்வித தீங்கும் செய்து விட முடியாது. அன்றியும் அல்லாஹ் நன்றியுடையோருக்கு அதி சீக்கிரத்தில் நற்கூலி வழங்குவான்."

பெருமானாரின் இரு ஜோதிகளின் தன்மைகளை மேலே குறிப்பிட்டுள்ளோம். இவ்விளக்கத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் உண்மை விளக்கம் என்னவென்றால், "வஇன்னஹு பிள்ளாஹிரி மினல் பஷரி வபில் ஹகீகத்தி ஹக்குன் முபீன்" திட்டமாக அவர்கள் வெளிப்படையில் மனிதர்களில் நின்றுமுள்ளவர்கள்.

உள்ரங்கத்தில் அவர்கள் (சம்பூரண அறிவாக, ஹக்கின் பிரதிபலிப்பாக) ஹக்கின் அகமியமாக இருக்கிறார்கள்.

இதனைக் கீழ்க்கண்ட தெய்வத் திருவசனங்கள் நமக்கு சைக்கினை செய்யக்கூடியதாகயிருக்கிறது.

وَأَنذِرْ بِهِ الَّذِينَ يَخَافُونَ أَن يُحْشَرُوا إِلَىٰ رَبِّهِمْ ۙ لَيْسَ لَهُم مِّن دُونِهِ وَلِيٌّ وَلَا شَفِيعٌ لَّعَلَّهُمْ يَتَّقُونَ

குர்ஆன் 6:51 :" இன்னும் எவர் தங்கள் இறைவன் முன் (மறுமையில்) கொண்டுவரப்படுவது பற்றி பயப்படுகிறார்களோ அவர்களுக்கு (இவ்வேதத்தைக் கொண்டு) எச்சரிக்கை செய்யும். பாவத்திலிருந்து நீங்கி அவர்கள் பயபக்தியுடையோராகும் பொருட்டு அவனைத் தவிர அவர்களுக்கு பாதுகாப்பளிப்பவரோ, பரிந்து பேசுபவரோ வேறு யாருமில்லை."

اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَىٰ عَلَى الْعَرْشِ ۖ مَا لَكُم مِّن دُونِهِ مِن وَلِيٍّ وَلَا شَفِيعٍ ۚ أَفَلَا تَتَذَكَّرُونَ

32:4: " அல்லாஹ் தான் வானங்களையும், பூமியையும், இவ்விரண்டுக்கு இடையிலிருப்பவற்றையும் ஆறு நாட்களில் படைத்துப் பின் அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலைப்படுத்தினான். அவனையன்றி உங்களுக்கு உதவியாளரோ, பரிந்து பேசுபவரோ வேறு யாரும் இல்லை. எனவே (இவற்றையெல்லாம்) நீங்கள் நினைத்து சிந்திக்க வேண்டாமா?"

மேலும், அனா அஹமது பிளாமீம்“ “நான் மீமின்றிய அஹமதுவாயிருக்கிறேன்“ என்ற நாயக வாக்கியமும், நான் அர்ஷில் அஹதாகவும், வானத்தில் அஹமதாகவும் பூமியில் முஹம்மதாகவும் தஹ்தஸ்ஸராவில் மஹ்மூதாகவும் இருக்கிறேன் என்ற நாயக வாக்கியமும், பெருமானாரின் உள்ரங்க ஜோதியை உறுதிப்படுத்துவதாயிருக்கிறது.

அகப்பார்வை உடைய சான்றோர்கள் இவ்வுண்மையை விளங்கிக் கொண்டவர்களாய் பெருமானாரை இரு ஜோதியாகவும் கண்டார்கள். எடுத்துக் காட்டாக, பெருமானார் பற்றி கீழக்கரை தைக்காசாகிபு அப்பா அவர்கள் பாடிய பாடலை இங்கு குறிப்பிடுகிறோம்.

“அஹ தினில் மீமைச் சேர்த்து அஹமதாய் வந்தாய் நீயும்

முஹம்மது என்ற பேரும் பெற்றாய் நீ முன்னும் பின்னும்

சகல பேரும் உனக்குத் தரிக்கினும் உஜூது ஒன்றே

சுகம் பெறவேண்டி உந்தன் ஷுஹூ தருள் காலி நீயே“

தக்கலை பீர்முஹம்மது ஒலி அவர்களும் நபி பெருமானாரை இரு ஜோதியாகவே கண்டார்கள்.

பெருமானார் அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து ஆக இருந்து வெகு பலதாய்ச் சமையுமுன்னே வானத்தில் ஆதமாயிருந்தார்கள் என்று தாங்கள் இயற்றிய பிஸ்மில் குறத்தில் விளக்கம் தந்துள்ளார்கள். அவர்கள் பாடிய பாடல்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

“ஆதமென்ன அவருடைய பாதமென்ன வென்றால்

அறியாத பேர்கள் எல்லா மறியச் சொல்வேன் கேளும்

வேதமென்றும் ஆதமென்றும் விளம்புவது மதுதான்

வெகு பலதாய்ச் சமையுமுன்னே அஹதிய்யத்தாயிருந்து

அது தானே வஹ்தத்தென்று அனைத்தையு முள்ளொடுக்கி

அப்புறமும் வாகிதாகிய வானத்திலே ஆதம்“

மேற்சொன்ன விளக்கங்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் தெளிவு என்னவென்றால், பெருமானாரின் உள்ரங்க ஜோதி ஹக்குடைய பிரதிபலிப்பாக இருக்கிறது. அவர்களின் வெளிரங்க ஜோதி அல்லாஹ்வின் வஹியைப் பெற்று மனிதனாய்த் தோற்றமளிக்கிறது.

பெருமானாரைச் சரீர வடிவத்தில் மட்டும் காண்பவர்கள் அவர்களின் அகமியத்தை சிந்திக்காததினால் அவர்கள் இப்போது இல்லை, இறந்து விட்டார்கள் என்றே கருதுகின்றனர். ஆனால், அகப்பார்வையுடைய ஆரிபீன்களோ அவர்கள் என்றும் ஹயாத்துப் பெற்றவர்களாக கருதுகின்றனர்.

சிறப்புமிக்க நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் வஸீலாவாக இருந்து மக்களின் பாவமீட்சி கோரி இறைவனிடம் பரிந்துரை செய்யக்கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

"வஸீலா" என்பது "ஒன்றின் மூலமாக மற்றொன்றை அணுகுதல்" என்பது கருத்தாகும். அல்லாஹ்வின் அடியார்கள் நபி பெருமானார் அவர்கள் மூலம் அல்லாஹ்வை அணுகுவது வஸீலாவாகும்.

நமக்காக நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வது ஷபாஅத்தாகும். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலம் நாம் வஸீலாத் தேடுவதை அல்லாஹ் தன் திருமறையில் அங்கீகரித்துள்ளான். இதுபற்றிய தெய்வத் திருவசனங்களைக் கீழே குறிப்பிடுகிறோம்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَابْتَغُوا إِلَيْهِ الْوَسِيلَةَ

குர்ஆன் 5:35 : " முஃமின்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன்பால் நெருங்குவதற்குரிய வஸீலாவைத் தேடிக் கொள்ளுங்கள்."

وَمَا أَرْسَلْنَا مِن رَّسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ اللَّهِ ۚ وَلَوْ أَنَّهُمْ إِذ ظَّلَمُوا أَنفُسَهُمْ جَاءُوكَ فَاسْتَغْفَرُوا اللَّهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُولُ لَوَجَدُوا اللَّهَ تَوَّابًا رَّحِيمًا

குர்ஆன் 4:64: "இன்னும் அவர்களுடைய நப்ஸுக்கு அநியாயம் செய்து கொண்ட நேரத்தில் (நபியே!) உம்மிடம் அவர்கள் வந்து அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடி அவர்களுக்காக இந்த ரசூலும் பிழை பொறுக்கத்தேடுவார்களானால், அல்லாஹ்வை தௌபாவை ஏற்றுக் கொள்பவனாகவும், அளவற்ற கிருபையாளனாகவும் அவர்கள் கண்டு கொள்வார்கள்."

மேற்குறிப்பிட்ட தெய்வத் திருவசனப்படி, நபி பெருமானார் உயிரோடு இருக்கும்போதுதான் அவர்கள் மூலம் பிழை பொறுக்கத் தேட முடியும். அவர்கள் இறந்தபின் அவர்கள் மூலம் பிழைபொறுக்கத் தேட முடியாது. இனி மஹ்ஷரில்தான் அவர்களிடம் ஷபாஅத்து தேட முடியும் என்று முஸ்லிம்களில் ஒருசாரார் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இவர்கள் கருத்து தவறானது. உள்ரங்க ஜோதியைப் பொறுத்தவரை பெருமானார் என்றும் ஹயாத்துப் பெற்றவர்கள் என்பதை இவர்கள் விளங்கிக் கொண்டால் இந்த ஆட்சேபணை செய்ய மாட்டார்கள்.

"ஷபாஅத்து" என்பது பெருமானார் அவர்கள் அல்லாஹ்விடம் மக்களுக்காக மறுமைநாளில் கேட்பது என்றும், அப்பதவியை மறுமைநாளில் பெருமானார் அவர்களுக்கு கொடுக்கும்படி பெருமானாரின் உம்மத்துகள் இவ்வுலகில் கேட்க வேண்டுமென்றும், பெருமானார் நமக்காக

ஷபாஅத்துச் செய்யும்படி பெருமானாரிடம் அவர்கள் இறந்தபின் இவ்வுலகில் கேட்கக் கூடாது என்றும், முஸ்லிம்களில் ஒருசாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

“அத்துன்யா மஜ்ர அதுல் ஆகிரா“ “இந்த உலகம் மறுமையின் வேளாண்மை ஸ்தலம்“ என்று நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளபடியால் மறுமைக்குரிய தங்கரிப்பை இவ்வுலகில் சேகரித்தாக வேண்டும்.

அவர்கள் நமக்காக ஷபாஅத்துச் செய்யும்படி அவர்களின் உம்மத்துகளாகிய நாம் இம்மையில் அவர்களிடம் கேட்பது ஆகுமானதே. பெருமானார் நித்திய ஜீவனாக இருக்கிறார்கள் என்ற கொள்கை பிடிப்புள்ளவர்கள் அவர்களது ஷபாஅத்தை இம்மையில் வேண்டுவதில் தவறில்லை.

பெருமானார் அவர்கள் உயிர்நீத்து அவர்களது உடல் மதீனாவில் அடக்கியது வெளிப்படையாக இருக்கும்போது அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று எப்படி சொல்ல முடியும்? அதற்கு குர்ஆன் ஆதாரமென்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே.

மார்க்க யுத்தத்தில் சஹீதானவர்கள் இறந்தவர்கள் என்பது வெளிப்படையாக இருந்தபோதிலும் அவர்கள் உயிருடனிருப்பதாக அல்லாஹ் தன் திருமறையில் தெரிவித்துள்ளான்.

وَلَا تَقُولُوا لِمَن يُقْتَلُ فِي سَبِيلِ اللهِ أَمْوَاتٌ ۚ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِن لَّا تَشْعُرُونَ

குர்ஆன் 2:154: “இன்னும் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை இறந்து விட்டவர்கள் என்று கூறாதீர்கள். அப்படி அல்ல. அவர்கள் உயிர் உள்ளவர்கள் எனினும் நீங்கள் இதை உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்.“

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللهِ أَمْوَاتًا ۚ بَلْ أَحْيَاءٌ عِندَ رَبِّهِمْ يُرْزَقُونَ

3:169 : “அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள். தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள். (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.“

மார்க்க யுத்தத்தில் அல்லாஹ்வின் பாதையில் சஹீதானவர்களை உயிருடனிருப்பதாக அல்லாஹ் கூறும்போது, அகிலத்தாருக்கெல்லாம் அருட்கொடையாக வந்தவர் என்று இறைவனால் போற்றப்படும் அண்ணல் எம்பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடனில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

மேற்சொல்லிய இரு ஆயத்துக்களும் சஹீதானவர்களுக்கு மட்டும் பொருந்தும். மற்றவர்களுக்குப் பொருந்தாது என்று ஆட்சேபணை செய்பவர்களும் உண்டு.

நப்ஸோடு போர் புரிந்து வெற்றி பெற்றவர்களும், ஷஹீதானவர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டவர்களே. ஏனென்றால், பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் ஜிஹாதை சிறிய போர் என்றும், நப்ஸோடு யுத்தம் செய்வதை பெரிய போர் என்றும் அறிவித்துள்ளார்கள்.

"தீய வழியில் தூண்டும் ஜின் எனக்கு பணிந்து விட்டான்" என்ற நபி மொழி பெருமானார் நப்ஸை அடக்கி ஜெயம் பெற்றவர்கள் என்பதை ருஜூபிப்பதால் பெருமானார் சஹீதீன்கள் வரிசையில் சேர்க்கப்பட்டு என்றும் ஹயாத்துப் பெற்றவர்களாயிருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களும், நப்ஸோடு போராடி ஜெயம் பெற்றவர்களும் என்றும் ஹயாத்து பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களே அல்லாஹ்வின் கலீபாவாக இருக்கிறார்கள்.

இவர்களிடம் வஸீலாத் தேடுவதை அல்லாஹ் ஆகுமானதாக்கி வைத்துள்ளான். இவர்களே அல்லாஹ்வின் அனுமதி பெற்று அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள்."

لَّا يَمْلِكُونَ الشَّفَاعَةَ إِلَّا مَنِ اتَّخَذَ عِندَ الرَّحْمَٰنِ عَهْدًا

குர்ஆன்: 19:87 :" அர்ரஹ்மானிடம் உடன்படிக்கை செய்து கொண்டோரைத் தவிர, எவரும் ஷபாஅத்திற்கு –மன்றாட்டத்திற்கு சுதந்திரம் பெற மாட்டார்கள்."

وَلَا تَنفَعُ الشَّفَاعَةُ عِندَهُ إِلَّا لِمَنْ أَذِنَ لَهُ

34:23 : " அன்றியும், அவன் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவர் தவிர (வேறு எவருடைய) பரிந்துரையும் பயனளிக்காது."

وَكَم مِّن مَّلَكٍ فِي السَّمَاوَاتِ لَا تُغْنِي شَفَاعَتُهُمْ شَيْئًا إِلَّا مِن بَعْدِ أَن يَأْذَنَ اللَّهُ لِمَن يَشَاءُ وَيَرْضَىٰ

53:26: " அன்றியும் வானங்களில் எத்தனை மலக்குகள் இருக்கின்றனர்? எனினும், அல்லாஹ் விரும்பி எவரைப் பற்றி திருபதி அடைந்து அவன் அனுமதி கொடுக்கிறானோ அவரைத் தவிர வேறெவரின் பரிந்துரையும் எந்தப் பயனுமளிக்காது."

يَوْمَئِذٍ لَّا تَنفَعُ الشَّفَاعَةُ إِلَّا مَنْ أَذِنَ لَهُ الرَّحْمَٰنُ وَرَضِيَ لَهُ قَوْلًا

20:109: "அந்நாளில் அர்ரஹ்மான் எவரை அனுமதித்து, எவருடைய பேச்சை உவந்து கொள்கிறானோ அவர்களைத் தவிர வேறு எவருடைய ஷபாஅத்தும் (பரிந்துரையும்) பயனளிக்காது"

குதுப்மார்கள் வஸீலாவிற்கு உரியவர்கள் என்பதை கௌதுல் அஃலம் முஹைஹதீன் அப்துல் காதர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பதை இங்கே குறிப்பிடுகிறோம்.

கௌதுல் அஃலம் சொல்வதாவது:

"என் முரீதே! நான் உன்னை இம்மையிலும், மறுமையிலும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு உறுதியுடன் என்னைப் பற்றிப் பிடித்துக் கொள்வாயாக. என் முரீதே! மறுமைநாளில் உன் நன்மை, தீமை நிறுக்கப்படும் தராசு அருகே நான் இருப்பேன்."

அபுல்ஹஸன் ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னதாக மபாஹிர் என்னும் கிதாபில் சொல்லப்படுவதாவது: "கண்ணெட்டும் தொலை நீளம் ஒரு கடிதத்தைக் கொடுக்கப்பட்டது. அதில் கியாமநாள் வரை உள்ள எனது அஸ்ஹாபிகள், என்னுடைய அஸ்ஹாபிகளுடைய அஸ்ஹாபிகள் இவர்கள் பெயரெல்லாம் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் நரகத்தை விட்டு உரிமைப் பட்டோலை" என்று சொல்லி இருக்கிறார்கள்.

இவ்விதம் அவர்கள் நரக விடுதலை உரிமைச் சீட்டுப் பெற்றிருப்பதை எனது தகப்பனார் ஞானப்பிரகாச ஆசிரியர் அவர்கள் பின்வருமாறு பாடியுள்ளார்கள்.

"என்னைத் துடர்ந்தோர் யாவருக்கும்

எரியும் நரகம் ஹறாமெனவே

மன்னன் இடம் உரிமைச் சீட்டு வாங்கிய

செய்யிதுனா அபுல்ஹஸனி"

அல்லாஹ் அல்லாதவைகளை அல்லாஹ்விற்கு இணை தெய்வமாக்கி அல்லாஹ் அல்லாதவைகளிடம் உதவி தேடக் கூடாது என்று குர்ஆன் எச்சரிக்கை செய்யும் ஆயத்துக்களை ஆதாரமாகக் காட்டி இறந்துபோன நபிமார்கள், ஒலிமார்களிடம் உதவி தேடக் கூடாது என்று சிலர் வாதாடுகிறார்கள். அவர்களது வாதம் சரியல்ல.

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திற்குப் பின் சில வருடங்களில் அல்லாஹ்விற்கு இணையாக வேறு தெய்வங்களை வணங்குவதற்கென்று மக்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வதற்கென்று மறைந்த சான்றோர்களை சிபாரிசு தெய்வங்களாகவும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின், நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் இம்மாதிரியான வணக்கம் முதலில் மக்களிடையே ஆரம்பமானது.

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சமூகத்தில் தோன்றிய சான்றோர்களாகிய வத்ஸுவாவு, யகூஸ், யஊக், நஸ்ரு ஆகியோரை வணக்கத்திற்குரிய தெய்வங்களாக்கி நபி

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திய மக்கள் வணங்கினார்கள். இவர்கள் இவ்விதம் வணங்கி வந்ததை அல்லாஹ் விரும்பவில்லை என்று நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அம்மகளுக்கு போதித்தார்கள்.

ஆனால் அவர்கள் போதனையை, அக்கால மக்கள் ஏற்கவில்லை. அவர்கள் இணைவைத்து வணங்குவதை கைவிடவும் இல்லை. அதனால் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அம்மக்களை வழிகேட்டில் ஆக்கும்படி அல்லாஹ்வை வேண்டினார்கள்.

وَقَالُوا لَا تَذَرُنَّ آلِهَتَكُمْ وَلَا تَذَرُنَّ وَدًّا وَلَا سُوَاعًا وَلَا يَغُوثَ وَيَعُوقَ وَنَسْرًا. وَقَدْ أَضَلُّوا كَثِيرًا ۖ وَلَا تَزِدِ الظَّالِمِينَ إِلَّا ضَلَالًا

குர்ஆன் 71:23,24 : “மேலும் அவர்கள் உங்கள் தெய்வங்களை விட்டு விடாதீர்கள் இன்னும் வத்ஃஉ, வாவு,யகூஸ், யஊக், நஸ்ரு ஆகியவற்றை நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள்“ என்றும் சொல்கின்றனர். நிச்சயமாக அவர்கள் அநேகரை வழிகெடுத்து விட்டனர். ஆகவே, இவ்வநியாயக்காரர்களுக்கு வழிகேட்டைத் வதிர வேறு எதையும் நீ அதிகப்படுத்தாதே“.

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் முதல் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை வந்த நபிமார்கள், அல்லாஹ்விற்கு இணைவைத்து மக்கள் வணங்கியதைக் கண்டித்தார்கள்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபத்துல்லாஹ்விலிருந்த விக்ரஹங்களையும், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் போன்றோர்களின் உருவப்படங்களையும் அப்புறப்படுத்தினார்கள்.

ஏனென்றால், அவற்றை மக்கள் அல்லாஹ்விற்கு இணைவைத்து வணங்கி வந்தார்கள். ஏக தெய்வக் கொள்கைப் பற்றி நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் எதைப் போதித்தானோ அதைத்தான் பின் வந்த நபிமார்களுக்கும் அல்லாஹ் போதனையாக்கி வைத்தான்.

شَرَعَ لَكُم مِّنَ الدِّينِ مَا وَصَّىٰ بِهِ نُوحًا وَالَّذِي أَوْحَيْنَا إِلَيْكَ وَمَا وَصَّيْنَا بِهِ إِبْرَاهِيمَ وَمُوسَىٰ وَعِيسَىٰ ۖ أَنْ أَقِيمُوا الدِّينَ وَلَا تَتَفَرَّقُوا

فِيهِ ۚ كَبُرَ عَلَى الْمُشْرِكِينَ مَا تَدْعُوهُمْ إِلَيْهِ ۚ اللَّهُ يَجْتَبِي إِلَيْهِ مَن يَشَاءُ وَيَهْدِي إِلَيْهِ مَن يُنِيبُ

குர்ஆன் 42:13 : “நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கிறான். ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும், இபுறாஹீமுக்கும், மூஸாவிற்கும், ஈஸாவிற்கும் உபதேசித்ததும் என்னவென்றால்: “நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்“ என்பதே. இணை வைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது. தான் நாடியவர்களை அல்லாஹ் தன்பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். அவனை முன்னோக்குபவர்களை அவன் நேர்வழியில் நடத்துகிறான்.“

அல்லாஹ்வின் கலீபாக்களை இணைதெய்வமாகவோ, சிபாரிசு தெய்வங்களாகவோ ஆக்கக் கூடாது என்பதுதான் அல்லாஹ்வின் கட்டளையே அல்லாது அவர்களை அல்லாஹ்வின் கலீபாவாக ஏற்று அவர்கள் மூலம் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வதை அல்லாஹ் நமக்கு ஆகுமானதாக்கியுள்ளான்.

அல்லாஹ் அல்லாதவைகளை வணங்கக் கூடாது என்று அல்லாஹ் குறிப்பிடுவது சிலைகளையும், மறைந்த சான்றோர்களை அல்லாஹ்விற்கு இணை தெய்வமாக வைப்பதையும்தான்.

நபிமார்கள், ஒலிமார்கள் மூலம் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யக்கூடாது என்று அல்லாஹ் நாடியிருந்தால் வஸீலா, ஷபாஅத்து சம்பந்தமான தெய்வத்திரு வசனங்கள் குர்ஆனில் இடம் பெற்றிருக்க முடியாது.

நபிமார்கள் ஒலிமார்களிடம் பரிந்துரை செய்வதை நாங்கள் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. இறந்து போன நபிமார்கள், ஒலிமார்கள் மூலம்தான் பரிந்துரை செய்வதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம் என்று முஸ்லிம்களில் ஒருசாரார் இதற்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடும்.

“மௌத்து“ என்பது ஜடத்திற்கே அல்லாது ரூஹுக்கு அல்ல. மௌத்து ஜடதத்துவ மாறுதலேயன்றி வேறில்லை. சாதாரண மனிதர்களின் ரூஹு அவர்கள் இறந்தபின் ஆலம் பர்ஸக்கில் வைக்கப்படுகிறது.

ஆனால், நபிமார்கள், ஒலிமார்கள் இவர்களது ரூஹு ஹயாத்து பெற்றதாக ஏக ஆன்மாவுடன் ஒன்றித்து விடுகிறது. இதனால்தான் ஷஹீதானவர்களை இறந்தவர்கள் என்று சொல்லாதீர்கள். அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அல்லாஹ் தன் தெய்வத் திருவசனத்தில் திட்டப்படுத்தியுள்ளான்.

இதன் காரணமாகவே அல்லாஹ்வை அறிந்த ஆரிபீன்கள், ஒளலியாக்களை வகை வடிவத்தல் கட்டுப்படுத்தி பார்ப்பதில்லை. தொகை வடிவத்தில் வஹ்தத்துல் உஜூதாகவே காண்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, மௌலானா செய்யிது முஹம்மது புகாரி தங்கள் அவர்கள், கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை, வஹ்தத்துல் வுஜூதாகவே கண்டு “யாசுல்தானல் ஆரிஃபீன்“ என்ற புகழ்மாலையை கௌதுல் அஃலம் மீது இயற்றினார்கள்.

அதுபோல் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் கௌதுல் அஃலம் அவர்களை தொகை வடிவத்தில் வஹ்தத்துல் வுஜூதாகக் கண்டு “குரு வணக்கம்“ பாடியுள்ளார்கள். இவ்வகையில் ஒளலியாக்களிடம் பரிந்துரை செய்தல் ஆகுமானதே.

அல்லாஹ்விடம் அனுமதி பெற்ற அல்லாஹ்வின் கலீபாக்களைத் தவிர, மறுமைநாளில், எந்த ஒரு ஜீவாத்மாவம் இன்னொரு ஜீவாத்மாவுக்கு பரிந்துரை செய்ய முடியாது.

நபிமார்கள், வலிமார்கள் ஏக ஆன்மாவாகிய வஹ்தத்துல் முஹம்மதிய்யாவில் ஒன்றித்தார்கள். அவர்கள்தான் அல்லாஹ்வின் அனுமதியுடன் பரிந்துரை செய்ய முடியும். ஒற்றைப்பட்ட ஆன்மா அதாவது ஜீவாத்மா இன்னொரு ஜீவாத்மாவுக்கு மறுமைநாளில் பரிந்துரை செய்ய முடியாது. இதனை கீழ்கண்ட இறைவசனங்கள் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ وَلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَلَا هُمْ يُنصَرُونَ

குர்ஆன் 2:48: “இன்னும் ஓர் ஆத்மா மற்றோர் ஆத்மாவிற்குச் சிறிதும் பயன்பட முடியாதே(அந்த) ஒருநாளை நீங்கள் அஞ்சி நடப்பீர்களாக! (அந்த நாளில்) எந்தப் பரிந்துரையும் அதற்காக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதற்காக எந்தப் பதிலீடும் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அன்றியும் (பாவம் செய்த) அவர்கள் உதவி செய்யப்பட மாட்டார்கள்.“

وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَلَا تَنفَعُهَا شَفَاعَةٌ وَلَا هُمْ يُنصَرُونَ

குர்ஆன் 2:123: “ இன்னும் (வரப்போகும்) அந்த நாளிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அன்று ஓர் ஆத்மா, பிறிதொரு ஆத்மாவுக்கு உதவி செய்ய இயலாது. அதனிடமிருந்து (அதன் பாவங்களுக்கு பரிகாரமாக) எந்த நஷ்ட ஈடும் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. எந்த சிபாரிசும் பயனளிக்காது. அவர்கள் (எவர் மூலமாகவும் எந்த) உதவியும் செய்யப்பட மாட்டார்கள்.“

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَنفِقُوا مِمَّا رَزَقْنَاكُم مِّن قَبْلِ أَن يَأْتِيَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيهِ وَلَا خُلَّةٌ وَلَا شَفَاعَةٌ ۗ وَالْكَافِرُونَ هُمُ الظَّالِمُونَ

குர்ஆன்: 2:254 :“ நம்பிக்கை கொண்டோரே! பேரங்களும், நட்புறவுகளும், பரிந்துரைகளும் பயன்தராத அந்த (இறுதித் தீர்ப்பு) நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழிகளில்) செலவு செய்யுங்கள். இன்னும் கா:ஃபிர்களாக இருக்கின்றார்களே அவர்கள் தாம் அநியாயக்காரர்கள்.“

கீழ்க்கண்டவர்களுக்கு யாரது பரிந்துரையும் பயனளிக்காது.

1. إِنَّ الَّذِينَ كَفَرُوا بِآيَاتِنَا سَوْفَ نُصْلِيهِمْ نَارًا

اسْتَغْفِرْ لَهُمْ أَوْ لَا تَسْتَغْفِرْ لَهُمْ إِن تَسْتَغْفِرْ لَهُمْ سَبْعِينَ مَرَّةً فَلَن يَغْفِرَ اللَّهُ لَهُمْ ۚ ذَٰلِكَ بِأَنَّهُمْ كَفَرُوا بِاللَّهِ وَرَسُولِهِ ۗ وَاللَّهُ لَا

يَهْدِي الْقَوْمَ الْفَاسِقِينَ

إِنَّ الَّذِينَ كَفَرُوا مِنْ أَهْلِ الْكِتَابِ وَالْمُشْرِكِينَ فِي نَارِ جَهَنَّمَ خَالِدِينَ فِيهَا

وَجُنُودُ إِبْلِيسَ أَجْمَعُونَ

1. அல்லாஹ்வையும, அவனது வேதங்களையும், ரஸூல்மார்களையும் ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு நரகம். குர்ஆன் : 4:56, 9:80, 98:6, 26:95

مِن دُونِ اللَّهِ هَلْ يَنصُرُونَكُمْ أَوْ يَنتَصِرُونَ

فَكُبْكِبُوا فِيهَا هُمْ وَالْغَاوُونَ

2. அல்லாஹ் அல்லாதவற்றை இணை தெய்வமாக வணங்குவோர்க்கு நரகம். குர்ஆன் 26:93,94.

لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنكَ وَمِمَّن تَبِعَكَ مِنْهُمْ أَجْمَعِينَ

3. ஷைத்தானுக்கு வழிப்பட்டவர்களுக்கு நரகம். குர்ஆன் 38:85

بَلْ كَذَّبُوا بِالسَّاعَةِ ۖ وَأَعْتَدْنَا لِمَن كَذَّبَ بِالسَّاعَةِ سَعِيرًا

4. இறந்தபின் எழுப்பப்படமாட்டோம் என்றும், கியாமநாள் இல்லை என்றும் சொல்பவர்களுக்கு நரகம். குர்ஆன் 25:11

وَقِيلَ لَهُمْ ذُوقُوا عَذَابَ النَّارِ الَّذِي كُنتُم بِهِ تُكَذِّبُونَ

5. நரகம் பொய் என்பவர்களுக்கு நரகம். குர்ஆன் 32:20

فَقَالَ إِنْ هَٰذَا إِلَّا سِحْرٌ يُؤْثَرُ. إِنْ هَٰذَا إِلَّا قَوْلُ الْبَشَرِ. سَأُصْلِيهِ سَقَرَ

6. குர்ஆனை பொய்ப்பித்தவர்களுக்கு நரகம். குர்ஆன் 74:24,25,26

مَا سَلَكَكُمْ فِي سَقَرَ. قَالُوا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّينَ. وَلَمْ نَكُ نُطْعِمُ الْمِسْكِينَ. وَكُنَّا نَخُوضُ مَعَ الْخَائِضِينَ. حَتَّىٰ أَتَانَا الْيَقِينُ.

فَمَا تَنفَعُهُمْ شَفَاعَةُ الشَّافِعِينَ

7. தொழாமலும் ஏழைகளுக்கு உணவளிக்காமலும், நியாயத் தீர்ப்பு நாளை மறுத்தும், வீணானவற்றில் மூழ்கி மரணம் வரை இவ்விதம் நடந்தவர்களுக்கு நரகம். குர்ஆன் 74:42-48

மேற்குறிப்பிட்ட 1 முதல் 7 நம்பர்கள் வரை குறிப்பிடப்பட்ட தெய்வத்திருவசனங்களின்படி நடப்பவர்களுக்கு யாரது பரிந்துரையும் பயனளிக்காது. பரிந்துரை செய்வதற்கு அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லாஹ்வின் கலீபாக்களாகிய நபிமார்கள், வலிமார்கள் இப்படிப்பட்டவர்களுக்கு பரிந்துரை செய்யவும் மாட்டார்கள்.

رَّبِّ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا الرَّحْمَٰنِ ۖ لَا يَمْلِكُونَ مِنْهُ خِطَابًا. يَوْمَ يَقُومُ الرُّوحُ وَالْمَلَائِكَةُ صَفًّا ۖ لَّا يَتَكَلَّمُونَ إِلَّا مَنْ أَذِنَ لَهُ

الرَّحْمَٰنُ وَقَالَ صَوَابًا

குர்ஆன்: 78:37,38 : " அவனே வானங்களுக்கும், பூமிக்கும், அவ்விரண்டுக்கும் இடையே உள்ளவற்றிற்கும் இறைவன்: அர்ரஹ்மான், அவனிடம் பேச எவரும் அதிகாரம் பெறமாட்டார்கள். ஜிப்ரயீலும், மலக்குகளும், அணியணியாக நிற்கும் நாளில் அர்ரஹ்மான் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவர்களைத் தவிர்த்து வேறு எவரும் பேசமாட்டார்கள். அவரும் நேர்மையானதையே கூறுவார்.

## அத்தியாயம் 8

### ஏகமும் அநேகமும்

பிரபஞ்சத்தை "குன்"(உண்டாகு) என்ற கட்டளையால் படைத்து அதை ஆளும் நாயன் பிரபஞ்சத்திலிருந்து தனித்தே இருக்கிறான் என்பது துவைதிகளின் கொள்கை. பிரபஞ்ச வஸ்துகள் எல்லாவற்றிலும் நாயன் ஊடுருவி இருக்கிறான். அவன் நீக்கமற நிறைந்தவன்.

நீக்கமற நிறைந்தவன் என்பதற்குக் கடவுள் பிரபஞ்சமாக இருக்கிறான் என்பது பொருள் அல்ல. பிரபஞ்சத்தில் ஊடுருவி இருக்கிறான் என்பதே பொருள். இது விஷிஷ்டாத் வைதிகளின் கொள்கை. பிரம்மம் தன்னை அறிய நாடியபோது பிரபஞ்சமாகத் தோன்றிற்று.

பிரபஞ்சம், பிரமத்திற்கு அந்நியமில்லை என்பது அத்வைதிகளின் கொள்கை. எனவே, ஏகமே அநேகமாய்த் தோன்றிற்று என்பது அத்வைதிகளின் கொள்கை. அநேகத்திலும் ஏகன் ஊடுருவி இருக்கிறான் என்பது விஷிஷ்டாத்வைதிகளின் கொள்கை. ஏகன், அநேகமில்லை என்பது துவைதிகளின் கொள்கை.

ஏகம், அநேகமாயத் தோன்றிற்று என்றால் ஏகத்தின் சம்பூரண அறிவு அநேகமான பிரபஞ்ச வஸ்துக்களுக்கு இல்லையே என்பதை ஆதாரமாகக் காட்டி ஏகத்தை, அநேகத்தை விட்டும் பிரிக்கின்றனர் துவைதிகள்.

அநேகத்தில், ஏகம் ஊடுருவி நின்றபோதிலும் ஏகத்தின் சம்பூரண அறிவை அநேகம் பெறுவதில்லை. அதனால் அநேகம், ஏகமாக முடியாது என்று விஷிஷ்டாத்வைதிகள் கருதுகின்றனர்.

அத்வைதிகளோ அநேகம் ஏகத்திற்கு அந்நியமில்லை என்பதை உறுதிப்படுத்தி ஏகத்தின் சம்பூரண அறிவு அநேகத்திற்கு ஏன் இல்லை என்பதற்குப் பின் கண்ட காரணத்தை காட்டுகின்றனர்.

பிரபஞ்சம், தத்துவங்களின் தோற்றங்கள், தத்துவங்கள் அறிவில் பொருந்தியிருந்தவை. ஆலம் அர்வாஹில், ஹக்கு தத்துவங்களைத் தனித்தனியாக வெளிப்படுத்தினான். அப்போதுதான் தத்துவங்கள் தங்களையே தான் உணர்ந்தன. இருப்பினும், அவைகள் சுயமாகத் தங்களை தாங்கள் வெளிப்படுத்திக் கொள்ள அவைகளுக்கு சக்தியில்லை.

எனவே, ஹக்கு அவைகளை வெளிப்படுத்த தன்னுடைய உள்ளமையினின்றும் ஓர் சம்பந்தத்தை அளித்தானே அல்லாது தன்னுடைய சம்பூரண அறிவை, ஹக்கு அவைகளுக்கு அளிக்கவில்லை. ஆகையால் அவைகளுக்கு ஹக்கு எதனை அறிவித்துக் கொடுத்தானோ அவற்றைத்தான் தத்துவங்கள் அறிய முடியும். அதனால் தான் ஏகத்தின் அறிவு அநேகத்திற்கு இல்லை.

தத்துவங்கள் சுயமாகத் தோன்றவுமில்லை. அவைகள் தங்களைத்தாங்களே வெளிப்படுத்த சக்தியுமில்லை. ஹக்கின் உள்ளமையைக் கொண்டே அவைகள் வெளியாகிருப்பதால் தோன்றிய பிரபஞ்சங்களின் உள்ளமையும் ஹக்குடைய உள்ளமையும் ஒன்றுதான் என்பது வுஜூதியாக்களின் கொள்கையாகும்.

ஹக்கின் சம்பூரண அறிவில் ஒன்றித்திரந்த தத்துவங்கள், ஆலம்அர்வாஹில், தனித்தனியாக வெளிப்படும்போது ஏகத்தின் சம்பூரண அறிவை அவைகள் ஏன் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை ஒருவன் விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால், ஏகம், அநேகமாய்த்தோன்றியது எப்படி என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதனை அறிய வேண்டுமானால், அவியக்த புதையலாக இருந்த தாத்து, தன்னை அறிய நாடியபொழுது, அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ள தோற்றுவித்துக் கொண்ட ஆறு படித்தரங்களிலும் எப்படி வெளிப்படுத்தியது என்பதை ஒருவன் விளங்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பற்ற தாத்தைப் பற்றியும் அது ஆறு குறிப்புகளில் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டதையும் இங்கு விவரிக்கிறோம். இதை விளங்கிக் கொண்டால் ஏகம் அநேகமாகத் தோன்றியது எப்படி என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

**தாத்து:** ஹக்குடைய உள்ளமையே தாத்தாகும். ஹக்குடைய தாத்தில் சம்பூரண அறிவும், அறிவின் உள்ளிடைத் தத்துவங்களாகிய பண்புகளும், அவற்றின் செயல்பாடுகளும் மறைபொருளாய் இருக்கின்றன. ஹக்கு தன்னையே தான் உணராத நிலைதான் தாத்து.

தாத்தின் தன்மையை நபிமார்கள், ஒலிமார்களுக்குக் கூட வெளிப்படுத்தப்படவில்லை. அதனை அறிவைக் கொண்டு மட்டிட்டுக் கூற முடியாத ஆச்சரிய நிலையாகும். அதனை ஞானத்திலோ, தீர்க்கதரிசனமாக வஹியிலோ கட்டுப்படுத்த முடியாது. அதனை அழகு என்னும் மண்டலத்தில் கொண்டு வருதல் அசாத்தியம். பேரின்பக் காதலர்களும், பூரண ஞானிகளும் அதனைப் பற்றி தாங்கள் அறிந்ததாகச் சொல்வதெல்லாம் அதன் பிரதிபிம்பத்தையும், மாதிரியையுமே தான்.

அகண்ட பரிபூரண தாத்தை “தஜல்லி“யாகிய ஹக்கின் பிரதிபிம்பத்தில் அடக்கிவிட முடியாது. தண்ணீரில் சூரியனின் பிரதிபிம்பத்ததை பார்த்த ஒருவர் சூரியன் தன்னையே தான் பார்த்ததாகச் சொல்லமுடியாது.

இதனால் நபிபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாத்துடைய நிலை பற்றி கூறும்பொழுது, "மாசு ரப்னாக்க ஹக்கன் மஃரிபதிக" "நான் உன்னை அறியக்கூடிய அளவிற்கு அறிந்து விடவில்லை" என்றார்கள்.

தாத்தில் உள்ள சம்பூரண அறிவுகூட, அவனுடைய ஹகீகத்தில், வாய் மூடலான பேராச்சிரியத்தில் கரைந்து போய் மூழ்கிக் கிடக்கிறது. தாத்துடைய நிலைமையில் அதன் அறிவு அதன் ஹகீகத்தாகிய அகமியமாயிருக்கிறது. பிரிவினை ஏற்படாதவரை அறிவு தாத்தை அறிய முடியாது.

ஆகையால் தாத்துடைய நிலையில் தாத்தைப் பற்றி அறிவு விளங்கிக் கொள்ளாதது அறிவிலுள்ள குறைபாட்டினாலன்று. அறிவே அதில் கரைந்து மறைந்திருக்கையில் அதன் தேட்டமும் அவ்வாறுதானிருக்க முடியும். அதற்கு குணபாடு யாதுமில்லை. அதனால்தான் தாத்து "நிர்க்குண பிரமம்" என அழைக்கப்படுகிறது.

"நான் அவியக்த புதையலாக இருந்தேன" என்பது தாத்துடைய நிலையாகும். இதன் இரகசியத்தை அல்லாஹ்வே அறிந்தவன். அல்லாஹ் வெளியானபுறத்தில் அவன் அத்தாட்சி கொண்டு எண்ணிப்பாருங்கள்.

அவனது வுஜூதாகிய உள்ளமையைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்று பெருமானார் எச்சரித்தது குறிப்பற்ற இந்த மர்தபாவைப் பற்றியதாகும். இதனை "குன்ஹு தாத்"தென்றும், "லாதஅய்யூன்", "குறிப்பற்ற மர்த்தபா" என்றும் "அஹதிய்யத்து" என்றும் சொல்லப்படும்.

**1.வஹ்தத்து:** இது முதற்குறிப்பாகம். இந்தக் குறிப்பில் "தாத்து" சம்பூரண ஞானத்தை பெறுகிறது. முன் அறியப்படாத தாத்துடைய நிலையிலிருந்து முதற் குறிப்பில் இறங்கியதும் அறியப்பட்டதின் கோலம் தோன்றிற்று. தன்னில் தான் நோட்டமிட்டு தன்னில் சகலமும் அடங்கியிருக்கக் கண்ட பதவி வஹ்தத் ஆகும்.

இப்பதவியை நூரே முஹம்மதிய்யா என்று அழைக்கப்படுகிறது. இதன் சுயம் இர்பான் என்ற ஞானமாகவே இருக்கிறது. இந்த ஞானம்தான் தாத்திலிருந்த மறைந்த பொக்கிஷங்களை வெளியே கொண்டு வந்து தாத்துக்கத் தாத்து என்ற பெயரை சூட்டியது.

எல்லையற்ற தாத்து, எல்லையற்ற தன் தன்மையை அறிய இந்த மர்தபாவில் சம்பூரண ஞானத்தைப் பெறுகிறது. அதற்கு அவ்வாறான அறிவு இல்லாவிடில் அதனுடைய அறிவு குறைபாடு உள்ளதாக ஆகிவிடும்.

எனவே, இக்குறிப்பில் சம்பூரண தாத்து சம்பூரண ஞானத்தைப் பெறுவதால் சம்பூரண ஞானத்தைக் கொண்டு தாத்து மட்டிடப்படுகிறது. சம்பூரண ஞானம் தாத்தைப் பற்றிக் கூறியதாவது:

"பிரபஞ்சத்தின் மூலப்பொருள் தாத்து. இதிலிருந்துதான் எல்லாம் தோன்றுகின்றன. இதைக் கொண்டுதான் எல்லாம் நிலைத்து நிற்கின்றன. முடிவில் எல்லாம் சென்று அடைவதும்

இதில்தான். எதிலிருந்து எல்லாம் தோன்றுகின்றனவோ, தோன்றிய பின் எதில் நிலைக்கின்றனவோ நிலைத்த பின் எதில் போய் ஒடுங்குகின்றனவோ அதுதான் தாத்து.

அதிலிருந்து எல்லாம் வெளியான போதிலும் "தாத்து" எந்தக் குறைபாடுமின்றி முன்போலவே இருக்கின்றது. (ஒரு மெழுகுவர்த்தியின் ஜூவாலையிலிருந்து ஆயிரம் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டாலும் மூல மெழுகுவர்த்தியின் ஜூவாலை கொஞ்சமும் குறைவதில்லை) தாத்து பூர்வீகமானது. குறைவில்லாதது. சிந்தனைக்கு அடைபடாதது. அறிவால் எதை சிந்திக்க முடியாதோ அதுதான் "தாத்து". இவ்விதம் சம்பூரண ஞானத்தைக் கொண்டு தாத்து மட்டிடப்படுகிறது.

2. **வாஹிதிய்யத்து:** இது இரண்டாம் குறிப்பாகும். ஹக்கின் அறிவில் உள்ள உள்ளிடைத் தத்துவங்களை ஹக்கு இந்த தானத்தில் பிரிவுபடுத்தி வகை வகையாகப் பார்த்தது. ஒவ்வொரு பண்பிலும் தன்னையே தான் பார்த்தான். ஹக்கு, பண்புகளை பிரித்தறிந்த போதிலும் பண்புகள் இந்த தானத்தில் தங்களைத் தான் அறிந்து கொள்ளவில்லை.

3. **ஆலம் அர்வாஹ் - மூன்றாம் குறிப்பு**: தத்துவங்களை பல ரூஹுகளாக, கூட்டம் கூட்டமாக இத்தானத்தில் ஹக்கு வெளிப்படுத்தினான். இத்தானத்தில் தான் தத்துவங்கள் தங்களைத்தான் உணர்ந்து கொண்டன. அவைகள் தங்கள் தத்துவங்களைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்ள சக்தியற்று இருந்தன.

தத்துவங்கள் வெளிப்பட ஹக்கு தன் உள்ளமையினின்றும் ஓர் சம்பந்தத்தை இத்தானத்தில் தத்துவங்களுக்கு அளித்தான். அதனால் தத்துவங்கள் இயங்க ஆரம்பித்தது. இத்தானத்தில் அவைகள் தங்களுக்கென்று ஓர் உள்ளமையை தாங்களே ஏற்படுத்திக் கொண்டன. ஆகையால் தத்துவங்கள் இத்தானத்தில் காரண சரீரத்தைப் பெற்றுக் கொண்டன.

4. **ஆலம் மிதால் -நான்காம் குறிப்பு:** தத்துவங்கள் காரண சரீரத்தை வெளிப்படுத்த இந்த தானத்தில் சூக்கும சரீரத்தைப் பெற்றன.

5. **ஆலம் அஜிஸாம் - ஐந்தாம் குறிப்பு:** சூக்கும தத்துவங்க்ள சூக்கும தத்துவத்தை வெளிப்படுத்த இத்தானத்தில் ஸ்தூல சரீரத்தைப் பெற்றன. அதனால் அவைகள் இத்தானத்தில் ஜடப் பொருளாய் தோன்றின.

6. **ஆலம் இன்ஸான்** -: மேற்சொல்லிய முதற்குறிப்பு வஹ்தத் முதல் இன்ஸான் வரை சகல நிலைகளையும் தன்னுள் அடக்கி சேகரித்துக் கொண்ட பூரணப் பதவியாகும். இன்ஸான் உடைய ரூஹு ஆகிய பரிசுத்த ஆவி முதலில் படைக்கப்பட்டதையும்,

இன்ஸானின் சரீரம் கடைசியாகப் படைக்கப்பட்டதையும், இந்தப் பிரபஞ்சம் இவனது ஆத்மாவிற்கும் இவனது சரீரத்திற்கும் இடையே தோற்றுவிக்கப்பட்டதையும் இன்ஸான் இத்தானத்தில் விளங்கிக் கொள்கிறான். இது ஆறாம் குறிப்பாகும்.

ஹக்கு, இன்ஸானுக்கு தன்னின்றும் ஊதிய ஆன்மா ஹக்கின் முதற்படைப்பாகும். அதுவே ரூஹுல் குத்ஸி என்ற பரிசுத்த ஆவியாகும். பிரபஞ்ச வஸ்துகள் இடையில் தோன்றியவை.

இன்ஸானுடைய சரீரம் கடைசியில் படைக்கப்பட்டதாகும். இதனுடைய இரகசியத்தை இன்ஸான் விளங்க வேண்டிய தானமே ஆலம் இன்ஸானாகும்.

இந்த இரகசியத்தை இத்தானத்தில் இன்ஸான் விளங்கிக் கொண்டால் அவன் அல்லாஹ்வின் கலீபா ஆவதற்கு சேகரிக்க வேண்டிய தங்கரிப்புகளை இத்தானத்தில் சேகரித்துக் கொள்வான்.

பரிசுத்த ஆவியில் தரிபட்டிருந்த தத்துவங்களை ஆலம் அர்வாஹில் இறைவன் வெளிப்படுத்தி அவைகளுக்கு காரண சரீரத்தையும், ஆலம் மிதாலில் சூக்கும சரீரத்தையும் ஆலம் அஜிஸாமில் ஸ்தூல சரீரத்தையும் அளித்தான். இம்மூன்று ஸ்தானமும் படைக்கப்பட்டவை என்பதாயிற்று.

படைக்கப்பட்டவை சம்பூரண அறிவைப் பெறாததால் அஞ்ஞானத்தின் காரணமாக அவற்றின் மூலத்தை அறியாதிருந்தன. ஸ்தூல சரீரத்தையும், அதனை இயக்கும் ஜீவனை (உயிர்)யும் நான் என நம்பின.

பிரபஞ்ச வஸ்துக்கள் பஞ்ச பூதங்களால் ஆனது. இவை மூலத்தை அறிந்து அதில் ஐக்கியப்பட வேண்டும் என்பதற்காக பஞ்ச பூதங்களால் இறைவன் மனிதனது ஸ்தூல சரீரத்தையும், அதனை இயக்கும் ஜீவனையும் படைத்து ஜீவன் மூலத்தை அறிந்து ஐக்கியப்பட தன்னின்றும் பரிசுத்த ஆவியை மனிதனில் தரிபடுத்தினான்.

மனிதன் அஞ்ஞானத்தின் காரணமாக ஸ்தூல சரீரத்தையும், அதனை இயக்கும் ஜீவனையும் நான் என நம்புகிறான். அப்படியானால் மனிதனது ஸ்தூல சரீரமும் அதனை இயக்கும் ஜீவனும் மனிதன் இல்லையா என்ற கேள்வி எழும். அதற்கு விடையாவது:

நாம் பிறப்பதற்கு முன்பு ஸ்தூல தேகம் நம் தோற்றத்தில் இல்லை. நாம் இறந்த பின்பும் இத்தேகம் நிலைத்திருப்பதில்லை. கனவு நிலையிலும், உறக்கத்திலும் இத்தேகம் நமக்குத் தெரிவதில்லை. விழிப்பில் மட்டும் தெரிகிறது. அப்படியானால், விழிப்பில் மட்டும் தெரியும் இந்த உடல் நாம் ஆவோமா?

இவ்வுடலின் ஒவ்வொரு அங்கத்திற்கும் நாம் ஒவ்வொரு பெயரிட்டு அழைக்கிறோம். நமக்கு இட்ட பெயர் கொண்டு நம் உடலின் எந்த அங்கத்தையும் அழைப்பதில்லை.

ஆனால் உடல் அவயங்கள் எல்லாவற்றையும் சேர்த்து "நான்" என்று யூகித்துச் சொல்கிறோம். இந்த யூகம் சரியா? ஒருவன் இறந்தபின் அவன் உடல் இருப்பதை நாம் பார்க்கிறோம். பார்த்தாலும் அவன் இறந்தபின் அவன் உடலை அவன் பெயர் கொண்டு அழைப்பதில்லை. "சவம்" "மய்யித்து" என்றே அழைக்கிறோம்.

அப்படியானால் இந்த உடல் நாம் அல்ல. ஒருவர் நம்மிடம் பேசும்போது, நம் மனம் வேறோர் கவனத்தில் இருந்தால், அவர் பேசுவதை நாம் கிரகிப்பதில்லை.

பேசுபவர் முன்புக்கு நம் உடல் முழுவதும் இருக்கிறது. நம் முகம் அவர் பேச்சைக் கேட்பது போல் முன்னோக்குகிறது. இருப்பினும் அவர் பேசுவதை நாம் கிரகிப்பதில்லை. “என் மனம் வேறோரிடத்தில் சென்றதால் உங்கள் பேச்சை நான் கவனிக்கவில்லை“ என்கிறோம். அப்படியானால் இந்த உடல் நாம் அல்ல. மனதுதான் நாம் எனத்தோன்றும். அதாவது உண்மையா?

உறங்கும்போது அந்த மனமும் வேலை செய்வதில்லை. தூக்கத்தில் உடலும், மனமும் தூங்குகிறது. ஆனால் விழித்தவுடன் நன்றாகத் தூங்கினேன் என்று சொல்கிறோம். இதை மனம் சொல்லவில்லை.

ஆகையால் மனமும் நாம் இல்லை. அப்படியானால் இதை சொல்வது எது? நன்றாகத் தூங்கியதற்கு சாட்சியாகவும் நித்திரையின் சுகத்தை அனுபவித்ததுமான ஆத்மாவே இவ்விதம் சொல்கிறது.

விழிப்பில் நம் புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவியும் அந்தகரணமாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரமும் வேலை செய்கிறது. கனவில் புலன்கள் வேலை செய்வதில்லை. அந்தகரணம் மட்டும் அப்போது வேலை செய்கிறது. ஆழ்ந்த தூக்கத்தில் அந்தகரணமும் வேலை செய்வதில்லை. அப்படியானால் இவையெல்லாம் நாம் அல்ல. இவைகளை இயக்கும் ஆத்மாவாகிய ஏக அறிவே நாம் என உணர்கிறோம்.

இதை ஒருவர் உணர்ந்தால் ஏக அறிவே அநேகமாய்த் தோன்றுகிறது என்பதைத் தெரிந்து கொள்வான்.

“ஒன்றுமாய்ப் பலவுமாகி யுருவமா யருவமாகித்

தொன்றுமாய்ப் புதிதுமாகித் தூரமாய்ச் சமீபமாகி

யின்றுமா யென்றுமாகி யிருளுமாயொளிமாகி

நன்றுமாய்த் தீதுமாகி நயந்தரும் பொருளே போற்றி“

ஏகமே, அநேகமாய்த் தோன்றுகிறது என்ற உண்மையைத் தெரியும் ஒருவன் தன்னைத்தேகத்தின் அளவில் பார்க்காமல் தன்னை எல்லையற்றவனாகவே காண்பான். இதன் காரணமாகவே என் தந்தையார் ஞானப்பிரகாச ஆசிரியர் அவர்கள், “தன்னைத் தேகத்தின் அளவில் காண்பவன் போலி மனிதன் என்றும் தன்னை எல்லையற்றவனாகக் காண்பவன் பூரண ஞானி“ என்றும் ஞானப்பிரகாச நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒருவன் தன்னை நாம ரூபத்தில் கட்டுப்படுத்திக் கொண்டு தேகத்தின் அளவில் காணக்கூடாது என்றும் அண்டமெல்லாம் தானாய் அறிவின் சொரூபமாகக் காணவேண்டுமென்றும் என்தந்தையார் அவர்கள் இயற்றிய பராபரக்கண்ணியில் பாடியுள்ளார்கள்.

நாம ரூபமுள்ளவிடம் நரகமென்று நவின்றதினால்

போம்படிக்கு ஞானமதை புகட்டாய் பாராபரமே

அண்டமெல் லாந்தானாய் அறிவின் சொரூபமாக

கண்டு கொள்ளக் கருத்தே கண்ணே பராபரமே"

ஏகம் அநேகமாய்த் தோன்றியதை அறியும் பாதை இவ்வாறிருக்க "சர்வமும் ஹக்கு" என்ற சித்தாந்தத்தை விளங்கிக் கொள்ளாத சிலர் தங்களை நாம ரூபத்தில் கட்டுப்படுத்தி "நானும் ஹக்கு" என்று சொல்லித் தங்கள் மனம்போன போக்கில் ஜீவ அகங்காரத்தில் ஷரியத் தடை விதிக்கும் காரியங்களை எல்லாம் தமோ குண மூர்க்கத்தால் செய்து "நாசூத்" என்ற மகாமில் நப்ஸ் அம்மாராவில் மூழ்கிக் கிடக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் "சர்வமும் ஹக்கு" என்ற சித்தாந்தத்தை விளங்கிக் கொண்டவர்கள் அல்லர். இவர்களுக்கு நரகம் கூலி என்று அல்லாஹ் எச்சரிக்கை செய்கிறான்.

وَمَن يَقُلْ مِنْهُمْ إِنِّي إِلَٰهٌ مِّن دُونِهِ فَذَٰلِكَ نَجْزِيهِ جَهَنَّمَ ۚ كَذَٰلِكَ نَجْزِي الظَّالِمِينَ

குர்ஆன் 21:29 : "இன்னும் அவர்களில் எவரேனும் அவனன்றி நிச்சயமாக நானும் நாயன்தான் என்று கூறுவாரேயானால் அத்தகையவர்களுக்கு நாம் நரகத்தையே கூலியாகக் கொடுப்போம். இவ்வாறே நாம் அநியாயக்காரர்களுக்குக் கூலி கொடுப்போம்."

எவனொருவன் இன்மையைக் கொண்டு உண்மையை வாங்கியிருக்கிறானோ, அவனுக்கு மட்டும் சர்வ வியாபகமாக இருந்து "நான்" என்று சொல்வது "ஹக்கு" என்ற அறிவைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதரருக்குக் கூறக் கூடாது. ஏனென்றால் இப்பாதை எத்தகையோனும் கீழும், மேலும் பார்த்துத் தட்டழியக் கூடிய பாதையாயிருக்கிறது.

எவனொருவன் தன்னை முஜ்மல் ஆகிய சமஸ்டி அல்லது தொகுப்பாகவும், முபஸ்ஸல் ஆகிய வியஷ்டி அல்லது வகுப்பாகவும் இந்த இல்மு ஆகிய அத்துவித கல்வி ஞானத்தை அடையப் பெறவில்லையோ அவருக்கு இந்த ஞானத்தை கற்றுக் கொடுக்கக் கூடாது.

ஏனென்றால் அவனது தவ்ஹீதில் மாசு படிந்திருக்கிறது. கண்டமானது ஒரு வடிவம் கொண்டதாயும் அதன் அகமியம் அகண்டமாயுமிருக்கிறது. குமிழினுடைய கண்டிப்புகள் நீங்கியதும் அது தன்னை சமுத்திரமாக உணர்கிறது. இதன் அர்த்தம் வெற்று விவாதங்களால் மனதில் அமைவது அன்று. இதன் விளக்கத்தை சரியாக விளங்கிக் கொள்ளாதவர்கள் சர்வமும் ஹக்கு என்று சொல்லக் கூடாது.

இப்படிப்பட்டவர்கள் விஸ்வாஸத்தை பற்றி அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி அவர்களின் கருத்தாவது: “சிருஷ்டியாளனையும், சிருஷ்டிகளையும் மேலானவற்றையும், கீழானவற்றையும், துரத்தப்பட்டவனையும், முனியப்பட்டவனையும் அல்லாஹ் தான் என்று விசுவாசிப்பது பித்தர்களுககு கூட பொருத்தமற்ற பேச்சாகும்“ என்பதே.

இதன் கருத்து என்னவென்றால், அல்லாஹ்வை வகைவடிவம் ஒவ்வொன்றிலும் கண்டப்படுத்தி “ஹக்கு“ என்று சொல்வது கூடாது என்பதுதான். எல்லையற்ற ஏக நாயனை ஒரு குறிப்பில் கட்டுப்படுத்தும்போது “அல்லாஹ் அல்லாதவை“ ஆகிறது.

அவ்விதம் கட்டுப்படுத்துவது சொரூபத்தில் ஆனாலும் சரியே. அரூபத்தில் ஆனாலும் சரியே. “சர்வமும் ஹக்கு“ என்ற சித்தாந்தத்தை கடைபிடிப்பவர்கள் ஷெய்குல் அக்பர் முகைதீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டபடி ஹக்கை திட்டப்படுத்த வேண்டும்.

ஹக்கைப் பற்றி அவர்கள் கருத்தாவது: “நீ தன்ஸீஹாக்கிப் பேசினால் கட்டுப்படுத்திவிட்டாய். தஸ்பீஹ் ஆக்கிப் பேசினால் மட்டுப்படுத்தி விட்டாய். தன்ஸீஹ் மஹ்லாவாகப் பேசினால் நேர்வழியிலானாய். அறிவுடையோர்க்கு வழிகாட்டும் தலைவன் ஆனாய்“ என்பதே.

அல்லாஹ்வை ரூபத்தில் கட்டுப்படுத்தினால் அவனை ஓர் எல்லையில் கட்டுப்படுத்தல் என்றாகிவிடும். அரூபத்தில் கட்டுப்படுத்தினால் அரூபத்தில் அவனை மட்டுப்படுத்தல் என்றாகிவிடும். ரூபமும், அரூபமும் அவனே.

இந்நிலைகள் இரண்டிலும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் இந்த நிலைகள் இரண்டையும் அவன் கடந்தவனாகவுமிருக்கிறான். தன்ஸீஹ் மஹ்லா என்னும் கலப்பற்ற தூய்மையாக அவனை அறிவதே ஹக்கைப் பற்றி அறிவதாகும்.

எனவே, ஏகமும், அநேகமும் அவனே. கடவுள் ஒரு வஸ்துவோடும் கலந்ததில்லை. கடவுளோடு ஒரு வஸ்துவும் கலந்ததில்லை. கடவுளைத் தவிர ஒன்றுமில்லை.

## அத்தியாயம் 9

### சர்வமும் பிரம்ம மயம்

கடவுளைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும், மனிதப் படைப்பைப் பற்றியும், ரூஹைப் பற்றியும், இவை சம்பந்தமாக துவைதிகள், விஷிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள் இவர்களின் கொள்கைகளைப் பற்றியும், இந்நூல் முன் அத்தியாயங்களில விபரித்துள்ளோம்.

உலகில் தோன்றிய எல்லா வேதங்களும், ஞான மார்க்கத்தையும், பக்தி மார்க்கத்தையும் போதிக்கக் கூடியதாகவே இருக்கிறது. ஆனால் அம்மதங்களைப் பின்பற்றுவோரில் அநேகர், பக்தி மார்க்கத்தை மட்டும் கடைபிடிக்கின்றனர். ஞானமார்க்கத்தை கடைபிடிப்பதில்லை. காரணம் அவர்கள் ஞான மார்க்கத்தை விளங்கிக் கொள்ளாததே.

இஸ்லாமியர்களில் கூட அநேகர் இஸ்லாத்தில் ஞானமார்க்கமில்லை என்றே சாதிக்கின்றனர். இஸ்லாம் ஞான மார்க்கத்தையும், பக்தி மார்க்கத்தையம் போதிக்கிறது எனப்தை முன் அத்தியாயங்களில் விளக்கியுள்ளோம். ஞானத்திற்காகவே மார்க்கம் ஏற்பட்டதே அல்லாது, மார்க்கத்திற்காக ஞானம் ஏற்படவில்லை.

ஞானம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

படைப்பின் முதல்வராம் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் படைத்ததின் நோக்கமே அவர்கள் ஞான மார்க்கத்தையும், பக்தி மார்க்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகதான். உலகில் படைக்கப்பட்ட வஸ்துக்கள் யாவும் அல்லாஹ்வை வணங்குகின்றன.

تُسَبِّحُ لَهُ السَّمَاوَاتُ السَّبْعُ وَالْأَرْضُ وَمَن فِيهِنَّ ۚ وَإِن مِّن شَيْءٍ إِلَّا يُسَبِّحُ بِحَمْدِهِ وَلَٰكِن لَّا تَفْقَهُونَ تَسْبِيحَهُمْ

குர்ஆன்: 17:44 : “ஏழு வானங்களும், பூமியும் அவற்றில் உள்ளவையும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றன. இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை.“

وَلِلَّهِ يَسْجُدُ مَن فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ طَوْعًا وَكَرْهًا وَظِلَالُهُم بِالْغُدُوِّ وَالْآصَالِ

குர்ஆன் 13:15 : “ வானங்களிலும், பூமியிலும் இருப்பவையெல்லாம் விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்(து சிரம் பணி)கின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும், மாலையிலும் (ஸஜ்தா செய்கின்றன)“

وَلِلَّهِ يَسْجُدُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ مِن دَابَّةٍ وَالْمَلَائِكَةُ وَهُمْ لَا يَسْتَكْبِرُونَ

குர்ஆன் 16:49: “வானங்களில் உள்ளவையும், பூமியிலுள்ளவையும் -ஜீவராசிகளும், மலக்குகளும் அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்து (சிரம் பணிந்து வணங்குகின்றன) அவர்கள் (ஆணவம் கொண்டு) பெருமையடிப்பதில்லை.“

உலகில் படைக்கப்பட்ட வஸ்துக்களைப் போல் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அல்லாஹ்வை வணங்க வேண்டுமென்பதற்காக நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் படைக்கவில்லை.

அல்லாஹ் யார்? பிரபஞ்சங்களின் உண்மைநிலை என்ன? என்பதை வளங்கி அல்லாஹ்வின் பிரதிநிதியாக ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களைப் படைத்தான்.

அல்லாஹ்வின் பிரதிநிதி என்றால் அவர் படைத்தவனுக்கும், படைக்கப்பட்டவைகளுக்கும் மத்திபம் ஆகிறார்.

ஆகையால் படைக்கப்பட்ட வஸ்துக்களின் உண்மையையும் அவர் தெரிய வேண்டும். படைத்தவனையும் அவர் தெரிய வேண்டும். இவர்தான் அல்லாஹ்வின் பிரதிநிதியாக ஆக முடியும்.

உலகில் படைக்கப்பட்ட வஸ்துக்கள் அனைத்தையும் அல்லாஹ் பஞ்ச பூதங்களால் படைத்து "குன்" என்ற கட்டளை மூலம் அல்லாஹ் அவர்களை வெளிப்படுத்தி இயங்கச் செய்தான்.

ஆனால் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் அவ்விதம் படைக்கவில்லை. "பூமியில் எனது கலீபாவை அமைக்கப் போகிறேன்" என்று அல்லாஹ் மலக்குகளிடம் அறிவித்ததற்கு மலக்குகள் "இறைவா! குழப்பத்தை உண்டாக்கி இரத்தம் சிந்துவோரையா பூமியில் உன் கலீபாவாக நியமிக்கப் போகிறாய்" என்று கேட்டனர். "நீங்கள் அறியாததை நான் நிச்சயம் அறிவேன்" என்று அல்லாஹ் அதற்கு பதிலளித்தான்.

அல்லாஹ் அறிவித்து கொடுத்ததைத்தான் தத்துவங்கள் உணர முடியும். மறைபொருளை தத்துவங்கள் அறியமுடியாது. அல்லாஹ் அதனை தத்துவங்களுக்கு அறிவித்துக் கொடுத்தாலொழிய.

ஆனால் அல்லாஹ்வின் ஏக அறிவாகிய இர்பான் என்ற ஞானம் மறைபொருளை அறிய முடியும். ஏனென்றால், அது ஹக்குடைய சம்பூரண அறிவாக இருப்பதால், அல்லாஹ்வை அறிய வேண்டும் என்பதற்காக நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் படைத்ததால் அதை அறிவதற்குரிய சம்பூரண ஞானத்தை அல்லாஹ் தன்னின்றும் நபி ஆதமில் தரிபடுத்தினான். அதுவே அல்லாஹ்வுடைய ரூஹாகும்.

சூரியனைக் கொண்டுதான் ஒரு சூரியனைப் பார்க்க முடியும். அதுபோல அல்லாஹ்வை கொண்டுதான் அல்லாஹ்வை அறிய முடியும். அல்லாஹ்வுடைய கலீபா அல்லாஹ்வை அறிந்தோராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் தன்னுடைய ரூஹை, ஏக அறிவை நபி ஆதமில் ஊதினான்.

அம்மட்டோடு நின்று விடவில்லை. மலக்குகள் அனைவரையும் அவனுடைய கலீபாவிற்கு சாஷ்டாங்கம் செய்யும்படியும் கட்டளையிட்டான். மலக்குகளும் அவ்வாறே சாஷ்டாங்கம் செய்தனர். இவ்விதம் அல்லாஹ் தன்னுடைய கலீபாவை கண்ணியப்படுத்தினான்.

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அவர்களில் தரிபடுத்திய ஏக அறிவின் மூலம் படைத்தவனாகிய அல்லாஹ்வையும் அறிந்தார்கள். படைக்கப்பட்ட வஸ்துக்களின் உண்மையையும் அறிந்தார்கள்.

அவர்கள் பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடித்து ஜெயம் பெற்றதால் அல்லாஹ்வின் கலீபா என்று அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டார்கள். ஆதமில் ஊதப்பட்ட அவனது அதே ரூஹைத்தான் மனிதனுக்கும் அல்லாஹ் ஊதியுள்ளான்.

குர்ஆன் 32:7,8,9: " அல்லாஹ் தன்னினின்றும் மனிதனுக்கு ரூஹை ஊதியதின் காரணமாகவே, "நான் மனிதனை மேலினும் மேலாகப் படைத்தேன்" எனக் குர்ஆனில் சொல்கிறான்.

ஆதம் நபி அவர்கள் அல்லாஹ்வின் பரிசுத்த ஆவியைக் கொண்டு என்ன பாக்கியம் பெற்றுக் கொண்டார்களோ அதனை ஆதமடைய சந்ததிகளாகிய நாமும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அல்லாஹ்வின் நாட்டம்.

இன்ஸானில் யார் இப்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் யாவரும், இன்ஸான் காமிலாக – அல்லாஹ்வின் கலீபாவாக ஆகிறார்கள். இதனை அடைவற்கு ஒவ்வொரு மனிதனும் பக்தி ஞானத்தையும், தத்துவ ஞானத்தையும் விளங்கி அதனைக் கடைபிடித்தாக வேண்டும்.

பக்தி மார்க்கத்தை பொறுத்தவரை ஷரீஅத் சட்டதிட்டங்களை அனுஷ்டித்துக் கொள்ளலாம். தத்துவஞானத்தை அடைய இஜாதியா, சுஹூதியா, வுஜூதிய்யா இவ்வகுப்பாரில் எவ்வகுப்பாரின் கொள்கையைப் பின்பற்றுவது என்ற கேள்வி எழுவது நியாயமே!

படைக்கப்பட்ட வஸ்துக்களின் உள்ளமை வேறு. ஹக்குடைய உள்ளமைவேறு என்ற கொள்கையுடையவர்கள் இஜாதியாக்களும், சுஹூதிய்யாக்களும் ஆவார். "குன்" என்ற கட்டளையை அல்லாஹ் இன்மையை நோக்கியே சொன்னான் என்பது இவர்களது கருத்தாகும்.

ஆகையால் பிரபஞ்சத்தை இறைவன் இன்மையிலிருந்து படைத்தான் என்பது இவர்களின் கொள்கை. இறைவனோ, பிரபஞ்சத்தை உண்மையிலிருந்தே படைத்ததாகக் குர்ஆனில் கூறுகிறான்.

குர்ஆன்: 14:19, 16:3, 15:85, 29:44, 64:3 பிரபஞ்சம், ஹக்குடைய உள்ளமையிலிருந்தே வெளிப்பட்டதென்றும் பிரபஞ்சத்தின் உள்ளமையும் ஹக்குடைய உள்ளமையும் ஒன்றுதான் என்றும் வுஜூதிய்யாக்கள் கருதுகின்றனர்.

முக்காலமும் உள்ளதே உண்மைப் பொருள். ஹக்குடைய உள்ளமையே எக்காலமும் உள்ளது. பிரபஞ்ச வஸ்துக்கள் ஒவ்வொன்றும் ஹக்கின் அறிவில் தரிப்பட்டிருந்த தத்துவங்களின் கோலமாகும். ஹக்குடைய உள்ளமையின் சம்மந்தமில்லாமல் அவைகள் வெளிப்பட முடியாது.

எழுத்துக்கள் இன்மையானது. அவைகள் சாயத்தின் உள்ளமையைக் கொண்டே வடிவத்தைப் பெறுகின்றன. அதுபோல ஹக்குடைய உள்ளமையைக் கொண்டே பிரபஞ்சங்கள் தோன்றுகின்றது. இது வுஜூதிய்யாக்களின் கொள்கையாகும்.

இஜாதியாக்களும், சுஹூதியாக்களும் மனித சரீரத்தில் தங்களைக் கட்டுப்படுத்தி அதனை இயக்கும் ஜீவனை நான் என்கிறார்கள். ஜீவாத்மா, ஷரீஅத் கட்டளைப் படி ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்த்து பக்தி ஞானத்தைக் கடைபிடித்து வந்தால் சொர்க்கத்தை அடையும். இதுவே மனிதனின் முக்தி நிலை. இதற்குமேல் மனிதனுக்கு பதவியில்லை என்று இவர்கள் கருதுகிறார்கள். இவர்கள் தியான அப்பியாசங்களை உள்ளமையை இரண்டு படுத்தியே செய்து வருகிறார்கள்.

ஏக அறிவில் ஒன்றித்திருந்த தத்துவங்கள் ஆலம் அர்வாஹில் தங்களுக்கென்று ஓர் கற்பனா உள்ளமையை ஏற்படுத்திக் கொண்டதால் அவைகள் காரண சரீரத்தையும், சூக்கும சரீரத்தையும், ஸ்தூல சரீரத்தையும் பெற்றன என்றும் இதுவே ஜீவனுக்குரிய முத்தேகம் என்றும் இந்த முத்தேகத்தை ஜீவன் கடக்காதவரை ஒரு ஜீவனுக்கு முக்தி ஏற்படாது என்றும் இம்முத்தேகத்தினின்று விடுபடவே அல்லாஹ் மனிதப்படைப்பைப் படைத்தான் என்றும் உஜூதிய்யாக்கள் கருதுகின்றனர்.

எனவே இம்முத்தேகம் நான் இல்லை என்றும், ஏக அறிவே நான் என்று திட்டப்படுத்தி அதில் தரிபடவே இறைவன் ஏக அறிவாகிய பரிசுத்த ஆவியை மனிதனில் தரிபடுத்தியிருக்கிறான் என்று உஜூதிய்யாக்கள் கருதுகின்றனர்.

இவர்கள் மனித சரீரத்தையும் அதனை இயக்கும் ஜீவனையும் ஹக்குடைய கருவியாகக் கருதி பக்தி ஞானத்தை ஷரீஅத் சட்டப்படி நிறைவேற்றுகின்றனர்.

ஜீவன் அது ஏற்படுத்திக் கொண்ட கற்பனா உள்ளமையை நாஸ்தியாக்க தன்னில் இருக்கும் ஏக அறிவில் ஜீவன் ஒன்றித்து விட்டதாக சிந்தித்து தியான அப்பியாசங்களை செய்து வருகின்றனர்.

இவ்விதம் தியான அப்பியாசங்கள் செய்து வந்தால் மனித சரீரம் இருக்கும்போதே ஜீவ பிரம்ம ஐக்கியம் ஏற்படும் என்றும் இதன் பயனாக மனித சரீரத்தை விட்டு ஜீவன் பிரியும் போது அதாவது மௌத் ஏற்படும்போது மனித ஜீவனை ஏக அறிவு தன்னோடு பொருந்திக் கொள்ளும் என்று உஜூதியாக்கள் கருதுகின்றனர்.

يَا أَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ. ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً. فَادْخُلِي فِي عِبَادِي. وَادْخُلِي جَنَّتِي.

குர்ஆன் 89:27 முதல் 30 வரை: “ சாந்தி அடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய ரப்பின்பால் திருப்தி அடைந்த நிலைமையிலும்(அவன்) உன்மீது திருப்தி அடைந்த நிலைமையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களுடன் சேர்ந்து கொள்வாயாக. மேலும் நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக(என்று இறைவன் கூறுவான்)“

ஜீவாத்மா என்று ஒன்று இருந்தால்தானே அது ஏக ஆன்மாவில் ஐக்கியப்பட வேண்டும்? உஜூதிய்யாக்களின் கொள்கைப்படி இருப்பது ஒரு ஆத்மாதானே என்ற கேள்வி இங்கு எழுவது நியாயமே.

ஹக்கின் உள்ளமைக்கு அந்நியமாக தனக்கோர் உள்ளமையை உடைய ஜீவாத்மா இல்லை என்பதே உஜூதிய்யாக்களின் கொள்கை. தத்துவம் கோலத்தைப் பெறும்பொழுது இறைவன் அதை ஆத்மா என்றே அழைக்கிறான்.

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ

குர்ஆன் 21:35: " ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை சுவைப்பதாகவே இருக்கிறது...."

وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا

2:123: "இன்னும் அந்நாளிலிருந்து உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அன்று ஓர் ஆத்மா பிரிதொரு ஆத்மாவுக்கு உதவி செய்ய இயலாது...."

الْيَوْمَ تُجْزَىٰ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ ۚ لَا ظُلْمَ الْيَوْمَ ۚ إِنَّ اللَّهَ سَرِيعُ الْحِسَابِ

40:17: " அந்நாளில் ஒவ்வொரு ஆத்மாவும் அது சம்பாதித்ததற்கு கூலி கொடுக்கப்படும்..."

எனவே மனித சரீரத்தை இயக்கும் ஜீவன், அது ஏற்படுத்திக் கொண்ட கற்பனா உள்ளமையை ஏக அறிவில் நாஸ்தியாக்கி "ஏக அறிவே நான்" என்று தியான அப்பியாசங்கள் செய்து வந்தால் அது ஹக்குடைய ஜமாலைத் தரிசிக்கும் என்றும்,

இதனை ஒவ்வொரு மனிதனும் சரீரம் இருக்கும்போதே தரிசித்து வரவேண்டும் என்றும், இதுவே மனிதனுக்கு முக்தி நிலை என்று உஜூதிய்யாக்கள் கருதுகின்றனர்.

எனவே ஹக்கின் கருவியாக இருந்து பக்தி ஞானத்தையும், ஏக அறிவாக இருந்து தத்துவ ஞானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். அல்லாஹ்வை நம்பி வணங்கினால் போதும். அவனது தரிசனை இவ்வுலகில் கிடைக்கக் கூடியதில்லை என்பது இஜாதிய்யா, சுஹூதிய்யா இவர்களின் கொள்கையாகும்.

ஹக்குடைய ஜமாலை இவ்வுலகில் தெரிசித்தால் தான் அல்லாஹ்வை மறுமையில் தெரிசிக்க முடியும். ஆகையால் ஹக்குடைய ஜமாலை இவ்வுலகில் தெரிசித்தே ஆக வேண்டும் என்பது வுஜூதிய்யாக்களின் கொள்கை. மனிதனை அல்லாஹ் கலீபாவாக நியமித்துள்ளான்.

அல்லாஹ்வுடைய கலீபா அல்லாஹ்வை அறிந்துதான் ஆகவேண்டும். இல்லையென்றால் அவனைக் கலீபாவாக ஹக்கு நியமித்ததில் அர்த்தமே இல்லை. சூரியனைக் கொண்டுதான் சூரியனை அறிய முடியும். அதுபோல் ஹக்கைக் கொண்டுதான் ஹக்கை அறிய முடியும்.

www.sufimanzil.org

அதனால் அவனை அறிய அவனது பரிசுத்த ஆவியை மனிதனில் அல்லாஹ் தரிபடுத்தியுள்ளான். ஆகவே அல்லாஹ்வை அறிந்து வணங்கவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பது தெளிவாகிறது.

***அல்லாஹ்வை அறிய வழிகாட்டும் சுஹூதிய்யாக்களின் கொள்கையே இஜாதிய்யா, சுஹூதிய்யா இவர்களின் கொள்கையைவிட சிறப்புடையதாகும்.*** ஒருவன் திரை நீங்கி ஹக்குடைய ஜமாலை தரிசிக்காது போனால் அவன் இவ்வுலகிலும் குருடன். மறுமையிலும் குருடனே.

وَمَن كَانَ فِي هَٰذِهِۦٓ أَعۡمَىٰ فَهُوَ فِي ٱلۡأٓخِرَةِ أَعۡمَىٰ وَأَضَلُّ سَبِيلٗا

குர்ஆன் 17:72: " எவன் இவ்வுலகில் குருடனாக இருக்கின்றானோ அவன் மறு உலகிலும் குருடனாகவே இருப்பான்."

திரை நீங்கியவர்களே அல்லாஹ்வின் ஜமாலை இவ்வுலகில் தெரிசிக்க முடியும். அப்படியானால் திரை என்பது எது? அது எப்போது ஏற்பட்டது? அதை நீக்குவது எப்படி? என்பதை இனி கவனிப்போம்.

"ஏக ஆன்மாவே நான்" என்ற உண்மையை மறந்து தேகத்தையும், ஜீவனையும் "நான்" என அபிமானிப்பவர்கள் "மாய்கை" என்னும் திரையில் சிக்கிக் கொள்கிறார்கள். உலகம் மாறக்கூடியது. இறுதியில் அழியக் கூடியது என்று வேதம் கூறுவதை மனிதன் தெரிந்திருந்தும் உலகம் நிலைத்திருப்பது போல வாழ்கிறான். இதுவே மாயை.

பஞ்சபூதங்களால் ஆகிய மாமிச சரீரம் நிலைக்கக் கூடியதில்லை என்பதை மனிதன் தெரிந்திருந்தும் அது நிலைத்திருப்பது போல் எண்ணி வாழ்கிறான். இதுவே மாய்கை. இவ்வுலக வாழ்க்கையை மறுமைக்கு ஒப்பிட்டால் அற்பமானது என்பதை வேதம் எச்சரித்தும் இவ்வுலக வாழ்க்கையை நீண்டகால வாழ்க்கையாகக் கருதி மனிதன் வாழ்கிறான். இதுவே மாயை.

وَفَرِحُواْ بِٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا وَمَا ٱلۡحَيَوٰةُ ٱلدُّنۡيَا فِي ٱلۡأٓخِرَةِ إِلَّا مَتَٰعٞ

குர்ஆன்: 13:26: " .............இவ்வுலக வாழ்க்கையோ மறுமைக்கு ஒப்பிட்டால் மிகவும் அற்பமேயன்றி வேறில்லை."

"மாயை" என்பது நிஜ ரூபத்தைத் தெரியாத மயக்கமாகும். இதனை அத்யாரோப, அபவாத யுக்திகள் மூலம் அறிந்து கொள்ளலாம். கானலானது ஜலமாகத் தோன்றும்போது அதை உண்மையாகவே ஜலமெனக் கருதிக் கண்டு மருள்வது அத்யாரோபமாகும்.

பின்பு உண்மை விளங்கி, கானலேயன்றி ஜலமல்ல என்று தெளிவது அபவாதமாகும். இருட்டில் கிடக்கும் கயிற்றைப் பாம்பெனக் கண்டு மருள்வது அது பாம்பல்ல என்று தெளிவது அபவாதமாகும்.

மாய்கை என்பது திரை போன்றது. இருவர்க்கிடையில் திரை ஒன்றிருந்தால் ஒருவரை மற்றொருவர் பார்க்க முடியாது. அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து ஆகிய மூன்று மர்தபாக்களிலும் தத்துவங்கள் ஏக ஆன்மாவில் ஒன்றித்திருந்ததால் அங்கு மாய்கை ஏற்படவில்லை.

ஆலம் அர்வாஹில் ஏக ஆன்மாவினின்றும் தத்துவங்கள் தனித்தனியாக பிரியும்போதுதான் தத்துவங்களிடையே மாய்கை சூழ்ந்து கொண்டது. அதனால் தத்துவங்களுக்கு நிஜ ரூபத்தை தெரியாத மயக்கம் ஏற்பட்டது. *அதனால் தத்துவங்கள் தங்களுக்கென்று ஓர் உள்ளமையைக் கற்பனையில் ஏற்படுத்திக் கொண்டு ஒன்றுக்கு மற்றொன்று திரையாகிவிட்டது.*

தத்துவங்கள் ஒவ்வொன்றும் அதன் காரணமாக "நான் ஒரு ஜீவன்" என்ற காரண சரீரத்தை ஆலம் அர்வாஹில் போர்த்திக் கொண்டன. இது மாய்கையின் முதல் திரையாகும்.

அதன் பின் ஆலம் மிதாலில் காரண சரீரத்தை விருத்தி செய்ய "சூக்குமம் நான்" என்ற திரையை ஜீவன் ஏற்படுத்திக் கொண்டது. இது மாய்கையின் இரண்டாவது திரையாகும்.

சூக்குமத்தை ஜீவன் வெளிப்படுத்த நாடியபோது ஆலம் அஜ்ஸாமில் "ஸ்தூல தேகம் நான்" என்ற திரையை ஜீவன் ஏற்படுத்திக் கொண்டது. இது மாய்கையின் மூன்றாவது திரையாகும். இந்த மூன்று திரைகளும் "ஏக ஆன்மா நான்" என்பதை ஜீவனுக்குத் தெரியாமல் தடுக்கிறது.

இத்திரைகள் அஞ்ஞானத்தினால் ஏற்பட்டவை. இத்திரையை நீக்கவே இறைவன் மனிதனை இம்முத்தேகத்தினால் படைத்து அஞ்ஞானத்தினின்றும் மெஞ்ஞானத்தில் தரிபட தன்னின்றும் ரூஹை ஊதினான்.

இன்ஸானில் யார் "ஏக ஆன்மா நான்" என்று விளங்கி ஏக அறிவில் தரிபட்டுக் கொண்டார்களோ அவர்கள் இம்முத்தேகத்தையும் விட்டும் நீங்கியவர்களாக இருக்கிறார்கள்.

அவர்கள் "இன்சான் காமில்" என அழைக்கப்படுகிறார்கள். மற்ற மனிதர்கள் போலி மனிதர்கள். இவர்கள் ஏனைய பிரபஞ்சப் படைப்பைப் போல மாய்கையில் சிக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் திரை நீங்கி அல்லாஹ்வை தெரிசிக்கும்வரை இவர்களை மாய்கைத் தொடர்வதாகவே இருக்கிறது.

திரை நீங்காத மனிதர்களை மாய்கை எவ்வாறு தொடர்கிறது என்பதற்கு அப்துல் கரீம் ஜீலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "இன்ஸானுல் காமில்" என்ற நூலில் இவ்வாறு விளக்கம் தருகிறார்கள்:

“மனிதர்கள் இறந்ததும் இந்த மாய்கையை விட்டு விழித்தாலும், அவ்விழிப்பு சரியான விழிப்பாகாது. “ஆலம் பர்ஸக்“ ஆகிய திரைஉலகில் அருட்பேருகளும் உண்டு. தண்டனைகளுமுண்டு. அவைகளை அனுபவிப்பதும் மாய்கையாகவே இருக்கும்.

அதன்பின்பு மனிதர்கள் நியாயத் தீர்ப்பு நாளில் எழுப்பப்படும்போது அங்கு விழிப்பு, திரை உலகில் இருந்ததை விட அதிகமாக இருக்கும். இருந்தாலும் அங்கும் சரியான விழிப்பு ஏற்பட்டு விடவில்லை.

பின்பு சொர்க்கம் அல்லது நரகத்தில் முன்னைவிட விழிப்பு அதிகமாகும். சொர்க்கத்தில் இன்பங்களை அனுபவிப்பதிலோ நரகத்தில் வேதனையை அனுபவிப்பதிலோ கவனம் திரும்பி விடுவதால் அங்கும் விழிப்பு பூரணத்தைப் பெறாது.

சொர்க்கத்தில் அல்லாஹ்வின் தரிசனை உண்டாகும் தலத்திலதான் விழிப்பு சம்பூரணமாகத் தெரியும். அதுசமயம் பிரபஞ்சம், திரை உலகு, கியாமம், சுவர்க்கம், நரகம் அனைத்தும் மாய்கை என்பது திட்டமாகும்.

இவ்வுலகில் மனிதர்கள் உலக இன்ப துன்பங்களை அனுபவிப்பதில் கருத்தாயிருப்பார்கள். அந்தக் கவனம் உண்மையை மறைத்து இறைவன் தரிசனத்தை விட்டு வேறு பராக்காய் ஆக்குபவை. அனைத்தும் மாய்கையாகவே இருக்கும். இந்த மாய்கை நீங்கும்போதுதான் அல்லாஹ்வை தவிர்த்து வேறு எதுவுமில்லை என்பது திட்டப்படும்.“

திரை நீங்காத மனிதர்களுக்கு இந்த மாய்கை கியாமத்தில் நீடிப்பதை பின்கண்ட தெய்வத்திருவசனங்க்ள மெய்ப்பிக்கிறது.

وَيَوْمَ يَحْشُرُهُمْ كَأَن لَّمْ يَلْبَثُوا إِلَّا سَاعَةً مِّنَ النَّهَارِ يَتَعَارَفُونَ بَيْنَهُمْ

குர்ஆன் 10:45: “ அவன் அவர்களை ஒன்றுசேர்க்கும் நாளில், தாங்கள் ஒரு பகலில் சொற்பகாலமே இவ்வுலகில் தங்கியிருந்ததாக அவர்கள் எண்ணுவார்கள்.

كَأَنَّهُمْ يَوْمَ يَرَوْنَهَا لَمْ يَلْبَثُوا إِلَّا عَشِيَّةً أَوْ ضُحَاهَا

79:46 : “ நிச்சயமாக அதை அவர்கள் காணும்நாளில், மாலையிலோ, அல்லது காலையிலோ ஒரு சொற்ப நேரமேயன்றி அவர்கள் (இவ்வுலகில்) தங்கியிருக்கவில்லை என்று தோன்றும்.“

يَوْمَ يَدْعُوكُمْ فَتَسْتَجِيبُونَ بِحَمْدِهِ وَتَظُنُّونَ إِن لَّبِثْتُمْ إِلَّا قَلِيلًا

17:52 : “ உங்களை (இறுதியில்) அவன் அழைக்கும் நாளில், நீங்கள் அவன் புகழை ஓதியவர்களாகவே பதில் கூறுவீர்கள். (மரணத்திற்குப் பின்) சொற்ப(கால)மே தங்கியிருந்ததாக நீங்கள் நினைப்பீர்கள்.“

மனிதனது ஜீவியத்தில் மாய்கையாகத் தோன்றுவது மனமே. சர்வத்தையும் பிரமமாகப் பார்ப்பதை தடை செய்வதும் மனமே.

“மனமனம் எங்குண்டு மாயையும் அங்குண்டு

மனம் மனம் எங்கில்லை மாயையு மங்கில்லை

மனமாயை யன்றி மற்றொன்று மில்லை

பினையாய வேண்டா பிதற்றவு வேண்டா

தனையாத்திருப்பது தத்துவந்தானே“

உடலின் சகல செயல்களுக்கும் காரணகர்த்தாவாயிருப்பது மனம். மனிதன் மனதின் கருவியாகயிருந்து மனதின் நாட்டத்தை நிறைவேற்றுகிறான். மனம் என்பது பார்க்கப்படும் பொருள் அல்ல. எண்ணத்தின் குவியல்தான் மனம். மனம் பல்வேறு நாமங்களில் நம்மை மயக்குகிறது.

சங்கற்பவிகல்பம் செய்யும்போது அதன் பெயர் மனம். சிந்தித்து செயலாற்றும்போது அதன் பெயர் புத்தி. நான் என்ற மமதை ஏற்படும் போது அதன் பெயர் அகங்காரம். எண்ணங்களை உற்பத்தி செய்யும்போது அதன் பெயர் சித்தம்.

மனம், விழிப்புநிலை, கனவு நிலை, உறக்க நிலை என்ற மூன்று நிலைகளை உடையது. விழிப்பு நிலையில் பொருள்கள் மனதிற்கு வேறாக உள்ளன. கனவு நிலையில் கனவில் காணும் பொருள்கள் கனவுள்ளவரை இருக்கின்றன.

ஏனெனில் அவை யாவையும் கனவில் மனதே உற்பத்தி செய்கிறது. உறக்க நிலையில் மனம்வேலை செய்வதில்லை. ஆகையால் அந்நிலையில் எந்த எண்ணமும் ஏற்படுவதில்லை.

மனம் முக்குணங்களை பிரதிபலிக்கிறது. மனம் சலனமற்று இருந்தால் ஸத்வ குணத்தை பிரதிபலிக்கும். மனதில் நல்ல எண்ணங்கள் உதயமாகும்போது ரஜோ குணத்தைப் பிரதிபலிக்கும். தீய எண்ணங்கள் ஏற்படும்போது தமோ குணத்தைப் பிரதிபலிக்கும்.

மனம் யானையின் துதிக்கை போன்றது. யானையின் துதிக்கை சிறிது நேரம் கூட சும்மாயிருக்காது. யானைப்பாகன் ஒரு கட்டையை துதிக்கையில் வைத்துவிட்டால் துதிக்கையை சுழற்றுவதை நிறுத்திக் கொள்ளும்.

அதுபோல் மனம் ஓர்மைபட அப்பியாஸிகளுக்கு(முரீதுகளுக்கு) ஷெய்குமார்கள் தியான அப்பியாச முறையை கற்றுக் கொடுக்கிறார்கள். ஞானகுருமார்கள் உத்திரவுபடி முரீதுகள் செய்யும் ஞான அப்பியாசத்தில் மனது ஓர்மைப் படும். தியான அப்பியாசங்கள் மனதை ஓர்மிக்கச் செய்வதால்தான் தியானம் சக்தி வாய்ந்தது என்று இறைவன் நமக்கு அறிவிக்கிறான்.

اتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلَاةَ ۖ إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ ۗ وَلَذِكْرُ اللَّهِ أَكْبَرُ ۗ وَاللَّهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ

குர்ஆன் 29:45: "(நபியே!) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் எடுத்தோதுவீராக! இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக! நிச்சயமாக தொழுகை(மனிதனை) மானக்கேடானவற்றையும், தீமையை விட்டும் விலக்கும். நிச்சயமாக அல்லாஹ்வின் திக்ரு மிகவும் பெரிதானதாகும். அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிகிறான்."

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا

33:41: " ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமான திக்ரைக் கொண்டு, திக்ரு செய்யுங்கள்."

وَاذْكُر رَّبَّكَ فِي نَفْسِكَ تَضَرُّعًا وَخِيفَةً وَدُونَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْآصَالِ وَلَا تَكُن مِّنَ الْغَافِلِينَ

7:205: "(நபியே!) நீர் உம் மனதிற்குள் மிக்கப் பணிவோடும், அச்சத்தோடும் (மெதுவாக) உரத்த சப்தமின்றி காலையிலும், மாலையிலும் உம் இறைவன் திருநாமத்தை திக்ரு செய்து கொண்டிருப்பீராக!"

فَإِذَا قَضَيْتُمُ الصَّلَاةَ فَاذْكُرُوا اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَىٰ جُنُوبِكُمْ ۚ فَإِذَا اطْمَأْنَنتُمْ فَأَقِيمُوا الصَّلَاةَ ۚ إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَّوْقُوتًا

4:103: "நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், விலாப்புறங்களின் மீது படுத்திருக்கும் நிலையிலும் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்...."

وَلَا تَطْرُدِ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُم بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ ۖ مَا عَلَيْكَ مِنْ حِسَابِهِم مِّن شَيْءٍ وَمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِم مِّن شَيْءٍ فَتَطْرُدَهُمْ فَتَكُونَ مِنَ الظَّالِمِينَ

குர்ஆன் 6:52: "(நபியே!) தங்கள் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடி, எவர் காலையிலும், மாலையிலும் அவனை பிரார்த்தித்து அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை நீர் விரட்டி விடாதீர். அவர்களுடைய கேள்வி கணக்கு பற்றி உம்மீது பொறுப்பில்லை. உம்முடைய கேள்வி கணக்கு பற்றி அவர்கள் மீது யாதொரு பொறுப்புமில்லை. எனவே நீர் அவர்களை விரட்டி விட்டால் நீரும் அநியாயம் செய்பவர்களில் ஒருவராகி விடுவீர்"

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி திக்ரு செய்பவர்களை நபி அவர்கள் விரட்டிவிடக் கூடாது என்று நபி அவர்களுக்கு அல்லாஹ் அறிவிப்பது மூலம் திக்ரு எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

மனம் ஒன்றுபடத் தியான அப்பியாஸமே சிறந்த மார்க்கமாகும். மனம் ஒன்றுபட்டால்தான் ஞானம் சித்தியாகும்.

“மனமொன்று பட்டாலே மகாஞானம்

மனமொன்று பட்டாலே பாரவஸ்தாம்-மனமொன்று

பட்டாலது போல் பாரவஸ்தொன்றில்லை

கெட்டால் பிசாசாய்க் கெடும்“

மனதில் தமோ குணத்தைச் சார்ந்த எண்ணங்கள் உதிக்கும்வேளை அதனை ஹக்குடைய கட்டளை என அங்கீகரித்து அறிவிலும், கற்பனையிலும் மட்டும் அதற்குக் கீழ்படிந்து கொள்ள வேண்டும். அதனை செயல்படுத்தக் கூடாது.

நல்ல எண்ணங்கள் மனதில் உதயமாகும்போது அதனை உடனே செயல்படுத்த வேண்டும். இதுவே மனதை நேர்வழிபடுத்துவதற்குரிய உபாயமாகும்.

மனிதன் முத்தேகம் என்னும் திரையில் சிக்கிக் கொண்டதும் வேற்றுமை என்னும் வியாதி இவனைப் பீடித்துக் கொண்டது. இதனால் இவன் தனக்கொரு உள்ளமையைக் கற்பனையில் ஏற்படுத்திக் கொண்டு தன்னை பிரமத்தை விட்டும் வேறாகக் காண்கிறான்.

இந்தவேற்றுமை என்னும் வியாதி நீங்குவதற்குத் தக்க மருந்து தௌஹீதே ஆகும். இந்நோய் குணமாக “ஷரீஅத்“ என்ற பத்தியத்தை இவர்கள் கைக் கொள்ள வேண்டும். இந்நோயை பீர் என்னும் பெரிய வைத்தியன்தான் குணப்படுத்த முடியும்.

“வேற்றுமையென்னும் வியாதி பீடித்தோர்க்குச்

சாற்றுமருந்துதான் தௌஹீது –ஏற்ற

ஷரீஅத்து பத்திய மாஞ்சார அறிந்து கொள்வாய்

பெரிய வைத்தியனாம் பீர்“ (மெய்ஞ்ஞானத் தெளிவு)

நீக்கமற நிறைந்திருக்கும் ஹக்காகிய பரம்பொருள்ஆனவன் சம்பூரண அறிவு மயமாக எங்கும் இலங்கித் துவங்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான் என்று திட்டப்படுத்துவதே ஏகத்துவமாகும்.

ஹக்கிற்கு அன்னியமாகத் தனக்கொரு உள்ளமை உண்டு என்பதையும், அநுர்த்த ஜட துக்கமான தேகம் முதலான அனாத்தும வஸ்துக்களை நான் என்று ஜீவன் அபிமானிப்பதையும் விட்டொழித்து சத்து, சித்து, ஆனந்தவடிவமான ஏக அறிவே நான் என உணர்வதே ஆத்ம ஞானமாகும்.

மனிதன் திரை நீங்குவதற்கு உபாயமாவது: சர்வ வியாபகமாக நிற்பது "மகாகாசம்". ஒரு குடத்தில் நிறைந்து நிற்கும் ஆகாசம் "கடாகாசம்". மகாகாசம் என்பது குடம் என்னும் வரம்புக்கு உட்படும்போது கடாகாசம் ஆகிறது.

மகாகாசத்தைத் தவிர கடாகாசம் என்பது இல்லை.குடம் என்னும் வரம்பு போனால் அதாவது குடம் உடைந்து விட்டால் கடாகாசம், மகாகாசத்தில் கலந்து ஏகமாகிவிடும்.

அதுபோல் இந்த ஸ்தூல தேகம், நான் இல்லையென்று அப்பியாசித்தால் அப்பொழுது ஆன்மாவுக்குத் திரையில்லை. இந்த சிந்தனை உறுதிப்படும்போது ஸ்தூலதேகம் நான் அல்ல ஏக ஆன்மாவே நான் என்ற உறுதி ஏற்படும்.

இன்னொரு உதாரணம் சொல்கிறோம். ஒரு மண் குடத்தில் கடல்நீரை கொண்டு குடத்தின் வாய்ப்பக்கத்தை திறக்காதபடி அடைத்துக் கடலில் போட்டால் அக்குட நீரை சமுத்திரம் என்று நாம் சொல்வதில்லை.

குடநீர் என்றே சொல்கிறோம். குடத்தைச் சுற்றிக் கடல் நீர் இருக்கிறது. குடத்திற்குள்ளும் கடல் நீர் இருக்கிறது. இருப்பினும் குடத்தின் வரம்பினால் குடத்திற்குள் இருக்கும் கடல்நீர் சமுத்திரம் என்ற பெயரை விட்டு நீங்கி குடநீர் ஆகிவிடுகிறது.

குடம் உடைந்து விட்டால் குடத்து தண்ணீர் கடலோடு சேர்ந்து ஏகமாய் விடுகிறது. ஸ்தூல தேகம் குடத்தைப் போன்றது. ஆன்மா ஸ்தூலதேக வரம்பினால் தன்னை ஏக ஆன்மாவை விட்டும் வேறாகக் காண்கிறது.

ஒரு பெரிய நிலப்பரப்பு வரப்புகளின் தடுப்பால் பல்வேறு வயல்களாகத் தோற்றமளிக்கிறது. வரப்புகளை நீக்கி விட்டால் ஒரே நிலப்பரப்பாகத் தெரியும். அதுபோல் ஏக ஆத்மா சரீராதிகளுடைய சம்பந்தத்தால் பல ஆன்மாக்களாகக் காட்சி தருகிறது.

சரீராதிகளுடைய சம்பந்தத்தை நீக்கினால் அது ஏக ஆன்மாவே. ஏக ஆன்மாவில் தரிபட்டவர்கள் திரைநீங்கியவர்கள். இறைவனுக்கு அஞ்ஞானமில்லை. அதுபோல் திரை நீங்கியவர்களுக்கும் அஞ்ஞானமில்லை. மற்ற மனிதர்களுக்கு அஞ்ஞானமுண்டு.

திரை நீங்கியவர்கள் வேற்றுமை இல்லாதவர்கள். அஞ்ஞானமில்லாதவர்கள் மாய்கை அற்றவர்கள். பாபமில்லாதவர்கள். இறைவனைத் தனக்கன்னியமாய்க் காணாதவர்கள். இவர்களே ஜீவ முக்தர்கள்.

"தேக முதல் அபிமானம் அனுவும் இன்றித்

திடமாக ஏகஅறிவு நானே என்று

மோகமதாம் துணிவுஅற்றுப் பரமானந்தம்

எப்பொழுது மிசைத்திடுவோன் சீவன் முக்தன்"

இவர்களே மௌத்துக்கு முன் மௌத்தானவர்கள். அதாவது, இவர்கள், "நான்" என்று அபிமானித்த ஜீவாத்மாவை பிணமாகி வீழ்ந்த பின் நாம் எந்தநிலை அடைய வேண்டுமோ அதனை இந்த உடல் இருக்கும்போதே அவர்கள் அடைந்து விடுகிறார்கள். இவர்களே மரணத்திற்குப் பின் விதேக முக்தி பதவியை அடைகிறார்கள்.

தேகம் வீழுமுன் நம்மில் உள்ள ஜீவாத்மா, ஞான அப்பியாசங்கள் மூலம் நம்மில் இறைவனால் ஊதப்பட்ட ஏக ஆன்மாவுடன் பழகி வந்தால் தேகம் விழும் சமயம் அதாவது மனிதன் மௌத்தாகும் சமயம் நம்மில் உள்ள ஜீவாத்மாவை நம்மில் உள்ள ஏக ஆன்மா பொருந்திக் கொள்ளும். இதன் விபரமாவது:

மௌத்துக்கு முன் ஹக்கினால் ஊதப்பட்ட பரிசுத்த ஆவியே நான் என அறியாமலும் பழகாமலுமிருந்த போலி மனிதருக்கு மலக்குல் மவ்த்து முடுகினபோது, உடலில் ஓடிக் கொண்டிருக்கும் ஜீவன், கண்ணின் நிதானத்தில் வரும். அந்தப் பார்வையை உலகத்தார் மௌத்துடைய பார்வை என்பார்கள்.

உண்மையில் அதுதான் உடலைக் கொழுகிய ஜீவனாயிருக்கும். அப்பொழுது ரூஹுல் குத்ஸி இந்த ஜீவனைத் தன்னில் பொருந்திக் கொள்ளாமல் உதறிவிடும். அப்பொழுது ஜீவன் தன் உத்யோக அதிகாரத்தை ரூஹுல் குத்ஸியிடம் ஒப்புக் கொடுக்காமல் மூலத்தில் வந்து பதுங்கிக் கொள்ளும். இது துக்க வடிவமாய் கஷ்டமடைந்து அழிவை அடையும்.

ஜீவன் தன் கற்பனா உள்ளமையை இன்மையாக்கி பரிசுத்த ஆவியுடன் ஒன்றித்து தியான அப்பியாசங்கள் செய்து வந்தால், மௌத்துடைய நேரத்தில் ரூஹுல் குத்ஸியை ஜீவன் சந்திக்கும்போது ரூஹுல் குத்ஸி, ஜீவனைத் தன்னுடன் பொருந்திக் கொண்டு தன் ரப்பிடம் போய் இரண்டறக் கலந்து கொள்ளும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தில் சிக்கிக் கொள்பவர்கள் ஈசனா திரவியம் என்னும் மூவாசையாகிய மனைவி, மக்கள், செல்வத்தில் பற்று கொண்டவர்களாக இவ்வுலகில் வாழ்கிறார்கள். இவர்கள் பற்றற்றானாகிய இறைவன் மீது பற்றுக் கொள்ளாதவரை இவர்கள் மூவாசை பற்றை ஒழிக்க முடியாது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு -(திருக்குறள்)

மனைவி, மக்கள், செல்வம் இம்மூவாசையும் ஒழிக்க வேண்டுமென்றால், மனைவி, மக்களை வெறுக்க வேண்டுமென்றோ, பொருள் சம்பாதிக்கக் கூடாதென்றோ, மனைவி மக்கள், செல்வம்

இவற்றை வெறுத்துத் தள்ளி துறவறம்போக வேண்டுமென்பதோ இல்லை. ஷரியத் விதிக்கும் விதிமுறைப்படி அவைகளைப் பேணி பாதுகாப்பது நம்முடைய கடமையாகும்.

"அல்மாலு வல்பனூன ஸீனத் துல் ஹயாதித்துன்யா" ஆஸ்தியும், மக்களும் இகலோக வாழ்க்கையை அழகுபடுத்துபவைகள் ஆகுமென்று அல்லாஹ் தன் திருமறையில் கூறியுள்ளான்.

ஒருவனுடைய செல்வமும், மக்களும் அல்லாஹ்வுடைய நினைப்பை விட்டு பாராமுகமாக்கிவிடும் அளவிற்கு அவைகளிடம் பற்று வைக்கக் கூடாது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُلْهِكُمْ أَمْوَالُكُمْ وَلَا أَوْلَادُكُمْ عَن ذِكْرِ اللَّهِ ۚ وَمَن يَفْعَلْ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْخَاسِرُونَ

குர்ஆன் 63:9 : " ஈமான் கொண்டவர்களே! உங்களுடைய செல்வமும், உங்களுடைய மக்களும், அல்லாஹ்வுடைய நினைப்பை விட்டும் உங்களை பாராமுகமாக்கிவிட வேண்டாம். எவர் இவ்வாறு செய்கிறாரோ நிச்சயமாக அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள்"

ஒருவன் தன் செல்வத்திலும், தன் மக்கள் பேரிலும் அல்லாஹ்வை மறக்கும் அளவிற்கு பற்று வைத்தால் அவனது செல்வமும், அவனது மக்களும் அவனுக்குச் சோதனைப் பொருளாகிவிடும்.

إِنَّمَا أَمْوَالُكُمْ وَأَوْلَادُكُمْ فِتْنَةٌ ۚ وَاللَّهُ عِندَهُ أَجْرٌ عَظِيمٌ

குர்ஆன் 64:15 : "உங்கள் பொருட்களும், உங்கள் மக்களும் (உங்களுக்குச் சோதனை தான்) ஆனால் அல்லாஹ் அவனிடம் தான் மகத்தான நற்கூலி இருக்கிறது."

ஒருவன் தன் செல்வத்தையும், மக்களையும் ஹக்குடையதென்றும் ஹக்குடைய கருவியாகத்தானிருந்து அவைகளை ஷரியத் முறைப்படி பேணி பாதுகாப்பதாய் நிர்ணயம் கொண்டு நடந்தால் அல்லாஹ்வை மறக்கும் அளவிற்கு அவைகளில் பற்று ஏற்பட முடியாது போகும். "பல்வேறு நிறமுள்ள வஸ்துகளும், பொன், வெள்ளி, மனைவி, மக்கள், துன்யாவாகாது. ஹக்கை மறந்திருப்பது துன்யாவாகும்" என்று மௌலானா ரூமி அவர்கள் மத்னவி ஷரீபில் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே பொருள் சம்பாதிப்பதோ, மனைவி, மக்களுடன் வாழ்வதோ துன்யாவல்ல. ஹக்கை மறந்திருப்பதே துன்யாவாகும். ஏதேது நம்மை அல்லாஹ்வின்பால் இழுத்துச் செல்கிறதோ அதுவே மார்க்கம். ஏதேது நம்மை அல்லாஹ்வை அடையும் பாதையில் குறுக்கிட்டு நிற்கின்றதோ அதுவே உலகம்.

அல்லாஹ்வை அடைவதில் நமக்கு குறுக்கே நிற்பது நம்முடைய மனம். மனம் அல்லாஹ் ஏவியதைச் செய்யத் தயங்குகிறது. அவன் விலக்கியதைச் செய்ய விரும்புகிறது. மனம் என்ற

குதிரைக்கு ஷரியத் என்ற கடிவாளத்தைப் போட்டு ஆன்மா என்னும் மனிதன் சவாரி செய்தால் மனம் நேரான பாதையில் சீராகச் செல்லும்.

இனி மனதை ஓர்மிக்கச் செய்யும் தியான அப்பியாசங்கள் பற்றி இங்கு விபரிப்போம். மனம் என்ற ஒன்று உண்மையில் இல்லை. ஆலம் அர்வாஹில் ஆன்மாவின் சலனம் ஏற்பட்டதும் ஆன்மா, மனம் என்ற பெயரை அடைகிறது. மனம் இருக்கும்வரை ஆன்மா அறியப்படாது. ஆன்மா அறியப்படும்போது மனம் மறைந்துவிடும்.

ஆன்மா சூரியனைப் போன்றது. மனம் நட்சத்திரங்களைப் போன்றது. ஆன்மா சூரியன் பிரகாசிக்கும்போது மனம் என்ற நட்சத்திரங்கள் மங்கிப் போய்விடுகின்றது. மனம் அழிந்து ஆன்ம சூரியன் பிரகாசிப்பதற்கே திக்ரு என்னும் தியான அப்பியாசங்கள் ஏற்பட்டன.

தனிமையில் தானாக செய்யும் திக்ரில் அதிக பலனில்லை. காமிலான ஷெய்கு ஒருவரிடம் பைஅத் பெற்று அவர் போதனைப்படி தனிமையில் செய்யும் திக்ரில் அதிகப் பிரயோஜனம் உண்டு.

ஞானகுரு சுட்டிக்காட்டும் குறிப்பை நோக்கியே முரீது திக்ரு செய்ய வேண்டும். திக்ரு செய்பவன் குறிப்பை நோக்குவது மனம் ஓர்மிக்கதான். மனதை ஓர்மிக்கச் செய்யும் இந்த தியான அப்பியாசமே சங்கற்ப சமாதியாகும்.

தியானத்தில் மனம் ஓர்மைப்பட்டதும் தியான மந்திரம், தியானம் என்ற இரண்டும்தவிர மற்ற எண்ணங்கள் நாளடைவில் மறைந்துவிடும்.

சரீரத்தையும் உலகிலுள்ள வஸ்துக்களையும் மனதால் அழித்து திசையற்றவனாய், முடிவில்லாத வெட்டவெளியாய் இருக்க வேண்டும். அவ்விதம் அப்பியாசம் செய்யும் போது திக்ரை நிறுத்தி நினைவற்ற நிலையில் தரிபட வேண்டும்.

சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் நிலைக்கு நிற்சங்கற்ப சமாதி நிலை என்று பெயர். இதன் மகத்துவத்தை சொல்லி முடியாது. இதுதான் அசம் பிரக்யாத சமாதி எனும் பரிபூரண நிலையாகும்.

இந்த அப்பியாசத்தை இடைவிடாது செய்து வருவதின் மூலம் மன ஊசாட்டம் நின்று தொணி வெளியாகும். பின் தொணியையே கேட்டுக் கொண்டு வரவேண்டும். இத்தொணியாகிய பிரணவம்தான் மூலமந்திரம்.

பிரணவமானது ஹக்குடைய உள்ளமையினின்றும் வெளியான ஓங்கார சப்தமாகும். இத்தொணியை குடிலை என்றும், பறை என்றும், நாதமென்றும் சொல்லப்படும். இத்தொணி மயம் குறிப்பற்ற எல்லையில் சேர்த்துவிடும். இக்குறிப்பற்ற எல்லையில் மனம் அழிந்து ஆன்மா பிரகாசிக்கும்.

மன ஊசாட்டம் நின்றுவிட்டால் தியானம், தியானிப்பவன் என்ற இரண்டு இடம் மற்றும் சித்தியாகும். இந்நிலையில் ஜீவனையும், பிரமனையும் பிரித்துக் காட்டிய மனம் இல்லாமல் போய்விடும்.

அப்போது ஜீவன் தன் கற்பனா உள்ளமையை இழந்து ஏக ஆன்மாவில் ஒன்றித்துவிடும். இதுவே துவம்பத லட்சியார்த்தமாகும்.

பராபர வெளியாகிய வஹ்தத் முஹம்மதிய்யா தத்பத லட்சியார்த்தமாகும். சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் இந்த அப்பியாச மூலமே மனிதன் அசிபத லட்சியார்த்தத்தை அடையமுடியும்.

ஒரு மனிதன் சகல சித்திகளை அடைந்து விட்ட போதிலும் அவனது மனதிற்கு அடிமைப்பட்டு வழிகேட்டை அடையக் கூடும். சிந்தனையுடன் கூடிய ஏகாக்கிர நிலையைத் தாண்டி அப்பால் செல்லும் வரையில் ஒருவன் வழிகெட இடமுண்டு.

சிந்தையை அடக்கி சும்மா இருக்கும் இச்சாதன நிலை சுலபமாகத் தோன்றிய போதிலும் அனுஷ்டானத்தில் இறங்கும்போது அது மகா கடினம் என்பது தெரியவரும். சிந்தை ஒடுங்கிவிட்டால் ஜெபம் அவசியமில்லை.

“மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்

மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்

மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்

மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே“

மனம் அழிந்து ஆன்மா சலனமின்றி நிற்கும் தானத்தில்தான் ஹக்கின் ஜோதி பிரகாசிக்கும். குறிப்பில் ஹக்கின் ஜோதி வெளியாக முடியாது. சூரியன் சுருமாக் கூட்டில் தோன்ற முடியாது.

சூரியனை சுருமாக் கூட்டில் அடைக்க முடியாது. இன்ஸானைத் தவிர மற்ற பிரபஞ்ச வஸ்துக்களில் ஹக்கின் பரிசுத்தஆவி தரிபடுத்தப்படாததால் அவைகள் ஹக்கின் ஜோதியைக் காண சக்தியற்று இருக்கின்றன.

பஞ்சபூதங்களாகிய மனிதனில் ஹக்கினால் தரிபடுத்தப்பட்ட பரிசுத்த ஆவியே ஹக்கின் ஜமாலைத் தரிசிக்க முடியும். ஹக்கினால் நம்மில் தரிபடுத்தப்பட்ட ஆன்மஜோதி பிரகாசிக்காமல் ஹக்கின் ஜோதி தரிசனைக்குக் கிடைக்காது. பஞ்சபூதத்திற்கும் பராபரவெளிக்கும் இடையே உள்ள இடைநிலையைத் தெரிந்து கொண்டால் ஹக்கின் ஜமாலைத் தரிசிக்க மனிதப்படைப்பை ஹக்கு எவ்விதம் மேலினும் மேலாக படைத்திருக்கிறான் என்ற உண்மை விளங்கும்.

அதாவது மனிதனது ஆன்மாவாகிய நூரே முஹம்மதிய்யா முதற்படைப்பாகவும், மனிதனது சரீரம் கடைசிப்படைப்பாகவும் மனிதனில் பரிசுத்தஆவி தரிபட்டிருப்பது மூலம் மனிதன் சிறப்புப் படைப்பாகவும் இருப்பது விளங்கும்.

பஞ்சபூதங்களால் ஆனது மனிததேகம். பஞ்ச பூதங்கள் என்பது மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இந்த ஐந்துமாகும்.

பஞ்சபூதங்களில் ஒன்றான மண் கண்ணுக்குப் புலப்படும். கைக்கு அகப்படும். இதனால் மண் பிரத்தியட்ச ஆதாரமாகும். நீர், கண்ணுக்குப் புலப்படும். ஆனால் கைக்குப் பிடிபடாது. நீர் கண்ணுக்குத் தெரிவதால் நீரும் பிரத்தியட்ச ஆதாரமாகும். நெருப்புக் கண்ணுக்குப் புலப்படும். இது ஆவி வடிவம். இதுவும் பிரத்தியட்ச ஆதாரமே. காற்று கண்ணுக்குப் புலப்படாது. கைக்கும் பிடிபடாது. தேகத்தில்படுவது மூலம் காற்றிருப்பதை உணர்கிறோம். இது அனுமானம் மூலம் தெரிவதால் இது யூகமாகும்.

ஆகாசம் என்னும்வெளி கண்ணுக்கும் புலனாகாது. கைக்கும் புலனாகாது. மனதினால் ஆகாசமிருப்பதை யூகிக்க முடியும். இது சுருதிப் பிரமாணாமாகும். பஞ்சபூதங்களுக்கு அப்பால் ஆகாசத்தை விட நுண்ணியது இருக்கிறது.

இதை சூனிய வெளி என அழைக்கிறோம். இதையும் மனதால்தான் யூகிக்க முடியும். மனதின் யூகம் இதுவரைத்தான் எட்ட முடியும். மனதின் யூகம் வரைச் செல்பவர்கள் சூனியவாதிகள்.

ஆதலால்தான் சூன்யவாதிகள் இதற்குமேல் ஒன்றுமில்லை என்கிறார்கள். இவர்கள் வேதங்களை ஒப்புக் கொள்வதில்லை. ஆகையால் வேத போதனையை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

சூனியவெளிக்கு மேலும் உண்டு என்பதை நமக்கு வேதங்கள் போதிக்கிறது. அது பரவெளி. இது சூனியவெளியை விட நுண்ணியது. ஆகாசவெளி, சூன்யவெளி, பரவெளி இம்மூன்றும் சேர்ந்து முப்பாழி என அழைக்கப்படுகிறது.

இவைகளைவிட நுண்ணியது பரவெளி. இதுவே சுகாதீத அறிவு என்றும், ஏக அறிவு என்றும், ஏக ஆன்மா என்றும், சிதாகாசம் என்றும், வஹ்தத் முஹம்மதிய்யா என்றும், நூரே முஹம்மதிய்யா என்றும் பரிசுத்த ஆவி என்றும் பலவாறாக அழைக்கப்படுகிறது.

இது எல்லையற்ற அறிவாகும். எல்லையற்ற அறிவைக் கொண்டுதான் எல்லையற்ற இறைவனை அறிய முடியுமாதலால், இறைவனை மனிதன் அறிய வேண்டுமென்ற நோக்கத்தில் மனிதனில் இந்த பரிசுத்த ஆவியை ஹக் தரிபடுத்தியுள்ளான்.

எல்லையற்ற அறிவில் உள்ளீடாக இருப்பதே தத்துவங்கள். இவைகள் ஆலம் அர்வாஹில் உயிர்கள் என அழைக்கப்படுகிறது. அறிவு என்னும் தன்மையில் உயிர்கள் யாவும் ஒன்றே.

கோலங்களாக வெளியான புறத்தில் உயிர்கள் பல. கோலங்கள் என்பது காரண சரீரத்தையும், சூக்கும சரீரத்தையும், ஸ்தூல சரீரத்தையும் குறிக்கும். இம்மூன்று சரீரங்களும் சேர்ந்தே படைக்கபட்டவை என்ற பெயரைப் பெறுகிறது.

காலம், இடம், காரண காரியம் இவற்றிற்குக் காரணமானது மனம். மனம் எல்கைக்கு உட்பட்டது ஏக ஆன்மாவாகிய பரிசுத்த ஆவி எல்லையற்றது. எல்லையற்ற ஏக ஆன்மாவை எல்கைக்கு உட்படுத்த முடியாது.

ஆகையால் ஆன்மாவை மாய்கை சூழ முடியாது. ஏக ஆன்மா சம்பூரண அறிவு மயமானது. சம்பூரண அறிவில் அஞ்ஞானம் தோன்றவும் முடியாது. அதனால் ஏக அறிவில் மாசு படியவும் முடியாது. நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு இத்தனைக்கும் ஏக ஆன்மா அப்பாற்பட்டது.

எல்லையற்ற ஏக ஆன்மாவில் உள்ளீடாயிருப்பது தத்துவங்கள். இவைகள் ஏக ஆன்மாவில் பொருந்தியிருந்தபோது தங்களைத்தான் அறியாதிருந்தன.

ஆகையால் ஏக அறிவு என்னும் தன்மையில் உயிர்கள் யாவும் ஒன்றே. ஏக அறிவில் பொதிந்திருந்த தத்துவங்கள் ஆலம் அர்வாஹில் தனித்தனியாகப் பிரியும்போது நான் ரூஹுகள் அல்லது உயிர்கள் அல்லது ஆன்மாக்கள் என்ற பெயரைப் பெற்றன.

ஏனென்றால் அவைகள் ஆலம் அர்வாஹில் ஏக அறிவை விட்டு தனித்தனியாகப் பிரியும்போது தங்களது மூலமாகிய ஏக அறிவை மறந்து தங்களுக்கென்று ஓர் உள்ளமையை தாங்களே கற்பனையில் ஏற்படுத்திக் கொண்டன. இக்கற்பனையான உள்ளமே மனமாக மாறுகிறது. இம்மனம்தான் புத்தியாகி, புலன்களாகிப் பிரபஞ்சத் தோற்றங்களாக ஆகிறது. தத்துவங்களுக்கு முக்காலத்தையும் உணரும் சக்தியில்லை. ஹக்கு அவைகளுக்கு அறிவித்துக் கொடுத்ததைத்தான் அவைகள் அறியமுடியும்.

قَالُوا سُبْحَانَكَ لَا عِلْمَ لَنَا إِلَّا مَا عَلَّمْتَنَا ۖ إِنَّكَ أَنتَ الْعَلِيمُ الْحَكِيمُ

குர்ஆன் 2:32: (மலக்குகள் இறைவா!) “நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறு யாதொன்றையும் நாங்கள் அறியோம். நிச்சயமாக நீயே பேரறிவாளன். விவேகமிக்கவன்“ எனக் கூறினார்கள்.

தத்துவங்கள் தங்களை இயங்கச் செய்ய அவைகளுக்கு சக்தியில்லை. ஹக்கு தன்னில் நின்றும் ஓர் சம்மந்தத்தை அவைகளுக்கு அளித்ததின் மூலமே தத்துவங்கள் கோலங்களாக இயங்கியது.

எனவே தத்துவங்களுக்கு ஹக்கிற்கு அன்னியமாகத் தனித்த உள்ளமை இல்லை. இருப்பது ஒரு ஆத்மாவே என்று வுஜூதிய்யாக்கள் கூறுவதன் கருத்து என்னவென்றால், உள்ளமையுடைய ஆத்மா ஒன்றுதான் என்பதே தவிர, ஜீவாத்மாக்கள் இல்லை என்பது அல்ல. இருப்பது ஒரு ஆத்மாவே.

ஜீவாத்மாக்கள் இல்லையென்றால் குர்ஆனில் கூறப்படும் ஆத்மாக்கள் இல்லை என்பது ஆகிவிடும். ஜீவாத்மாக்களைத்தான் குர்ஆனில் இறைவன் ஒற்றைப்பட்ட ஆன்மாக்களாகக் குறிப்பிடுகிறான்.

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ

குர்ஆன் 21:35: “ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது...“

وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا

2:123: “............அன்று ஒரு ஆத்மா பிறிதொரு ஆத்மாவுக்கு உதவி செய்ய இயலாது......“

الْيَوْمَ تُجْزَىٰ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ ۚ لَا ظُلْمَ الْيَوْمَ ۚ إِنَّ اللَّهَ سَرِيعُ الْحِسَابِ

40:17 : “அந்நாளில் ஒவ்வொரு ஆத்மாவும் அது சம்பாதித்ததற்குக் கூலி கொடுக்கப்படும்...“

மனமாக மாறுவது ஜீவாத்மாவே. நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு இத்தனையும் அனுபவிப்பது ஜீவாத்மாவே. வேத உபதேசங்கள் ஜீவாத்மாவிற்கே. நரகம், சுவர்க்கம் அனுபவிப்பதும் ஜீவாத்மாவே.

மாய்கை தொடர்வதும் ஜீவாத்மாவில்தான். மாய்கை முற்றுப் பெறுவதும் ஜீவாத்மாவில்தான். திரையிடப்பட்டவர்களுக்குக் கியாமம் வரை மாய்கை தொடர்வரை இறைவன் தன் திருமறையில் திட்டப்படுத்தியுள்ளான்.

وَيَوْمَ يَحْشُرُهُمْ كَأَن لَّمْ يَلْبَثُوا إِلَّا سَاعَةً مِّنَ النَّهَارِ يَتَعَارَفُونَ بَيْنَهُمْ ۚ

10:45: “அவன் அவர்களை ஒன்று சேர்க்கும் நாளில், தாங்கள் ஒரு பகலில் சொற்ப காலம் இவ்வுலகில் தங்கியிருந்ததாக அவர்கள் எண்ணுவார்கள்.“

وَيَوْمَ تَقُومُ السَّاعَةُ يُقْسِمُ الْمُجْرِمُونَ مَا لَبِثُوا غَيْرَ سَاعَةٍ ۚ كَذَٰلِكَ كَانُوا يُؤْفَكُونَ

30:55: “அன்றியும், (நியாயத் தீர்ப்புக்குரிய) நாழிகை வரும் அந்நாளில் குற்றவாளிகள் தாங்கள் (இவ்வுலகில்) ஒரு நாழிகையேயன்றி அதிக நேரம் தங்கியிருக்கவில்லையென்று பிரமாணம் செய்வார்கள்...“

كَأَنَّهُمْ يَوْمَ يَرَوْنَهَا لَمْ يَلْبَثُوا إِلَّا عَشِيَّةً أَوْ ضُحَاهَا

79:46: “நிச்சயமாக அதை அவர்கள் காணும்நாளில், மாலையிலோ அல்லது காலையிலோ ஒரு சொற்ப நேரமேயன்றி அவர்கள் (இவ்வுலகில்) தங்கியிருக்கவில்லை என்று தோன்றும்.“

இஜாதியாக்களும், சுஹூதிய்யாக்களும் ஹக்கிற்கு அன்னியமாக ஜீவாத்மாவுக்கு தனி உள்ளமையை ஏற்படுத்தி மனித சரீரத்தையும் அதைக் கொழுகிய ஜீவனையும் “நான்“ என்கிறார்கள்.

இஜாதியாக்கள் ஜீவனின் உள்ளமையை சுதந்திரமானது என்கிறார்கள்.

சுஹூதிய்யாக்கள் ஜீவனின் உள்ளமையை சுதந்திரமற்றது என்கிறார்கள்.

ஜீவனின் உள்ளமையை வுஜூதிய்யாக்கள் கற்பனையானது என்கிறார்கள்.

இக்கொள்கைகளின் அடிப்படையில் இந்த மூன்று வகுப்பாருடைய தத்துவங்களும் உருவாகியுள்ளது.

தத்துவங்கள் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்ள சக்தியற்றவை ஆகையால் ஹக்கிற்கு அந்நியமாக அவைகளுக்கு தனித்த உள்ளமை ஏற்பட முடியாது. ஆலம் அர்வாஹில் தத்துவங்கள் தங்கள் மூலமாகிய ஏக அறிவை மறந்தததாலேயே கற்பனையான மனதையும், கற்பனையான கோலத்தையும்பெற்றன. இதுவே மாய்கை.

கற்பனையான உள்ளமை உடையவர்களுக்கு இம்மாய்கை கியாமநாள் வரை நீடிப்பதை அல்லாஹ் குர்ஆனில் எடுத்துக் காட்டுகிறான்.

தத்துவங்கள் தங்கள் மூலமாகிய ஏக அறிவை எப்பொழுது அறிந்ததோ அப்பொழுது மாய்கை என்னும் திரை விலகிவிடுகிறது. மனதை நான் என்று அபிமானிக்கும்வரை இம்மாய்கை எனும் திரை வெட்ட வெட்ட தளிர்த்துக் கொண்டேயிருக்கும்.

“கல்லும் ஒரு போதிற் கரைந்துருகும் என் மனக்கல் கரைவதில்லை ஐயனே“, “எத்தனை விதங்களால் கற்கினும் கேட்கினும் என் மனம் இணங்குதில்லையே“ “நண்டளந்திடும் நாள் யாவனோ தேவரீர் நல்லடிக்கு ஆளாகியும்“ என்றெல்லாம் குணங்குடியார் கூறுவது மனதைப் பற்றித்தான்.

சரீரத்தை நான் என்று அபிமானிக்கும்வரை மனம் அழிய மார்க்கமில்லை. ஆகையால்தான் வுஜூதிய்யாக்கள் ஏக ஆன்மாவை நான் என்றும், சரீரத்தையும் ஜீவாத்மாவையும் ஹக்கின் கருவி என்றும் கருதுகிறார்கள்.

ஆலம் அர்வாஹில் பிரிந்த உயிர்கள் தனித்து நிற்பதே இல்லை. அறிவின் குணம் அல்லது தமோ குணம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை கொழுகிறே நிற்கும். ஜீவன், அறிவின் குணத்தைக் கொழுகி நிற்கும்போது நல்லதைச் செய்யும். தமோ குணத்தைக் கொழுகி நிற்கும்போது தீயதைச் செய்யும்.

மனஊசாட்டத்திற்கேற்ப இரண்டிலும் ஜீவன் மாறி மாறி கொழுகி நின்றால் நல்லதையும், கெட்டதையும் செய்யும். ஜீவன் தன்மனம் போன போக்கில் செயலாற்றக் கூடாது என்பதற்காகத்தான் ஷரீயத்தை அல்லாஹ் விதியாக்கினான். ஷரீஅத் ஹக்குடைய கட்டளை. நாட்டம் எதுவாயினும் அதுவும் ஹக்குடையதே.

وَمَا تَشَاءُونَ إِلَّا أَن يَشَاءَ اللَّهُ

குர்ஆன்: 76:30: “ எனினும் அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் நாடமாட்டீர்கள்...“

இந்த ஆயத்தை ஆதாரமாக வைத்து மனதில் ஏற்படும் எல்லா நாட்டத்தையும் மனிதன் நிறைவேற்றக்கூடாது. மனிதனில் ஏற்படும் நாட்டத்தை அமுல்படுத்த அல்லாஹ் அங்கீகரிக்கிறானா இல்லையா என்பதை ஷரீஅத் என்ற உரைகல்லில் மனிதன் தீட்டிப் பார்க்க வேண்டும்.

அந்நாட்டத்திற்கு ஷரீஅத் அங்கீகாரம் அளித்தால் ஹக்குடைய நாட்டமாக அதை நிறைவேற்ற வேண்டும். ஷரீஅத் அங்கீகாரம் இல்லையென்றால் அதை எண்ணத்தோடு நிறுத்திவிட வேண்டும். நிறைவேற்றக் கூடாது.

ஷரீஅத் படி மனிதன் நடந்தால் ஹக்குடைய கட்டளைப்படி மனிதன் நடந்தான் என்பதாகிறது. அவ்விதம் நடப்பதில் மனிதனின் செயல் என்பது ஒன்றுமில்லை. எல்லாம் ஹக்குடைய செயல் என்பதே ஆகிறது.

ஷரீஅத் அங்கீகாரம் அளிக்காத ஒரு நாட்டத்தை மனதிற்கு அடிமைப்பட்டு ஒருவன் செய்து விட்டு அதை ஹக்குடைய செயல் என்று கூறக்கூடாது. இதனாலேயே இறைவன் தமோ குணச்செயலை என்னுடையதல்ல என்று குர்ஆனில் திட்டப்படுத்தியுள்ளான்.

إِنَّ اللَّهَ لَا يَظْلِمُ النَّاسَ شَيْئًا وَلَٰكِنَّ النَّاسَ أَنفُسَهُمْ يَظْلِمُونَ

குர்ஆன் 10:44: “நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு எவ்வித அநியாயமும் செய்வதில்லை. எனினும் மனிதர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்து கொள்கிறார்கள்.

مَّا أَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللَّهِ ۖ وَمَا أَصَابَكَ مِن سَيِّئَةٍ فَمِن نَّفْسِكَ ۚ وَأَرْسَلْنَاكَ لِلنَّاسِ رَسُولًا ۚ وَكَفَىٰ بِاللَّهِ شَهِيدًا

4:79: “(மனிதர்களே!) உனக்குக் கிடைக்கும் எந்த நன்மையும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது. இன்னும் உனக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால் அது உன்னால்தான் வந்தது...“

மனிதனில் ஏற்படும் மனஊசாட்டங்களை ஷரீஅத்படி நிறைவேற்றுவதில் மனிதனின் முயற்சி பெரிதும் வேண்டும். அவனது முயற்சிக்குரிய கூலியை இறைவன் வழங்குவதாக குர்ஆனில் அறிவிக்கிறான்.

وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَىٰ. وَأَنَّ سَعْيَهُ سَوْفَ يُرَىٰ. ثُمَّ يُجْزَاهُ الْجَزَاءَ الْأَوْفَىٰ.

குர்ஆன் 53:39,40,41 : "இன்னும் மனிதனுக்கு அவன் முயல்வதல்லால் வேறில்லை. அன்றியும் நிச்சயமாக அவன் முயற்சி(யின் பலன்)பின் அவனுக்குக் காண்பிக்கப்படும். பின்னர் அதற்கு நிரப்பமான கூலி வழங்கப்படுவான்."

فَمَن يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ. وَمَن يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ

99:7,8: "எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும், அதற்குரிய பலனைக் கண்டு கொள்வார். அன்றியும் எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும் அதற்குரிய பலனையும் அவன் கண்டு கொள்வான்."

மனதை அழிக்க தியான அப்பியாசங்களில் ஈடுபடுபவர்கள் அப்பியாசத்தில் மட்டும் மனதை அழித்துவிட்டு அப்பியாசம் முடிந்து உலக காரியங்களில் ஈடுபடும்போது, மனதிற்கு அடிமைப்பட்டு ஷரீஅத்தை மீறிவிடக்கூடாது.

இதனால்தான் ஷரீஅத்தும், தௌஹீதும், கஸ்தூரியும் அதன் வாடையும் போல் ஒன்றினை விட்டு மற்றொன்றைப் பிரிக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. எனவே தௌஹீதில்லாமல் ஷரீஅத்தில்லை.

ஷரீஅத் இல்லாமல் தௌஹீதில்லை. மஜ்னூனுக்கும் மஜ்தூபிகளுக்கும் மட்டுமே ஷரீஅத் விதிவிலக்களிக்கிறது.

மனதில் ஏற்படும் ஊசாட்டங்களை ஷரீஅத்படி நிறைவேற்றுவதில் மனதோடு பெரியபோராட்டம் மனிதன் செய்ய வேண்டியதிருக்கிறது. இதனால்தான் ஜிஹாதை சிறிய போர் என்றும், நப்ஸோடு போராடுவதைப் பெரிய போர் என்றும் பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஷரீஅத்படி நடப்பதில் ஜீவாத்மாவின் இச்சா சுதந்திரம் பறிக்கப்படுகிறது. ஷரீஅத்திற்கு முரணாக ஜீவன் நாடும் நாட்டத்தை மனிதன் அழிக்காதவரை ஷரீஅத்தில் மனிதன் காமிலாக(பூரணமாக) முடியாது.

ஷரீஅத்தில் காமிலானவர்கள்தான் மஃரிபாஎன்ற நதியில் நீந்தத் தகுதியானவர்கள். மஃரிபா என்ற நதியில் நீந்த ஹிம்மத் என்ற வைராக்கியம் அவசியம்தான். ஆனால் அந்த வைராக்கியம் ஷரீஅத்தைப் பொருந்தியதாக இருக்க வேண்டும். ஷரீஅத் இல்லாத வைராக்கியம் அக்கரை சேர்க்காது.

ஒருவன் ஜீவாத்மாவின் மனக்கோட்டைக்குள் இருக்கும்வரை மனதிற்கு அடிமைப்பட்டே ஆகவேண்டும். ஜீவாத்மாவின் மனக்கோட்டையைத் தகர்த்தெறிந்து அக்கோட்டையினின்றும்

வெளிப்பட்ட சுதந்திர புருஷனே மனிதப் பிறவி எடுத்ததின் புண்ணியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே ஹக்கிற்கு அன்னியமாகத் தனக்கொரு உள்ளமை உண்டென்ற கல்குடைய அனாவை அழித்து ஹக்குடைய அனாவில் மனிதன் தரிபட வேண்டும். ஹக்குடைய அனா சூரியனைவிட பிரகாசமானது. கல்குடைய அனா சூரியனிடமிருந்து பிரகாசத்தைப் பெற்றுக் கொள்கிற நட்சத்திரம் போன்றது.

முந்திய அனாவாகிய ஹக்கென்னும் சூரியன் எப்பொழுது பிரகாசிக்கிறதோ அப்பொழுது கல்கென்னும் நட்சத்திரங்கள் யாவும் மறைந்துவிடும். மனிதன் பிரபஞ்ச வஸ்துக்களின் குணத்தையும் மலக்கின் குணத்தையும் தன்னில் பொதிந்து கொண்டவனாயிருக்கிறான். மேய்ந்து திரியும் ஆடுமாடுகளின் குணமும், சீரிப்பாயும் துஷ்ட மிருகங்களின் குணமும், ஊடு கலகம் செய்யும் இபுலீசின் குணமும், வணக்கம் புரிந்து நல்லதை நாடும் மலக்கின் குணமும் மனிதனில் அமைந்திருக்கிறது.

ஆனால் இன்சானில் இறைவன் தரிபடுத்திய பரிசுத்த ஆவி பிரபஞ்ச வஸ்துக்களில் எதிலுமில்லை. பிரபஞ்ச வஸ்துக்களின் குணத்தையும், இபுலீஸின் குணத்தையும் மனிதனில் உள்ள தமோ குணம் பிரதிபலிக்கிறது. மலக்கின் குணத்தை மனிதனில் உள்ள அறிவின் குணம் பிரதிபலிக்கிறது. ஹக்கின் குணத்தை இறைவனால் மனிதனில் தரிபடுத்தப்பட்ட பரிசுத்த ஆவி பிரதிபலிக்கிறது.

இக்குணங்களைப் பொதிந்து மனிதன் ஏன் படைக்கப்பட்டான் என்பதை மனிதன் சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறான்.

“ஒரு ஸாஅத்து நேரம் ஆராய்ச்சி செய்து பார்ப்பது ஆயிரம் வருடத்தின் வணக்கத்தைப் பார்க்கினும் நல்லதாயிருக்கும்“ என்பது நபி மொழி.

பிரபஞ்ச வஸ்துக்களின் பொதுவான் குணமாகிய தமோ குணத்தை மனிதன் வெல்ல வேண்டுமென்பதற்கே மனிதனில் மலக்கின் குணமாகிய அறிவின் குணம் தரிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜீவன், தமோ குணம் அல்லது அறிவின் குணம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை கொழுகியே நிற்கும். ஜீவன் தமோ குணத்தை வென்று அறிவின் குணத்தில் தரிபடவே ஷரியத் விதிக்கப்பட்டுள்ளது.

ஷரியஅத்படி நடக்கும் மனிதன் தமோ குணத்தை விட்டும் மனதை விடுவித்து அறிவின் குணத்தில் தரிபடுத்துகிறான். அப்போது ஜீவன் அறிவின் குணத்தை மட்டும் கொழுகி நல்லதைச் செய்யும். கெட்டதை விலக்கும்.

ஜீவன் தன் மூலத்தை மறந்து கோலத்தில் மயங்கி மனமாக தரிபட்டிருப்பதில் நின்றும் விடுபடவே மனிதனில் ஹக்கின் பரிசுத்த ஆவி தரிபடுத்தப்பட்டுள்ளது. ஜீவன் தன் மூலத்தைத்

தெரிந்து பரிசுத்த ஆவியில் தன்னைத் தரிபடுத்திவிட்டால் அப்போது மனமழிந்து ஆன்மா பிரகாசிக்கிறது.

கடல் ஆழம் காணச் சென்ற உப்பு பொம்மை கடல் மயமாவது போல் ஜீவனும் ஏக அறிவில் தன்னைத் தரிபடுத்தும்போது அதன் கற்பனா உள்ளமை மாய்க்கப்பட்டு ஏக ஆன்மா ஆகிவிடுகிறது. அப்போது ஹக்கின் குணம் மட்டுமே ஆன்மாவில் பிரகாசிக்கும்.

எப்பொழுது மனம் ஆன்மாவாக மாறி விடுகிறதோ அப்பொழுதே தமோ குணம் இருந்த இடம் தெரியாமல் இன்ஸானை விட்டு மறைந்துவிடும்.

ஏக அறிவு எல்லையற்றது. இறைவனும் எல்லையற்றவன். எல்லையற்ற இறைவனை எல்லையற்ற ஏக அறிவுதான் அறியமுடியும். எல்லைக்குட்பட்ட மனதால் அறிய முடியாது. ஏகனை அறியக்கூடிய ஏக அறிவே இன்ஸானின் உண்மை வடிவமாகும்.

இன்சானில் எவன் தன்னுடைய கோலத்தைப் பரிசுத்த ஆவியாகிய ஏக அறிவின் வடிவமாகக் கிரகித்துக் கொள்கிறானோ அவன்தான் பூரண இன்சான் ஆகின்றான். இல்லாவிடில் இதனினும் அதனினும் சேறாத இரண்டும் கெட்ட நிலையில் ஒன்றுமில்லாதவனாகயிருப்பான். எனவே ஒருவன் தன்னை ஏக அறிவின் வடிவமாக்கி இறைவனைத் தன்னிலே தேட வேண்டும். ஏனென்றால் ஏக அறிவுதான் மனிதனின் உள்ளும் புறமும் நிறைந்து நிற்கும் ஹக்கை அறிய முடியும்.

சூரிய ஒளியைக் கொண்டுதான் சூரியனைப் பார்க்க முடியும். அதுபோல் ஹக்கின் சுடராகிய ஏக அறிவைக் கொண்டுதான் ஹக்கை அறிய முடியும். ஹக்கு மனிதனில் உள்ளும் புறமும் நிறைந்து நிற்பதைக் கீழ்கண்ட தெய்வத் திருவசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

குர்ஆன் 51:21: "நான் உங்கள் நப்சுகளிலே இருக்கிறேன். ஆனால் நீங்கள் நோட்டமிடுவதில்லை."

وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهِ نَفْسُهُ ۖ وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ

50:16: " ................ அவன் பிடரியின் உயிர் நரம்பை விட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கிறோம்."

وَاعْلَمُوا أَنَّ اللَّهَ يَحُولُ بَيْنَ الْمَرْءِ وَقَلْبِهِ وَأَنَّهُ إِلَيْهِ تُحْشَرُونَ

8:24: " .....இன்னும் மெய்யாகவே அல்லாஹ் மனிதனுக்கும் அவன் இருதயத்திற்குமிடையேயும் இருக்கிறான்..."

وَإِذْ قُلْنَا لَكَ إِنَّ رَبَّكَ أَحَاطَ بِالنَّاسِ

17:60: "(நபியே!) நிச்சயமாக உம்முடைய ரப்பு மனிதர்களை சூழ்ந்து கொண்டிருக்கிறான் என்று உமக்குக் கூறியதை (நினைவு கூறுவீராக)"

فَلَوْلَا إِذَا بَلَغَتِ الْحُلْقُومَ . وَأَنتُمْ حِينَئِذٍ تَنظُرُونَ . وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنكُمْ وَلَٰكِن لَّا تُبْصِرُونَ.

56:83-85 : " மரணத் தருவாயில் ஒருவனின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும்போது அந்நேரம் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆயினும் நானே அவனுக்கு உங்களை விட சமீபமாகவே இருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்கிறீர்கள் இல்லை."

இறைவனைத் தன்னிலே தேட வேண்டும் என்பதில் கருத்து என்னவென்றால் ஏக அறிவே தரிபட்டு இறைவனைத் தன்னிலே தேட வேண்டும் என்பதே. ஞான நாதாக்கள் இதையே நமக்கும் போதிக்கிறார்கள்.

சோதியாம் ரூஹின் சுவர்க்கத்தைச் சொல்லக்கேள்

வேதப்பொருளறியா வீணரே –பூதச்

சடமின்றி ரூஹு மட்டும் தனியே பெறுஞ்சுகமாம்

கடவுதெரி சனத்தாற்காண்

அந்த சொர்க்கத்தை யகக் கண்ணாற் காண்பையல்லா

இந்தக் கண்ணாற் காணவேலுமோ –சொந்தமாய்

மனதுக்கோர் கண்ணு மலக்கூத்தைப் பார்க்க

அனுபோகிக் குண்டேயறி

வீணிற்திரிந்தலையாதே உன்னை

விட்டும் புறம்பிலே ரப்பைத் தேடாதே

காண உன்னால் முடியாதே- உன்னைக்

காட்டிடும் முர்ஷிதை த்தேடி டிப்போதே

-(மெஞ்ஞானத் தெளிவு)

கைக்குள்ளே வெண்ணையை வைத்தொருவன்

கடையெங்கும் நெய்தேடியலைவது போல்

மெய்க்குள்ளிருக்கும் பொருளறியாமல்

மேல்குலமென்பவன் மிருகமடி

வாலில்லாக்குரங்கென்று கும்பியடி

-(தென்காசி சாஹின்ஸா ஒலியுல்லாஹ்)

ஒருவனது மனம் தான் அவனில் இறைவனைத் தேடுவதற்குத் திரையாயிருக்கிறது. ஒருவன் தன்னை ஏக அறிவில் தரிபடுத்திக் கொண்டால் அவன் தன்னையும் சர்வத்தையும் ஹக்கிற்கு அன்னியமில்லை என்றே காண்பான்.

"என்னை நான் வேறாய்க் கண்டால் எனக்கு நான் திரையாய் விட்டேன்

உன்னை நான் அறிந்தபோது உனையன்றி வேறு காணேன்"

என்பதை ஒருவன் சிந்தித்தால் தன்னையும் சர்வத்தையும் பிரமத்திற்கு அன்னியமில்லை என்றே காண்பான்.

மனிதனில் உள்ள ஜீவ அகங்காரமாகிய "நான்" என்ற திரைவிலகாவிடில் ஹக்குடைய "நான்" வெளியாக மாட்டாது. எனவே, "நான் என்பதில்லை ஹக்கைத் தவிர" என்பதில் ஒருவன் தரிபட்டால் தான் ஹக்குடைய நான் ஜொலிக்கத் துவங்கும். ஜீவன் நான் என்ற திரையை போட்டுக் கொண்டு ஒருவன் தன்னிலே இறைவனைத் தேட முடியாது.

"லாஇலாஹ இல்லல்லாஹ்" "நாயன் இல்லை அல்லாஹ்வைத் தவிர" என்பது கலிமாவின் பொருள். அப்படியானால் அந்த நாயன் எங்கே இருக்கிறான் என்று கேட்கின், நீக்கமற சர்வ வியாபகமாக எங்கும் நிறைந்திருக்கிறான் என்பதே விடை. ஹக்கு நீக்கமற நிறைந்திருக்கும்போது இன்னொரு வஸ்து இருக்க முடியாது.

ஆகையால் நம்மையும் நாம் காணும் பிற வஸ்துக்களையும் ஹக்கிற்கு அன்னியமாகக் காண்பது முடியாத காரியம். இருப்பது ஹக்கு மட்டுமே. ஹக்கின் பிரதிபலிப்பு ஏக அறிவாகவும், ஏக அறிவின் பிரதிபலிப்பு பிரபஞ்ச சம்பூரணத் தோற்றங்களாகவும் இருக்கிறது.

தண்ணீர் உறைந்ததும் பனிக்கட்டி ஆகிறது. அப்போது தண்ணீர் நமக்குத் தெரிவதில்லை. சுவரில் சித்திரங்கள் தீட்டப்பட்டதும் சுவர் மறைகிறது. சித்திரமே தோற்றமளிக்கிறது. மரத்துண்டில் யானையின் வடிவம் செதுக்கப்பட்டதும்

மரத்துண்டு மறைந்து யானையின் வடிவம் தோற்றமளிக்கிறது. தங்கம் ஆபரணம் ஆகும்போது தங்கம் மறைந்து ஆபரணம் தோற்றமளிக்கிறது. அதுபோல் பிரபஞ்சம் தோற்றமளிக்கும்போது பிரமம் மறைந்து விடுகிறது.

ஒருவன் தன் பார்வையை சாயத்தின் மீது செலுத்தினால் எழுத்துக்கள் மறைந்துவிடும். எழுத்துக்கள் மீது செலுத்தினால் சாயம் மறைந்து விடும். இதனை ஒருவன் ஏகஅறிவில் தரிபட்டு சிந்திக்க வேண்டும்.

ஒருவன் ஏகஅறிவின் கண்கொண்டு பிரபஞ்சத்தைப் பார்த்தால், பிரமத்திற்கன்னியமாய் பிரபஞ்சமில்லை. பிரபஞ்சத்திற்கன்னியமாய் பிரமமில்லை என்பதை தெரிந்து கொள்வான்.

மனம் அழிந்த இடத்தில்தான் ஏக அறிவு பிரகாசிக்க முடியும். "லா இலாஹ இல்லல்லாஹ்" "நாயன் இல்லை அல்லாஹ்வைத் தவிர" என்று ஈமான் கொள்வது பிரத்தியட்சம் யூகம், அனுபவ வாக்கு என்பதின் மூலம் அல்லாஹ்வை ஈமான் கொள்வதாகும். இது சாதாரண மக்களின் ஈமானாகும்.

"நான் என்பது இல்லை. அல்லாஹ்வைத் தவிர" என்று ஈமான் கொள்வது திரை நீங்கி ஈமான் கொள்வதாகும். இவ்விடத்தில் ஜீவ அகங்காரம் அழிக்கப்படுகிறது. இது "இல்முல் யகீன்" என்னும் நிர்ணய அறிவாகும்.

இவ்விதம் ஈமான் கொண்டதை ஏகஅறிவின் கண்கொண்டு சர்வத்தையும், பிரம்ம மயமாகப் பார்ப்பது "ஐனுல் எகீன்" எனும் நிர்ணயப் பார்வையாகும்.

அவ்வாறு கண்டதை அனுபோகியாயிருந்து அனுபவிப்பது "ஹக்குல் யகீன்" எனும் நிர்ணய அநுபவமாகும்.

சர்வமும் பிரம்ம மயம் என்தைக் கீழ்கண்ட ஞானப்பாடல் நமக்கு வலியுறுத்துவதாயிருக்கிறது.

கடலை அலையது தேடில் -அதைக்

காணாது காணாது வேறென்னுமாகில்

மடையர் தான் அல்ல வேறென்னில் - றப்பை

மாளமட்டும் அவர் காணார்கள் கண்ணில்

    கடலென்னும் பேருமிரவல்-அதில்

    கண்ட அலையென்னும் பேருமிரவல்

    அடிமை யென்னும் பேருமிரவல் -மிக

    ஆண்டவன் என்றிடும் பேருமிரவல்

கடலெனச் சொல்வதும் நீர்தான் - மிக

கனமாய்த் திரண்ட அலையும் தண்ணீர் தான்

அடிமை யென்பது ஹஸ்தீதான்-நல்ல

ஆண்டவன் என்றிடும் றப்பும் ஹஸ்திதான்

    உள்ளது தண்ணீருதானே –நான்றான்

உண்டென்று இருப்பது அறிதாத்து தானே

வள்ளலை இவ்விதம் காணே - இது

வரிசை நபிமார் நிலையிது தானே –(மெய்ஞானத் தெளிவு)

வையமதில் பல தோற்றம்

வகை வகையாய்த் தெரிசிக்கில் நாற்றம்

சுத்தமெய்யைத் தெரிசிக்கில் மாற்றம்

சொல்ல யாருண்டும் பலஹுவகுல்லி – (கல்வத்து நாயகம்)

கோலங்கள் கொண்டதெல்லாம் குதாயன்றி வேறுமுண்டோ

ஆலமெல்லாம் ஒன்றாகும் அவனன்றி வேறே இல்லை

தாலத்தில் அவன் போல் இல்லை ஷய் அவன் ஆனதாலே

ஹாலதை அழகாய்க் காண கருணை செய் வாஸியே நீ

(கீழக்கரைத் தைக்கா ஸாஹிபு அப்பா)

வுஜூதிய்யாக்களின் கொள்கைப்படி சர்வமும் பிரம்ம மயம் என்றால் “அல்லாஹ் அல்லாத்தது“ இருக்க முடியாதே. அப்படியாயின் “அல்லாஹ் அல்லாததை வணங்க வேண்டாம்“ என்று அல்லாஹ் குர்ஆனில் அறிவிக்கக் காரணமென்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே.

தத்துவங்களின் தேட்டத்திற்கும் விருப்பத்திற்கும் தக்கவாறு சிருஷ்டி கர்த்தாவிடமிருந்து அறிவின் கோலங்கள் அருள்மாறிகளைப் பெறுகின்றன. அவைகள் வெளிப்பட ஹக்கு தன்னில் இருந்து ஓர் சம்மந்தத்தை அளிக்கும்காலை அவைகள் கோலங்களாகத் தோன்றுகின்றன.

அவைகள் வெளிரங்கத்தில் இன்மையாகவும், ஹக்கின் அறிவில் தரிப்பட்டதாயுமிருக்கின்றன. ஆகையால் வஸ்துக்கள் இன்மையினின்றும் வெளிப்படமுடியாது. ஹக்குடைய உள்ளமையிலிருந்துதான் வஸ்துக்கள் தோன்றுகின்றன.

ஹக்குடைய அறிவில் அவைகள் உள்ளமையுடனிருந்தன. அவைகள் வெளிப்படையில் ஹக்குடைய உள்ளமையுடனேயே தோன்றியிருக்கின்றன. ஆனால் தங்களின் சுயமான வெளிரங்கத்தைப் பற்றிய அவைகளின் அறிவைப் பொறுத்தவரையில் அவைகள் வெளிப்படையில் ஹக்குடைய உள்ளமையெனும் வாடையைக் கூட முகர்ந்ததில்லை.

ஆதலின் “குன்“ “உண்டாகு“ என்ற ஹக்கின் கட்டளை இன்மையின்பால் அன்று. ஹக்கின் அறிவில் தரிப்பட்டிருந்த கோலங்களை நோக்கியே.

தோன்றிய வஸ்துக்கள் ஒவ்வொன்றும் ஹக்கின் அறிவில் தரிப்பட்டிருந்த ஒரு பண்பின் கோலம். பிரபஞ்சம் முழுவதும் ஏக அறிவின் கோலம். ஏக அறிவே நூரே முஹம்மதிய்யா. அல்லாஹ்வுடைய சம்பூரண பிரதிபலிப்பு நூரே முஹம்மதிய்யா.

நூரே முஹம்மதிய்யாவின் பிரதிபலிப்பு பிரபஞ்சம் முழுவதும் ஆகும். "நான் அல்லாஹ்வின் நூரினின்றுமுள்ளவன். வஸ்துக்கள் அடங்கலும் என்னுடைய நூரினின்றுமுள்ளது" என்ற நாயக வாக்கியம் இதனை உறுதிப்படுகிறது.

வெளியான பிரபஞ்ச வஸ்துக்கள் இருமுகங்களையுடையது. ஒன்று ஹகீகத்தாகிய அகமியம். மற்றொன்று தோற்றம். தோற்றமானது இடம்பாடான உள்ளமையும் அடிமைத்தனமுமாகும். இத்தன்மையை ஹக்கு என்று அழைப்பது "குப்ரு" ஆகும்.

மற்றது தோற்றங்களுக்கு மூலமான ஹக்குடைய உள்ளமையாகும். சுஹூதிய்யாக்களும், இஜாதியாக்களும் பிரபஞ்சத் தோற்றங்களைப் படைக்கப்பட்டவை "அல்லாஹ் அல்லாத்தது" எனக் கருதுகின்றனர்.

பிரபஞ்சத் தோற்றங்கள் ஹக்கின் அறிவில் தரிப்பட்டிருந்த தோற்றங்கள் என்று வுஜூதிய்யாக்கள் கருதி அவைகள் அல்லாஹ்விற்கு அன்னியமில்லை என்று கூறுகின்றனர். அப்படியாயின் அல்லாஹ் குறிப்பிடும் அல்லாஹ் அல்லாத்தது எது?

ஜீவ அகங்காரத்தை தோற்றுவிக்கும் அஞ்ஞானம்தான் அல்லாஹ் அல்லாத்தது. அஞ்ஞானம் காரணமாகவே ஜீவன் ஆணவம், கன்மம், மாயையில் சிக்குகிறது.

ஆணவம், கன்மம், மாயை இவற்றில் கட்டுண்ட ஜீவனை விடுவிக்கும் உயர்ந்த தொழில்தான் ஹக்குடைய தொழில். தூய்மையான பரிசுத்த ஆவியை மாசுபடுத்துவது ஹக்கின் தொழில் அல்ல. பரிசுத்த ஆவி என்றும் பரிசுத்த ஆவியே. அதனால்தான் இறைவன் அதனை பரிசுத்த ஆவி என்றும் தன்னுடைய ரூஹு என்றும் சிறப்பித்துச் சொல்கிறான். பரிசுத்த ஆவி அஞ்ஞானமற்றது. மாய்கையற்றது. பரிசுத்த ஆவியில் தங்களை அர்ப்பணம் செய்து கொண்டவர்களை ஷைத்தான் கெடுக்க முடியாது.

ஏனென்றால் அஞ்ஞானமற்ற பரிசுத்த ஆவியை அஞ்ஞானமே வடிவமான ஷெய்தான் அணுக முடியாது.அஞ்ஞானமே ஷைத்தான் ஆனபடியால் அஞ்ஞானம்தான் அல்லாஹ் அல்லாத்தது. அல்லாஹ் அல்லாத்தது நம் சிந்தையில் புகுந்து விட்டால் ஜீவ அகங்காரம் புகுந்து விடும்.

ஜீவ அகங்காரத்தின் காரணமாகவே மனிதர்களில் அநேகர் நபியவர்களை விரோதித்துக் கொண்டார்கள்.

وَكَذَٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ عَدُوًّا شَيَاطِينَ الْإِنسِ وَالْجِنِّ يُوحِي بَعْضُهُمْ إِلَىٰ بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُورًا ۚ

குர்ஆன் 6:112: “இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதர்களிலும், ஜின்களிலும் ஷைத்தான்களை விரோதிகளாக நாம் ஆக்கியிருந்தோம்....“

மனிதர்கள் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட ஜீவ அகங்காரத்தை ஒழிக்க வேண்டுமென்றால் அல்லாஹ் அல்லாதது சிந்தையில் புகவிடாமல் தடுக்க வேண்டும்.

அல்லாஹ் அல்லாதது சிந்தையில் புகவிடாமல் தடுக்க வேண்டுமென்றால் சர்வத்தையும் பிரம்ம மயமாகப் பார்க்கவேண்டும். இந்த உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையிலேயே நாம் “லாஇலாஹ இல்லல்லாஹ்“ என்ற கலிமாவை – நமது மூல மந்திரத்தை –திக்ராக செய்துவர வேண்டும்.

திக்ருக்கு உரியவனை அடைவதே திக்ரின் நோக்கம். திக்ரு செய்பவான் அழியாமல் திக்ருக்கு உரியவன் கிடைக்க மாட்டான். அல்லாஹ் அல்லாதவைகள் சிந்தையில் புகவிடாமல் தடுத்தால்தான் திக்ருக்கு உரியவனை அடைய முடியும்.

தியானத்தில் தன்னை அழித்துவிடல் என்பதின் கருத்து என்னவென்றால், தியானிப்பவன் ஜீவ அகங்காரத்தை அழித்துவிடல் என்பதே. ஜீவ அகங்காரம் அழிந்துவிட்டால் அஞ்ஞானம் உட்புக முடியாது. ஏக அறிவு பிரகாசித்துவிடும். ஏக அறிவில் தரிபட்டு ஏகனை அடைவதே திக்ரின் நோக்கமாகும்.

எனவே, அல்லாஹ் அல்லாதவைகளை நீக்காமல் அல்லாஹ்வை அடைய முடியாது. திக்ரில் ஐம்புலன்களை அடக்கிவிட்டால் மனம் ஒடுங்கிவிடும். மனம் அழிந்துவிட்டால் ஏக அறிவு பிரகாசித்துவிடும்.

“லாஇலாஹ இல்லல்லாஹ்“ என்ற திக்ரில் லாஇலாஹ“ என்பதில் அல்லாஹ்வைத் தவிர மற்றெல்லாவற்றையும் நீக்கிவிட வேண்டும். “இல்லல்லாஹ்“வில் அல்லாஹ்வை மட்டும் தரிபடுத்த வேண்டும். நாவு மட்டும் அல்லாஹ் என்ற திக்ரை சொல்லி கவனமெல்லாம் அல்லாஹ் அல்லாதவைகளில் இருந்தால் அத்திக்ரால் பூரண பலன் கிடைக்காது. திக்ரின் பக்குவத்தை உண்டாக்கிக் கொடுப்பவர்கள் ஷரீஅத்தைப் பேணும் காமிலான ஷெய்காகவே இருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தாரில் காமிலான ஷெய்கு இருப்பது ஒரு உம்மத்தில் நபி இருப்பதைப் போன்றதாகும். நபிமார்கள், ஒலிமார்கள், காமிலான ஷெய்குமார்கள் இவர்கள் போதனையைப் பின்பற்றி நடக்கும் அல்லாஹ்வின் நல்லடியார்கள். இவர்கைள ஷைத்தான் கெடுக்க முடியாது.

قَالَ رَبِّ بِمَا أَغْوَيْتَنِي لَأُزَيِّنَنَّ لَهُمْ فِي الْأَرْضِ وَلَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ. إِلَّا عِبَادَكَ مِنْهُمُ الْمُخْلَصِينَ

குர்ஆன் 15:39,40 : `றப்பே! என்னை நீ வழிகேட்டில் விட்டுவிட்டதால் நான் அவர்களுக்கு (ஆதமுடைய சந்ததிகளுக்கு) இவ்வுலகில் (வழிகேட்டைத் தரும் அனைத்தையும்) அவர்களுக்கு

அழகாகத் தோன்றும்படி செய்து அவர்கள் அனைவரையும் வழி கெடுத்து விடுவேன். அவர்களில் அந்தரங்க சுத்தியுள்ள உன் நல்லடியார்களைத் தவிர."

إِنَّ عِبَادِي لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطَانٌ إِلَّا مَنِ اتَّبَعَكَ مِنَ الْغَاوِينَ

15:42: "நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை. உன்னைப் பற்றி வழி கெட்டவர்களைத் தவிர என்று கூறினான்."

அஞ்ஞானம்தான் அல்லாஹ் அல்லாத்தது. அஞ்ஞானத்தின் காரணமாகவே மனிதன் ஹக்கிற்கு அன்னியமாகத் தனக்கொரு உள்ளமையை ஏற்படுத்திக் கொண்டு தன்னையும் பிரபஞ்ச வஸ்துக்களையும் ஹக்கிற்கு அன்னியமாகக் காண்கிறான்.

மனிதன் அஞ்ஞானத்தைப் போக்க வேண்டுமானால் தன்னையும் சர்வத்தையும் நாம ரூபத்தில் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் அறிவின் கண்கொண்டு சர்வத்தையம் பிரம்ம மயமாகப் பார்க்க வேண்டும்.

மனிதன் பிறக்காதிருக்க வேண்டுமானால் இறக்காதிருக்க வேண்டும். இறக்காதிருக்க வேண்டுமானால் இனிப் பிறக்காதிருக்க வேண்டும். இனிப் பிறக்காதிருக்க வேண்டுமானால் தூலம் கடக்க வேண்டும். தூலம் கடக்க வேண்டுமானால் பிறவி என்னும் பாலம் கடக்க வேண்டும். பிறவிப் பாலத்தைக் கடந்தவனே பிறவியை ஒழித்தவன். பிறவியை ஒழித்தவனே இஸ்லாமானவன்.

பிறவியை ஒழிப்பதற்கு ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஃரிபத்து என்ற நான்கு நிலைகளிலும் மனிதன் பரிபூரணத்தைப் பெறவேண்டும். பெருமானாரின் உபதேசங்கள் ஷரீஅத்தாகும். அவர்களது செயல் தரீகத்தாகும். அவர்களது சொந்தநிலை ஹகீகத்தாகும்.

"அஷ்ஷரீஅத்து அக்வாலி, அத்தரீகத்து அப்ஆலி, வல் ஹகீகத்து அஹ்வாலி"

என்பது நாயக வாக்கியம். சர்வத்தையும் பிரம்ம மயமாகப் பார்ப்பவனே இம்மூன்று நிலைகளிலும் சித்தி பெற்று மஃரிபா என்ற ஞானத்தை அடைய முடியும் என்பது வுஜூதிய்யாக்களின் கொள்கையாகும்.

ஷரீஅத்தில் ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்ப்பது மூலம் பாவத்தை விட்டு நீங்குவதற்கு மனிதனுக்கு வழி ஏற்படுகிறது. தரீகத்தில் துர்நடத்தை நீங்கி நற்குணம் ஏற்படுகிறது. முதலிரண்டையும் பிரயாசைப்பட்டுக் கைக் கொண்டாலும் மூன்றாவது நிலையை அடைவது சாதாரணக் காரியமல்ல.

ஜீவ அகங்காரத்தை தேகான்மா புத்தியைப் போக்குவதற்கு இறைஅருளும் காமிலான ஷெய்கின் வழிகாட்டலும் தேவைப்படுகிறது. பெருமானாரின் சொல்முறை, செயல்முறை,

அவர்களின் சொந்தநிலை இவைகளையே காமிலான ஷெய்கு சிஷ்யர்களுக்கு வழிகாட்டுகிறார். இது அல்லாஹ்வின் அருட்கொடை. அதனை அவன் நாடியவர்களுக்கே அளிக்கிறான்.

“யா அல்லாஹ் நீ யாருக்கு அருட்கொடை அளித்தாயோ அவர்கள் வழியில் என்னை நடத்துவாயாக! உனது கோபத்திற்கும், சாபத்திற்கும் உள்ளானவர்கள் வழியில் அல்ல என்பது நம்முடைய நிரந்தர பிரார்த்தனையாகக் குர்ஆனின் தோற்றுவாயாகிய அல்ஹம்தில் அல்லாஹ் அமைத்திருக்கிறான்.

ஜீவ அகங்காரத்தை ஒழித்தவர்களே அல்லாஹ்வின் அருட்கொடையைப் பெற்ற நல்லடியார்கள். ஜீவ அகங்காரத்தில் தங்களைத் தரிபடுத்திக் கொண்டவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளானவர்கள்.

அஞ்ஞானத்தின் காரணமாக இபுலீஸ் ஜீவ அகங்காரத்தில் தரிபட்டு வழிகேட்டை அடைந்து அல்லாஹ்வின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகினான். அவனைப் பின்பற்றுபவர்களும், அல்லாஹ்வின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகி நரகத்தையே அடைவார்கள் என்று அல்லாஹ் குர்ஆனில் எச்சரித்துள்ளான்.

وَإِنَّ جَهَنَّمَ لَمَوْعِدُهُمْ أَجْمَعِينَ. لَهَا سَبْعَةُ أَبْوَابٍ لِّكُلِّ بَابٍ مِّنْهُمْ جُزْءٌ مَّقْسُومٌ.

15:43,44: “நிச்சயமாக (உன்னைப் பின்பற்றும்) அனைவருக்கும் நரகம் அவர்கள் வாக்களிக்கப்பட்ட இடமாகும். அதற்கு ஏழு வாசல்கள் உண்டு. அவ்வாசல்களில் ஒவ்வொன்றும் பங்கிடப்பட்ட (தனித்தனிப்)பிரிவினர்க்கு உரியதாகும்.“

ஜீவ அகங்காரத்தை ஒழித்து அல்லாஹ்வின் அடிமையாகத் தங்களுக்கொரு உண்மையை ஹக்கிற்கு அன்னியமாகத் தரிப்படுத்தி ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்த்து பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடிப்பவர்கள் அல்லாஹ்வின் அருளால் சுவன பதவியைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஹக்கிற்கு அன்னியமாகத் தங்களுக்கென்று ஓர் உள்ளமையை ஏற்படுத்திக் கொள்ளாமல் ஹக்கின் உள்ளமையில் தரிபட்டு ஜீவ அகங்காரத்தை ஒழித்து ஏவலை எடுத்து, விலக்கலைத் தவிர்த்து பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடிப்பவர்கள் அல்லாஹ்வின் அருளால் சுவர்க்கத்திலும் மேலான பதவியாகிய அல்லாஹ்வின் தரிசனத்தைப் பெற்று அவனில் ஐக்கியமாகி விடுகின்றனர்.

وَعَدَ اللَّهُ الْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ جَنَّاتٍ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا وَمَسَاكِنَ طَيِّبَةً فِي جَنَّاتِ عَدْنٍ ۚ وَرِضْوَانٌ مِّنَ اللَّهِ

أَكْبَرُ ۚ ذَٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ

குர்ஆன்: 9:72: “மூமினான ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் சுவனபதவிகைள வாக்களித்துள்ளான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். (அந்த) நித்திய சுவனபதிகளில் அவர்களுக்கு உன்னத மாளிகைகள் உண்டு. இவற்றிலெல்லாம் மிகவும் உயர்ந்த இன்பம் அல்லாஹ்வின் திருப்பொருத்தமாகும். அதுவே மகத்தான பெரும்பாக்கியமாகும்.“

மனிதன் இரண்டு ரூஹுகளால் ஆனவன். 1. ஹக்கினால் ஊதப்பட்ட ரூஹு 2. “குன்“ என்ற ஹக்குடைய கட்டளையால் ஆன ரூஹு. ஹக்கினால் ஊதப்பட்ட ரூஹு சரீராதிகளின் சம்பந்தத்தினால் பல்வேறு ஆன்மாக்களாகப் பிரதிபலித்தபோதிலும் சரீராதிகளின் தன்மைகளை ஏகஆன்மா பெற்றுக் கொள்வதில்லை. சூரியன் பல்வேறு வஸ்துக்களின் மீது பிரகாசித்த போதிலும் அவ்வஸ்துக்களின் தன்மைகளை சூரியன் பெற்றுக் கொள்வதில்லை.

“குன்“ என்ற கட்டளையால் ஆன ரூஹு சரீராதிகளின் சம்மந்தத்தைப் பெற்றுக் கொள்கிறது. இதனால் ஒற்றைப்பட்ட இந்த ரூஹுகள் சரீராதிகளின் சம்பந்தத்தால் ஒன்றொன்றுக்கொன்று முரண்பட்டுக் கொள்கிறது.

ஞானவான்கள் ஹக்கினால் ஊதப்பட்ட ரூஹை பரமாத்மா என்றும், “குன்“ என்ற கட்டளையால் ஆன ரூஹை ஜீவாத்மா என்றும் அழைக்கின்றனர். வுஜூதியாக்கள் முந்திய ரூஹை “நான்“ என்கின்றனர். இஜாதியாக்களும், சுஹூதிய்யாக்களும் பிந்திய ரூஹை “நான்“ என்கின்றனர்.

இஜாதியாக்களும், சுஹூதிய்யாக்களும் இரு உள்ளமையை ஸ்தாபிக்கின்றனர். ஒன்று ஹக்குடைய உள்ளமை. மற்றது கல்குடைய உள்ளமை. வுஜூதிய்யாக்கள் ஹக்குடைய உள்ளமையை மட்டும் ஸ்தாபிப்பதால் அவர்கள் ஜீவாத்மாவை ஏக ஆன்மாவின் கருவியாகக் கருதுகின்றனர்.

இஜாதியாக்களும், சுஹூதிய்யாக்களும் சுவர்க்கத்திற்கு மேல் மனிதனுக்குப் பதவியில்லை என்று கருதுவதால் இவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஜீவாத்மா சுவர்க்கத்தையே அடைகிறது. வுஜூதிய்யாக்கள் பரிசுத்த ஆவியை “நான்“ என்று அபிமானிப்பதால் பரிசுத்த ஆவியுடன் ஜீவாத்மா ஐக்கியமாகி ஹக்கனில் ஒன்றிப்பதையே வுஜூதிய்யாக்கள் சுவர்க்கத்திலும் மேலான இன்பமாக கருதுகின்றனர்.

ஷரீஅத்தின் சட்டதிட்டங்கள் சரீரத்தைக் கொழுகிய ஜீவாத்மாவிற்கே அல்லாது ஏகாத்மாவிற்கு அல்ல. வுஜூதிய்யாக்கள் கொள்கைப்படி ஜீவாத்மா, பரமாத்மாவில் ஒன்றிக்க வேண்டுமானாலும் சரி அல்லது இஜாதிய்யாக்கள், சுஹூதிய்யாக்கள் கொள்கைப்படி ஜீவாத்மா சுவர்க்கத்தை அடைய வேண்டுமானாலும் சரி ஜீவாத்மா, ஷரீஅத் சட்டங்களைக் கடைபிடித்தே ஆக வேண்டும்.

இல்லையேல் ஜீவ அகங்காரம் உடையோர் தௌஹீதில் ஒன்றிக்க முடியாது. ஏகன் ஜனாபினில் சேர முடியாது என்பதைக் காயல்பட்டினம் மெஞ்ஞான சொரூபர் அஷ்ஷெய்கு உமர் ஒலியுல்லாஹ் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருப்பதை இங்கே குறிப்பிடுகிறோம்.

"கல்பைக் கழுகினாலே கரைசேரலாம்

கையைக் கழுகினதால் கரைபோமோ

கல்பதிலே ஒரு நாளைக்கு அறுபது

ஹக்கன் திருநோக் குண்டாகு மென்றார் நபி

மல்லான போரும் கிபுறும் ஹஸதையும்

மாற்றான் உண்டாக்கும் வஸ்வாசு அடங்கலும்

இல்லாமல் ஆக்கியே ஏகன் கிருபையால்

எப்போதும் தவ்ஹீதால் துப்புரவாகவே

அம்மா றத்தெனும் நப்ஸானதின் குணம்

அமலும் தமவும் கலபும் ஷஹ்வதும்

எம்மாத் திரமாகிலும் இருந்தாலுமே

ஏகன் ஜனாபினில் சேரஒட்டாது காண்"

சுவர்க்கத்திலும் மேலான இன்பம் ஹக்கனுடன் ஒன்றிப்பதுதான் என்பதை கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

"இம்மையின் சுகபோகம் ஏமாற்றமளிக்கும் பண்பை உடையவை. ஆகையால் அவற்றின் மீது என் உள்ளம் பிணைந்து கொள்ளவில்லை. அதை உறுதியுடன் பற்றிக் கொள்ள என்மனம் இணங்கவில்லை.

மறுமையைப் பற்றி சிந்தித்தேன். அதிலுள்ள குறைகளும் எனக்குப் புலப்பட்டன. அதுவும், ஒருசமயம் இல்லாதிருந்து பின் தோன்றியதுதான். இந்த வகையில் இம்மை, மறுமை இரண்டும் சமமானதே.

இறைவன் மறுமையிலும், கண்களுக்கும் மற்ற புலன்களுக்கும் இன்பமூட்டும் சம்பத்துகளைப் படைத்துள்ளான். ஆகவே தூய உள்ளம் ஆசிக்கும் கருணையாளனிடமே திரும்பி விட்டேன். அதுவே அவனது திவ்விய தரிசனமாகும்." இருப்பினும் இறைவனின் தெரிசனத்தை ஷரீஅத்தின் அநுஷ்டானமின்றி அடையக்கூடாது என்று கௌதுல் அஃலம் வலியுறுத்துகிறார்கள்.

ஷரீஅத்தை கடைப்பிடிக்குமுன் இறைவனின் தரிசன பாக்கியம் பெறுவதில் முரீது விரும்பினால் ஷரீஅத்தை அனுசரிப்பதில் சோம்பல் காட்டிவிடுவான். அதனால் சம்பூரண

பேரின்பத்தை முரீது அனுபவிக்க முடியாமல் போய்விடும் என்று கௌதுல் அஃலம் முரீதுகளுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

ஷரீஅத்தில் காமிலாய் மஃரிபத்தின் சாதனையைப் புரிய வேண்டும் என்று கீழக்கரை தைக்கா சாஹிபு அப்பா அவர்கள் தங்கள் முனாஜாத்து மாலையில் பின்வருமாறு பாடியுள்ளார்கள்.

“ஷரீஅத்தில் காமிலானோர் சருகாமல் நடந்து வந்தார்

தரீகத்திலானபேர்கள் ஜம்உமாய் பர்குமானார்

தரிபடும் ஹகீகத்தாலே தனியவன் லிகா உண்டாகும்

அரியவரம் மஅரிபத்தை அறிவிப்பாய் யாரபி ஏ“

அல்லாஹ்வின் உள்ளமையில் தரிபட்டு மெய்யாய் அவனில் மாய்ந்து கொண்டவர்களுக்கே தனியவன் லிகா உண்டாகும். அல்லாஹ்வின் திருப்பொருத்தமே சுவர்க்கத்திலும் மேலான இன்பம் என்று அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

அதனை அடைவதற்கு வழிகாட்டும் வுஜூதிய்யாக்களின் கொள்கையை ஞானநாதாக்கள் பின்பற்றி ஜெயம் அடைந்துள்ளனர். நாமும் அதனைப் பின்பற்றி ஜெயம் பெறுவோமாக.

ஜீவ அகங்காரத்தை ஒழித்து, ஹக்குடைய உள்ளமையில் தரிபட்டு பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைபிடித்து ஜெயம் பெற்றவர்களே அல்லாஹ்வின் கலீபாக்கள். அவர்களே இன்ஸான் காமில். அவர்களே சிர்ருள் இன்ஸான் ஆவார்கள்.

“ஆறாதாரங்கள் ஆறாகும்

ஆஞ்சையில் அறிவு விழிப்பாகும்

ஆஞ்சையில் அறிவு ஹயாத்தானால்

அவரே இன்சான் காமிலடி

அவர் சிர்ருள் இன்சான் ஆகுமடி“

## 10 வது அத்தியாயம்

### தெளிவான உண்மைகள்

அடியார்களின் நன்மை, தீமையான செயல்கள் யாவும் இறைவன் நாட்டத்தால் நடப்பவை. அதில் அடியானுக்கு யாதொரு தொடர்புமில்லை என்ற கொள்கையுடையோர் “ஜபரிய்யாக்கள்“

அடியார்களின் நன்மை, தீமையான செயல்களுக்கு அவர்களே பொறுப்பு. இவற்றில் இறைவன் நாட்டம் சம்பந்தப்படவில்லை என்ற கொள்கையுடையோர் “கத்ரிய்யாக்கள்“

அடியார்களின் செயல்கள் யாவும் இறைவன் நாட்டப்படி நடப்பினும் அதைச் செய்யும் முயற்சியில் அடியானுக்கு பங்குண்டு. ஆகையால் அவற்றின் பலாபலன்களிலும் அடியார்களுக்கு பங்குண்டு என்ற கொள்கையுடையோர் ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்.

ஜீவாத்மாவே நாம். ஜீவாத்மா சுதந்திரமுடையது என்ற கொள்கையுடையோர் இஜாதியாக்கள். ஏகான்மா சுதந்திரமுடையது. ஜீவாத்மா சுதந்திரமற்றது. ஜீவாத்மாவே நாம் என்ற கொள்கையுடையோர் சுஹுதிய்யாக்கள். ஏகான்மாவே நாம். ஜீவாத்மா ஏக ஆன்மாவின் கருவி என்ற கொள்கையுடையோர் வுஜூதிய்யாக்கள்.

“அக்லுல் அவ்வல்“ ஹக்கின் குணமாகவும், “அக்லுல் குல்லி“ அறிவின் குணமாகவும், “அக்லுல் மஆஸி“ தமோ குணமாகவும் இருக்கிறது.

உன்னில் ஊதப்பட்ட பரிசுத்த ஆகி துவம்பத இலட்சியார்த்தம், வஹ்தத் முஹம்மதிய்யா தத்பத இலட்சியார்த்தம். இவ்விரண்டும் அசிபத லட்சியார்த்தபடி ஒன்றே.

உலக முழுமையும் ஞானமொன்றாகவும் மார்க்கம் பலதாகவுமிருக்கிறது. ஞானத்திற்காக மார்க்கமேயல்லாது மார்க்கத்திற்காக ஞானமல்ல. எனவே எல்லா மார்க்கத்திலும் ஞானம்ஒன்றே.

மற்றவர்களை நேர்வழிகாட்டத் தோன்றிய நபிமார்கள், ஒலிமார்கள் யாவரும் தோன்றியது முதல் தங்கள் தெய்வீக பேரியல்பை உணர்ந்தே இருக்கிறார்கள். வாழ்வை அவர்கள் நாடகமாக நடிக்கிறார்கள். சிலகாலம் வரம்புக்குட்பட்ட மானிட வடிவத்தை எடுத்துக் கொள்கிறார்கள். உண்மையில் அவர்கள் எதிலும் கட்டுப்படாதவர்கள்.

தத்துவத்திற்கு விளக்கமாக சான்றோர்கள் இருக்கின்றனர். ஆனால் சிஷ்யர்கள் சான்றோரின் வடிவத்தை தத்துவமாக்கி விடுகின்றனர். பின் தத்துவத்தை மறந்துவிட்டு சான்றோரின் வடிவத்தை வழிபடத் தலைப்படுகின்றனர்.

ஆத்மா என்றும் அழியாதது. நாமந்தரித்த மனிதன் பிறக்கிறான். இறக்கிறான். ஆனால் அவன் ஆத்மா பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை.

சரீரத்தையும், சரீரத்தைக் கொழுகிய ஜீவனையும் நான் என அபிமானிப்பவன் துவைதி. ஆத்மாவை நான் என அபிமானிப்பவன் அத்வைதி.

முறியா ஒழுவும், பிரியா வணக்கமும் உடையது நடுத்தொழுகை. இதில் மனம் அழிந்து ஆன்மாக பிரகாசிக்கிறது.

குறிப்பிட்ட ஐங்காலத் தொழுகையில் அப்தாகிய ஜீவாத்மா, ரப்பாகிய பரமாத்மாவை தொழுகிறது. இத்தொழுகையில் அத்வைதி ஷரீஅத்தின் கட்டளைக்குக் கீழ்படிந்து அப்து என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு ஹக்கின் கருவியாக இருந்து தன்னுள் இருக்கும் தெய்வத்தைத் தொழுகிறான்.

இன்ஸான் எதார்த்தத்தில் மேலினும் மேலானவன். எப்பொழுது அவன் தன்னை ஜீவ அகங்காரத்திற்கு அடிமைப்படுத்திக் கொண்டானோ அப்போதவன் கீழினும் கீழாகி விட்டான். படைப்பிலேயே ஆக இழிவானவன் ஜீவஅகங்காரமுடையனே.

வல்ல இறைவனையும் நபிதனையும் நாடி வைய கோடி காலம் சுஜூது செய்த இபுலீஸ் ஜீவ அகங்கார மேற்பட்டதின் காரணமாக சுஜூது செய்ய வேண்டிய தருணத்தில் நமது பிதா ஆதமுக்கு சுஜூது செய்தானில்லை. அதனால் அவன் அல்லாஹ்வின் சாபத்திற்கு ஆளானான்.

உலகத்தை துறப்பதென்பது ஜீவ அகங்காரத்தை துறப்பதாகும்.

உன்னிலிருக்கும் அருள் குரு எழுந்திருந்தாலொழிய புறத்திலுள்ள குரு போதிப்பதெல்லாம் வீண். யார் மூலம் உனக்கு அருள் இறங்குகிறதோ அவரே உண்மையான குரு. அனுபவமே உண்மையான ஆசான்.

**சர்வமும் பிரம்ம மயம்.**

**முடிவுரை**

“இணங்கும் மெய்ஞானப் பேரின்பக் கடலின்

இன்னமுதெடுத்தெமக் களிப்போன்

பிணங்கிய கோச பாசமா மாயைப்

பின்னலைப் பேர்த்தெரிந்திடுவோன்

வணங்கிய தவத்தினோர்க் கருள்புரிய

வள்ளலாய் வந்த மாதவத்தோன்

குணங்குடி வாழு முஹையதீன் னாமமென்

குருபதஞ் சிரத்தின் மேற்கொள்வாம்“

வாசக அன்பர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்.

மனிதன் என்ன நோக்கத்திற்காக அல்லாஹ்வால் படைக்கப்பட்டுள்ளான் என்பதை இந்நூல் முகவுரையில் குறிப்பிட்டுள்ளேன். முகவுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கு விளக்கமாக இந்நூலை பத்து அத்தியாயங்களாகப் பிரித்து எழுதியுள்ளேன்.

மெய்ஞான பேரின்பம் ஒரு பெரிய கடல். அக்கடலில் நான் மூழ்கிக் குளித்தவனில்லை. அப்பேரின்பக் கடலின் கரையிலேயே நான் நிற்கிறேன்.

அந்த மெய்ஞானப் பேரின்பக் கடலில் மூழ்கி இன்னமுது எடுத்துத் தந்தவர்கள் ஞான நாதாக்கள். அவர்கள் நமக்கு அள்ளித்தந்த இன்னமுதை "சிர்ருள் இன்ஸான்" என்ற ஞானத் தட்டில் உங்கள் முன் வைத்துள்ளேன்.

தத்துவ ஞானம் பற்றி இஜாதியாக்கள், சுஹூதிய்யாக்கள், வுஜூதியாக்கள் இவர்கள் தரும் விளக்கம் மிகவும் அற்புதமானது. ஆராய்ச்சிக்குரியது. அவர்கள் தரும் விளக்கம் ஞான அகமியத்தை விளங்கிக் கொள்ள நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இருக்கிறது.

இஞ்ஞானம் ஒரு காலத்தில் மூடி மறைத்துப்பேசப்பட்டது. இருட்டில் பேசப்பட்டது. இரகஸியமாகப் பேசப்பட்டது. ஏனென்றால், அக்கால மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் இல்லை.

இந்த தத்துவ ஞானத்தை முதன் முதலில் பகிரங்கப்படுத்தி பேசியவர்கள் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆவார்கள்.

மெஞ்ஞான பேரின்பக் கடலில் பிரயாணம் செய்ய ஞானநாதாக்கள் தயாரித்த வுஜூதிய்யா, சுஹூதிய்யா, இஜாதிய்யா என்ற ஞானக் கப்பல்கள் உங்களை ஏற்றிச் செல்ல தயார் நிலையில் உள்ளது.

எந்தக் கப்பல் உங்களுக்கு இஷ்டமோ அந்தக் கப்பலில் அமர்ந்து தத்துவ ஞானக் கடலில் நீங்கள் பிரயாணம் செய்யலாம். அது உங்கள் இஷ்டம். ஆனால் தத்துவஞானமே இல்லை என்று சொல்லி தத்துவஞானக் கப்பலில் ஏறி பயணம் செய்ய மறுத்து விடாதீர்கள்.

அப்படி மறுத்தால் அது உங்களை நாஸ்திகக் கூட்டத்திலோ அல்லது எதுவுமே இல்லை என்ற சூனியவாதிகளின் கூட்டத்திலோ அல்லது பெயரளவிற்கு இஸ்லாம் என்று சொல்லிக் கொள்ளும் போலி மனிதர்களின் கூட்டத்திலோ உங்களை சேர்த்துவிடும்.

தியான அப்பியாசங்கள் செய்து ஞானம் எனும் புண்ணிய பூமியை அடைந்து அப்புண்ணிய பூமியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஞான சூரியனாகிய ஹக்கின் ஜமாலை நாம் இம்மையிலும் தரிசித்து மறுமையில் ஹக்கனைத் தெரிசித்து நித்தியானந்த சுகத்தைப் பெற்று சத்து, சித்து, ஆனந்தமயமாக சிரஞ்சீவியாய் நாம் என்றும் வாழ வல்ல இறைவன் நமக்கு அருள் பாலிப்பானாக! ஆமீன்.!

*ஹக்கு அல்ஹம்துலில்லாஹ்*

ஸல்லல்லாஹு அலா முஹம்மத், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

இங்ஙனம்,

**பூஅலி முஹம்மது யாஸீன் ஆலிம் சாஹிப்,**

கலீபத்துல் பாஸியத்துஸ் ஸாதுலி வல்காதிரி வனக்ஷபந்தி,

33, கலுங்கு சின்ன முகைதீன் தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி -5.

**ஞான அப்பியாசிகளின் சிந்தனைக்கு**

***C. மஹ்மூது சாஹிப், அதிராம்பட்டினம்.***

இன்சான் இரண்டு ரூஹுகளால் ஆனவன். 1. ஊதப்பட்ட ரூஹு 2. ஊதப்படாத ரூஹு. ஹக்கினால் இன்சானில் ஊதப்பட்ட ரூஹாகிய பரிசுத்த ஆவி இன்சானுக்கு சொந்தமானது. ஊதப்படாத "குன்" என்ற ஹக்குடைய கட்டளையிலான ஜீவாத்மா எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவானது.

பரிசுத்த ஆவி சர்வ வியாபகமானது. அகண்ட பரிபூரணத்தில் அது பரமாத்மாவாக இருக்கிறது. காந்தத்திற்கு நிகர் பரமாத்மா. ஊசிக்கு நிகர் ஜீவாத்மா. காந்தம் ஊசியைக் கவருவதுபோல், பரமாத்மா ஜீவாத்மாவை அதன் மயமாக்குகிறது. ஊசியை மண்மூடிக் கொண்டால் காந்தத்தால் ஊசி கவரப்படுவதில்லை. ஜீவாத்மாவை ஆசை, கோபம், இச்சை போன்ற உலக ஆசை என்னும் மண் மூடிக் கொண்டால் அது பரமாத்மாவால் கவரப்படுவதில்லை.

கலப்புத் தங்கத்திலுள்ள செம்பு, பித்தளை போன்றவைகளை நீக்கி சுத்த தங்கம் ஆக்குவதுபோல் ஜீவாத்மாவில் ஒட்டிய அஞ்ஞானக் களிம்பை போக்கி ஜீவாத்மாவை சுத்தப்படுத்தி ஏக ஆன்மாவில் ஒன்றிக்கச் செய்வது ஞான அப்பியாசிகளின் கடமையாகும். அதனை நிறைவேற்ற வேண்டிய கர்ம பூமி இவ்வுலகமாக இருக்கிறது.

மனிதன் ஏகனில் ஐக்கியப்பட பற்றற்ற கர்மம் செய்ய வேண்டும். பற்றற்ற கர்மத்தின் மூலமே ஜீவப் பிரம்ம ஐக்கியம் ஏற்படும். பற்றற்ற கர்மம் செய்வதற்கு ஒருவனுக்குத் தடையாயிருப்பது அவனது சுபாவ குணமாகும். மனிதன் முக்குணங்களால்ஆனவன். 1. சுபாவ குணம். 2. அறிவின் குணம். 3. ஹக்கின் குணம். சுபாவ குணம்,

மேய்ந்து திரியும் ஆடு, மாடுகளின் குணத்தையம், சீறிப்பாயும் துஷ்ட மிருகங்களின் குணத்தையும், ஊடு கலகம்செய்யும் இபுலீசின் குணத்தையும் பிரதிபலிக்கும். உண்ணல், உறங்கல், இனவிருத்தி செய்தல் ஆகிய ஆடுமாடுகளின் குணத்தில் வாழ்பவர்களும், மனிதரில் உண்டு.

கபடம் செய்து ஊடு கலகம் எழுப்பும் இபுலீசின் குணத்தையுடையவர்களும் மனிதரில் உண்டு. இவர்களெல்லாம் சுபாவ குணமாகிய தமோ குணத்தில் தங்களை அடிமைப்படுத்திக் கொண்டவர்கள்.

ஹக்குடைய ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்த்து பக்தி மார்க்கத்தைக் கடைபிடித்து நடப்பவர்களும் மனிதரில் உண்டு. இவர்கள் அறிவின் குணத்தில் தங்களை தரிபடுத்திக் கொண்டவர்கள்.

ஹக்கின் குணத்தைப் பிரதிபலிக்கும் பரிசுத்த ஆவியே “நான்“ என உணர்ந்து ஜீவ ஆத்மாவை பரிசுத்த ஆவியில் ஐக்கியப்படுத்தி பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடிப்பவர்களே மனிதர்களில தலைசிறந்தவர்கள்.

சிருஷ்டிகள், ஹக்குடைய சிருஷ்டி என்றும், ஜீவ சிருஷ்டி என்றும் இருவகைப்படும். பஞ்சபூதங்களால் ஆகிய பிரபஞ்ச சிருஷ்டி ஹக்கு படைத்தது. ஜீவ அகங்காரம், துவேஷம், அபிமானம், ஆசை இவை ஜீவனால் படைக்கப்பட்டது.

ஹக்குடைய சிருஷ்டி பிரளய காலத்தில் அழியும். அந்த அழிவை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நாம் எதிர்பார்க்க வேண்டிய கியாமநாளாகிறது, ஜீவ சிருஷ்டியும், ஜீவனின் கற்பனா உள்ளமையும் அழிந்து ஜீவன் ஏகனில் ஒன்றிக்கும் நாளாகும்.

மனித தேகம் அழியும் முன்பே இப்பதவியை மனிதன் அடைய பாடுபட வேண்டும். இதனை அடைய விரும்பும் ஞான அப்பியாசிகள் தன்னையும், ஹக்கையும் இவ்வுலக உண்மையையும், அறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வித்தைக்காரன் ஒருவன் மாஞ்செடியையும், மாம்பழத்தையம் அவன் ஜால வித்தையின் மூலம் தோற்றுவிக்கிறான். மாஞ்செடியும், பழமும் வெறுந்தோற்றம். நிலைத்து நிற்கக் கூடிய உண்மைப் பொருளில்லை. உண்மையில் இருப்பவன் வித்தைக்காரனே. இப்பிரபஞ்சம் ஜாலவித்தைக்காரனின் ஜால வித்தையின் தோற்றம்போல் ஹக்கினால் தோற்றுவிக்கப்பட்டது. ஹக்கு மெய்யானவன். அவனது “குன்“ என்ற கட்டளையால் ஆன இப்பிரபஞ்சம் நிலையானது அல்ல.

பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்த ஹக்கு தீப வெளிச்சத்தை போன்றவன். தீப வெளிச்சத்தில் ஒருவன் வேதநூல்களைப் படிக்கிறான். அதே வெளிச்சத்தில் மற்றொருவன் பொய்ப்பத்திரம் ஜோடிக்கிறான். தீப வெளிச்சமோ இவ்விரு செயல்களிலும் கட்டுப்படாதது. பிரபஞ்ச வஸ்துக்களின் செயல்களுக்கு ஹக்கு கட்டுப்பட்டவனில்லை.

நாம் ஒரு கனவு காண்கிறோம். கனவு காணும் வரை கணவு உண்மை. விழிப்பு ஏற்பட்டதும் கனவு பொய்யாகி விடுகிறது. விழிப்பில் காணும் இவ்வுலகம் பொய்யானது என்பதை ஞானம் உணர்த்தும் பூரண ஞானிகளுக்கு இவ்வுலகம் நீண்டதொரு கனவாகயிருக்கிறது. அஞ்ஞானிகளுக்கு இவ்வுலகம் சாஸ்வதமாகத் தென்படுகிறது.

மனிதன் தன் சரீரத்தையும், சரீரத்தைக் கொழுகிய ஜீவனையும் “நான்“ என்கிறான். மனிதன் நம்பும் இந்த “நான்“ ஞான விசாரணையில் பொய்யாகிவிடுகிறது.

மனிதன் நம்பும் “நான்“ வெங்காயத்திற்கு நிகரானது. வெங்காயத்தின் தொலியை உறித்துக் கொண்டே போனால் வெங்காயம் என்ற சொல்லுக்கு இலக்காக ஒன்றுமே எஞ்சி இருப்பதில்லை. அதுபோல் ஞான விசாரணையில் நாம் நம்பும் மனித சரீரமும், சரீரத்தை இயக்கும் ஜீவனும் “நான்“ இல்லை என் பரிசுத்த ஆவியே “நான்“ என்றும் விளங்கும்.

மனிதன் அஞ்ஞானத்தினால் மனித சரீரத்தையும், சரீரத்தைக் கொழுகிய ஜீவனையும் இவ்வுலகையும் அபிமானிக்கிறான். ஒட்டகம் தன் உணவாக முட்செடியைத் தின்னும் போது அதன் வாயினின்றும் ரத்தம் சிந்துகிறது. இருந்தாலும் ஒட்டகம் முட்செடியைத் திண்பதை விடுவதில்லை.

உலகத்தவர்கள் உலகப்பற்றால் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளாகினும் அவர்கள் உலகப்பற்றை விடுவதில்லை. மனதிற்கு அடிமையாக இருப்பவன் உலகப்பற்றுடையவன். மனதை அடக்கியாள்பவன் உலகப்பற்று அற்றவன்.

பூரண ஞானிகளுக்கு இவ்வுலகம் நலம் நிறைந்ததாகவே தென்படும். அவர்கள் இவ்வுலகில் ஆகிரத்திற்குரிய தங்கரிப்பை சேகரிப்பதில்லை. கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

அஞ்ஞானிகளோ இவ்வுலக வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வதிலேயே கருத்தாயிருப்பார்கள். அதனால் உலகப்பற்றுடையோருக்கு இவ்வுலகம் துன்பம் நிறைந்ததாகத் தென்படும்

உலகம் பூனையின் பல்போன்றது. பூனையின் பல் எத்தகையது என்பதை அதன் குட்டியைக் கேட்டால் அது கருணை வடிவமானது என்று சொல்லும். பூனையின் பல் எத்தகையது என்று எலியைக் கேட்டால் அதைவிடக் கொடியது ஒன்றுமே இல்லை என்று சொல்லும். உலகப்பற்றுடையவன் எலிக்கு நிகரானவன். சேற்று மீன் சேற்றில் புதையுண்டு கிடந்தபோதிலம் அம்மீனில் சேறுபடிவதில்லை. நிறைஞானிகள் சேற்று மீன் போன்றவர்கள்.

இதுவரை உலகம் பற்றிய உண்மையையும், தன்னைப் பற்றிய உண்மையையும், ஹக்கைப் பற்றிய உண்மையையும் விளங்கிக் கொண்டோம். இனி மனிதன் ஏகனில் ஒன்றிக்க என்ன செய்ய வேணடும் என்பதைக் கவனிப்போம்.

ஏகனில் மனிதன் ஒன்றிக்க ஞான அப்பியாசி அவன் கற்பனை செய்து கொண்ட ஐவகைப் பிராந்தியை (ஐவகை மனோ மயக்கத்தை) ஒழிக்க வேண்டும். ஐவகைப் பிராந்தியின் விபரமாவது:

1. இந்த உலகம் ஒரு தோற்றம் என அறியாமல் இந்த உலகம் நிலையானது போல நினைப்பது.

2. மனித உடலையும், உடலைக் கொழுகிய ஜீவனையும் நான் என நம்புவது.

3. ஜீவனே கர்த்தா, போக்தா என நம்புவது.

4. தனக்கன்னியமாய் இறைவனிருக்கிறான் என நம்புவது.

5. தன்னில் இறைவனில்லை என நம்புவது.

முதலிரண்டு மனோ மயக்கத்தை பற்றியும், அதைத் தவிர்ப்பது பற்றியும் மேலே விளக்கியுள்ளோம். மூன்றாவது மனோ மயக்கத்தை எப்படி தவிர்ப்பது என்பதை இங்கு கவனிப்போம். உடலும், உடலைக் கொழுகிய ஜீவனும் "நான் இல்லை" என்றாகும்போது நான் கர்த்தா, போக்தா என்று ஒருவன் கூறுவதற்கு இடமில்லை.

சத்தாது, நம்ரூது, பிர்அவ்ன் போன்றோர் நானே கர்த்தா, நானே போக்தா என்று ஜீவ அகங்காரத்தில் சொல்லி அவர்கள் அழிவுற்றதை குர்ஆன் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. சகல செயல்களுக்கும் செயல்கர்த்தாவாய் ஹக்கு இருக்கும்போது ஹக்கின் கருவியாகவே மனிதன் செயல்படுகிறான். ஹக்கிற்கு அன்னியமாக உள்ளமையுடைய ஒரு வஸ்து சுயேட்சையாயுமில்லை. ஒரு கற்பனைக் கீழுமில்லை என்பதை ஒருவன் விளங்கிக் கொண்டால் நான் கர்தாவுமில்லை. போக்தாவுமில்லை என்ற முடிவிற்கு வந்து விடுவான்.

4,5வது மனோ மயக்கத்தை எவ்விதம் தவிர்ப்பது? சிலந்தியின் வலை சிலந்தி பூச்சியின்றும் தோன்றிப்பிறகு அதனுள் மறைவது போல் இப்பிரபஞ்சத் தோற்றங்கள் ஹக்கின் அறிவில் தோன்றி தோன்ய இடத்திற்கே மீண்டு விடுகின்றன. ஒன்று என்ற இலக்கத்தைப் போட்டு அதற்கு அடுத்து சேர்க்கப்படும் பூஜ்யங்களுக்கெல்லாம் மதிப்பு ஏற்படுகிறது. ஒன்று என்ற இலக்கத்தை நீக்கிவிட்டால் பூஜ்யங்களுக்கு மதிப்பில்லை.

அதுபோல் ஹக்கின் அறிவில் தரிபட்ட சிபாத்து ஆகிய பண்புகளுக்கு ஹக்கு தன் உள்ளமையினின்றும் ஒரு சம்பந்தத்தை அளிப்பது மூலம் பூஜ்யங்கள் போன்ற பண்புகளுக்கு மதிப்பு உண்டாகிறது. ஒன்று என்ற இலக்கம் ஹக்காகவும், சிபாத்தாகிய பூஜ்யங்கள் பிரபஞ்சத் தோற்றங்களாகவும் இருக்கிறது.

இத்தத்துவத்தை ஒருவன் புரிந்து கொண்டால் தனக்கன்னியமாய்ப் பிரபஞ்சமில்லை. பிரமத்திற்கு அன்னியமாய்த் தானில்லை என்ற முடிவிற்கு வந்துவிடுவான். சர்வமும் பிரம்ம மயமாகக் காண்பான்.

சர்வமும் பிரம்மமயம் என்பதை தொகை வடிவத்தில் காண வேண்டும். வகை வடிவத்தில் அவை ஹக்கிற்கு அன்னியமில்லை என்பதை உணர்ந்து ஷரியத்தின் விதியை அனுசரித்து வகை வடிவங்களை பொறுத்தவரை மனிதன் நடந்து கொள்ள வேண்டும்.

சர்வமும் பிரம்மமயம் என்று மதயானையின் முன் நிற்கவோ, மலத்தை புசிக்கவோ கூடாது. இதனை ஷரீஅத் நமக்கு அனுமதிக்கவில்லை. இதுபோல் உலக விவகாரங்களில் ஷரீஅத்தின் விதிப்படி மனிதன் நடந்து கொள்ள வேண்டும். மனிதன் ஹயாத்தாயிருக்கும்வரை ஷரீஅத்தைப் பேணியே ஆக வேண்டும். இதை தைக்காசாகிபு அப்பா அவர்கள் தரீகத்து மாலையில் பின்வவருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"ஷரீஅத்தின்படி நடந்தவர்கள் சகல பாக்கியமும் பெற்றுக் கொள்வார். தரீகத்தின்படி நடந்தவர்கள் ஷஹகில் ஒன்றையும் சறுக விடார். சரியாக ரெண்டும் கொடு வந்தார்

ஷர்ரிலொன்றையும் செய்ய மாட்டார். மரியாதையுண்டு துனியாவிலும், மறுமை நாளிலும் மெனறறிவாய்"

சன்மார்க்கத்தின் கடமையான வணக்கங்களை விதியை சொல்லி சோம்பல் காட்டக்கூடாது என்று கௌதுல் அஃலம் அவர்கள் எச்சரிக்கிறார்கள். அவர்கள் சொல்வதாவது:

"இம்மையின் தன்மைக்குத் தக்கபடி மெய் வணக்கத்தில் ஈடுபடு! அமல் புரியாமல் அல்லாஹ்வின் கருணையில் நம்பிக்கை வைக்காதே! எல்லாம் விதிவசப்படி தான் நடக்கும். அமல் தேவையில்லை என்று நப்ஸு தூண்டும். அதற்கு பணிந்து விடாதே.

சோம்பேறிதான் விதி மீது பழி சுமத்துவான். செல்வம், வறுமை, வாழ்வு, மரணம் இவ்விஷயத்தில் தான் விதியை சாட்ட வேண்டும். சன்மார்க்கதின் கடமையான வணக்கங்களில் விதியை இழுக்கவே கூடாது."

ஞான அப்பியாசிகள் உள்ளமையில் ஒன்றுபட்டு, பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடித்து ஐவகைப் பிராந்தியையும் தவிர்த்துவிட்டால் அல்லாஹ்வின் அருளால் ஏகனில் ஒன்றிக்க முடியும். இதற்குரிய பக்குவத்தை வல்ல இறைவன் நமக்கு அருள்வானாக! ஆமீன்.

*முற்றும்.*